அடமானக் என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் ஒகஸ்ட் 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HomeLife Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5

# பாதுகாப்பான கனடிய நகரம் சார்லற்ரவுன்

## சிறந்த நகரம் வன்கூவர் - கருத்துக் கணிப்பு

கனடாவிலேயே பாதுகாப்பான நகரமாக பிரின்ஸ் எட்வேர்ட் தீவுகளிலுள்ள சார்லற்ரவுன் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கஸ் ரெய்ட் நிறுவனத்தால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே இம் முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோ வியாபார முயற்சிகளுக்கான சிறந்த நகரமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வாழக்கூடிய மிகச்சிந்த நகரமாக வன்கூவர் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. கனடா முழுவதிலுமுள்ள ஆயிரத்துக்கும் அதிகமானோரிடம் இக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

மொன்றியல் இரவு வாழ்க்கைக்கும் மிகச் சிறந்த உணவகங்களுமுள்ள நகரமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

வேலை தேடுபவரா நீங்கள்? உங்களுக்கான சிறந்த நகரம் கல்கரி. கருத்துக் கணிப்பில் 36 வீதமானோர் தொழில் தேடுவதற்கான மிகச்சிறந்த நகரமாக கலகரியைத் தேர்ந்துள்ளனர். இரவு வாழ்க்கைக்கான கேளிக்கைகள் குறைந்த நகரமாக வன்கூவரை மக்கள் தேர்வு செய்துள்ளனர். விளையாட்டு முயற்சிகளுக்கும், பொழுது போக்கிற்குமான சிறந்தநகரமாக ரொறன்ரோ தேர்வு செய்யப்படுகிறது.

வாழ்வதற்கான மிகச்சிந்த நகரங்களாக வன்கூவர் 13வீதமும் மொன்றியல் 11வீதமும் ரொறன்ரோ, கல்கரி, கியூபெக் 10வீதமாகவும் கருத்துக் கணிப்பில் தெரிவாகி உள்ளது


கனடியத் தமிழ் வானொலியின் நட்சத்திர திருவிழாவில் நுங்குச் சாவடி....

Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI Property Mortgage Canada Inc.

Cash Point Mortgages
Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E., Unit 202, Scar, ON

PMCI Property Mortgage Canada Inc.
Buying - Selling - Investing PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடு வாங்க, விற்க,
வீட்டிற்கான பெறுமதியை சட்டபூர்வமாக மதிப்பிட (Appraisal)
தயங்காமல் உடனே அழையுங்கள்
S.K. Bales CRA, MVA, CRES, FRI
Canadian Residential Appraiser, Real Estate Broker
416.801.3219 (Cell)
416.290.1200 (Bus), www.skbales.com
Century 21 Affiliate Realty Inc.

# Whatever your dream is ...

Whether your dream is to own a perfect house or starting a business, don't just keep dreaming about it, call us and we'll arrange the finance for you.



- *Up to 100% financing on purchase*
- *Discounted interest rates O.A.C*
- *Mtg. computer analysis - amortization schedules*
- *Second mortgages guaranteed for very low interest rates*
- *Debt Consolidation to 100% of value*
- *Mortgage investment opportunities*
- *Bank refusals restructured*
- *Real estate project (acquisition + development + construction)*
- *Residential, Commercial & Industrial*

LOOKING AFTER YOUR BEST INTEREST!





**SHANJITH (SHAWN) SATKUNANANTHAN**
**Senior Mortgage Consultant (AMP)**

**RAJANI SHANJITH**
**Mortgage Consultant**

**CENTUM** Advance Realty Inc
**(647)998.5450** / (416).290.1200

80, Corporate Drive Suite 208,
Toronto, ON M1H3S5
shanjith2002@yahoo.com
www.centum.ca

# ‘pongu’ singalam



த.சிவதாசன்

சிங்கள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததே அதிசயம் என்றார்கள். இப்போது அதைவிடப் பெரிய அதிசயம் இலங்கையில் நடைபெற்றிருக்கிறது.

ஆறென்றால் அது மலையில் ஆரம்பித்து கடலில் விழும். தமிழர் தேசத்திலோ போராறு கடலில் (மாவிலாறு) ஆரம்பித்து (குடும்பி) மலையில் முடிவடைந்திருக்கிறது.

பேரழிவுகளுக்கு முன் அதிசயங்கள் நிகழு மென்பார்கள். மஹிந்தவைப் புலிகள் ஏற்றி வைக்கப் புலிகளை மஹிந்த இறக்கி வைத் திருக்கிறார் குடும்பிமலையிலிருந்து. அதிச யமேதான்!

புலிகள் இறங்கினார்களா அல்லது இறக் கப்பட்டார்களா என்பது “குடும்பிமலை ரகசி யம்”. இப்போதைக்கு அறிய முற்படுவது தேவையற்றது.

எப்படியாயினும் புலிகள் தந்திரோபயமாகத் தப்பி மரபு வழிப் போரிலிருந்து மீண்டும் கரந்தடிப் போர் யுக்தியைக் கையாளப் போகிறார்கள் எனப்படுகிறது.

உண்மை அதுவாகவிருப்பினும் சிங்கள ஆட்சிக்கும் இராணுவத்துக்கும் இது ஓர் பாரிய வெற்றி. உள்ளூர் மக்களிடத்தும் சர்வதேச அரங்கிலும் புலிகளுக்கு இது ஒரு பெரிய தோல்வி.

சிங்கள ஆட்சியாளர்களுக்கு இது அரசியல் வெற்றியே தவிர இராணுவ வெற்றியல்ல என்கிறார் சர்வதேசப் புகழ் பெற்ற இரா ணுவஆய்வாளர் இக்பால் அத்தாஸ். இருக் கலாம். ஆனால் காலம் காலமாக தென்னி லங்கை ஆட்சியாளர்கள் இராணுவத்தைப் பாவித்து வருவதே அரசியல் வெற்றிக் காகத்தானே! மக்களின் அதிருப்தி, சரிந்து வரும் பொருளாதாரம், கட்சியுடைவு என்று பல வழிகளிலும் அதல பாதாளத்தை நோக்கி விழுந்துவிடத் தயாராகவிருந்த மஹிந்தவுக்கு குடும்பிமலையையே சஞ்சீவி யாகப் பெயர்த்துக் கொடுத்துக் காப்பற்றியி ருக்கிறார் அனுமார் சரத் பொன்சேகா. தென்னிலங்கை மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை இருவரும் காப்பாற்றியி ருக்கிறார்கள். அதற்கான வெகுமதியை மக்களிடமிருந்து ஏற்பதற்கு அவர்கள் தகுதியுடையவர்களே.

மாறாகப் புலிகள் மக்களுக்குக் கொடுத்த வாகுகுறுதிகளை நிறைவேற்றவில்லை. “ஒரு வருடமாகவே இப்படித்தான் எச்சரிக் கைகளை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் எதுவுமே செய்ய முடியாது“ என்று இராணுவ அதிகாரி கேலியாகப் பேசுகிற அளவுக்கு நிலைமைகள் இருக் கின்றன.

புலிகளைத் தெரிந்தவர்கள் வழமைபோற் சிரிப்போடு உதாசீனம் செய்கிறார்கள். பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அவர்கள் தயா ராகிறார்கள் என்பதிலும் இரண்டாம் அபிப் பிராயமில்லை.முன்பு பல தடவைகள் இதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். மக்கள் அவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக் கையும் அதுவேதான்.

ஈழத் தமிழர்களுக்கு அதுவே இறுதி நம் பிக்கையும்கூட. இலங்கை அரசுகளை நம்பி ஏமாந்தார்கள். இந்தியாவை நம்பி ஏமந் தார்கள். இறுதியாக சர்வதேசங்களை நம்பி மோசமே போய்விட்டார்கள்.

இந்த நிலையில் புலிகள் ஏதாவது செய்தே யாக வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

எங்கு எப்படி எப்போது என்பது மர்ம மாகவே இருந்துவிட்டுப் போகட்டும்.



ஆனால் மூதூர் கிழக்கு, சம்பூர், குடும்பி மலை என்று தமிழர் பாரம்பரிய பிரதேசங் கள் பறிபோய்க்கொண்டிருக்க இடம் பெயர்ந்த மக்கள் இன்னும் அரை வயிறு களோடு சில்லுக்கும் செல்லுக்கும் தப்பி நெடுங்காலம் வாழ முடியாது. அரசிடம் இருந்து இவர்களுக்கு நிவாரணம் கிடைக் காது. அவர்களை மீண்டும் அவர்களது நிலங்களிற் குடியேற்றுவது தமிழர் கடமை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அங்குள்ள மக்கள் ஒரு பேருண்மையை உணர வேண்டும். ஜே.வி.பி போன்ற தென்னிலங்கை இனவாதிகளின் (இவர் களை மார்க்சீயவாதிகள் என்றால் அது மேதை மார்க்ஸ் இற்கு இழுக்கு!) ஒரே நோக்கம் இலங்கை முழுவதையும் ஒரு பௌத்த சிங்கள நாடாக்குவதே. அவர்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் இந்தளவுக்கு அவர்களது திட்டங்கள் நிறைவேறியிருக் காது.

புலிகள் எந்தளவுக்கு கோமாளியான ராஜ பக்ஷவைப் பாவித்து தமது தனி ஈழத்தைப் பெற முயற்சித்தார்களோ அதே போன்று தான் ஜே.வி.பி. யினரும் ராஜபக்ஷவுடன் கூட்டணியமைப்பதன்மூலம் தமது திட்டங் களை நிறைவேற்ற முயற்சித்தார்கள். இன் றய கள நிலவரத்தின்படி ஜே.வி.பி. யினர் தமது முயற்சியில் வெற்றிபெற்றிருக்கிறார் கள் என்றுதான் கூற வேண்டும். வடக்குக் கிழக்குப்பிரிப்பு, கிழக்கின் வெற்றி எல்லாம் ஜே.வி.பி. யின் திட்டங்களே.

கிழக்கைக் கைப்பற்றியது இராணுவ வெற் றியல்ல அரசியல் வெற்றிதான் என்று ஒப்புக்குக் கூறினாலும் கிழக்கில் புலிகளின் வெற்றிடத்தையும், மக்களின் இடப்பெயர் வையும் சாதகமாக்கி சிங்களமயமாக்கல் துரிதப்படுத்தப் படுகிறது என்பதே உண்மை. கருணாவின்பிரிவிற்கு முன்னர் இது நினைத் துப் பார்க்கவே முடியாத ஒன்று! இப்பொ முது கருணா விரும்பினாலும் கிழக்கின் சிங்கள மயமாக்கலை நிறுத்த முடியாது. அப்படி முயற்சித்தால் சிங்கள இராணுவம் கருணா அணியைத் துவம்சம் செய்துவிடும். “வன்னிப் புலிகளை”த் துரத்துகிறோம் என்று மண்ணையே தாரை வார்த்துக் கொடுத் ததே கருணா அணியும் அதன் ஆதரவாளர் களும் சாதித்தது.

இந்தநிலையில் கருணா அணியினர் ஜனநா யக வழிக்குத் திரும்பித் தேர்தல்களிற் பங் கேற்றால் நிலைமை மாறும் என்று நினைக் கலாம். கிழக்கு மாகாணத் தமிழ் மக்களது உணர்வுகளை அரசு மதித்திருந்தால் மக்கள் பட்டினியால் வாடும்போது வெற்றி விழாக் கொண்டாடியிருக்க மாட்டார்கள். இராணுவ ஆட்சியோ ஜனநாயக ஆட்சியோ சிங்கள மயமாக்கல் அதி வேகத்தில் நடை முறைப்படுத்தப்படும். இதைத் தடுத்து நிறுத் தும் ஒரே வழி-கருணா அணியும் புலிகளும் MOU செய்து கொண்டு போரை உக்கிரப் படுத்துவதுதான்.

மிகவும் கோபப்படுகிறீர்கள் போலிருக்கிறது. மண்ணைக் காப்பாற்ற இதைவிட வேறேதும் வழியிருந்தால் சொல்லுங்கள்!

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்ததே தமிழரின் மொழியுரிமை, பிரதேச உரிமை வாழ்வுரிமைகளைக் காப்பாற்றிக்கொள்வ தற்காக. அவற்றை இழந்து பெறும் விடுத லைக்கு அர்த்தமில்லை.

■ ■ ■


# #1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.



PROPERTY MAX
Realty Inc. Realtor
**Mohan Subramaniyam**
Broker of Record
**416.321.2300**

New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers

**Search More Properties @**
**www.realestatebrokerofrecord.info**

WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.

**PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!**

# தண்ணீரோ தண்ணீர்



மாமூலன்


மத்தியூ 27:24
“அவன் தண்ணீரை எடுத்து மக்கள் கும்பலின் முன்னால் தனது கைகளைக் கழுவினான். இந்த மனிதனுடைய இரத்தத்தைப் பொறுத்தவரை நான் அப்பாவி. என்று சொன்னான்”.

யேசு என்னும் யீசஸை சிலுவையில் அறைந்து கொல்வதற்கு உத்தரவிட்டபின்பு பைபிளில்உள்ள பிலாத்து என்னும் மன்னர் பிரதிநிதி செய்தது இதுதான்.

“கங்கா இழக்கக்கூடாததை இழந்துவிடாள்”. வீட்டிற்கு வந்த மகளைப்பார்த்து ஒருகணம் யோசித்த அவளது தாய் அவளை இழுத்து வந்து உட்காரவைத்து ஒரு குடம் தண்ணீர் எடுத்து தலையில் ஊற்றுகிறாா்.

எல்லாம் போய்விட்டது. கவலைப்படாதே போ என்று அறிவுறுத்துகின்றாள். கழங்கம் கழுவுப்பட்டு விட்டது, எல்லாம் முடிந்து விட்டது என்கிறது. செயகாந்தனின் அக்கினிப் பிரவேசம் கதை.

இவ்வளவு வித்தைகள்செய்ய அப்படி என்னதான் இருக்கிறது இந்தத் தண்ணீரில்.




இறந்தவர்களைப் புதைத்துவிட்டு வந்தபின் கூட்டாக அனைவரும் குளிப்பதைப் பாரத்திருக்கிறோம்.அல்லது ஆற்றிலோ கடலிலோ குளத்திலோ குளித்துவிட்டு வீடு செல்லும் மரபு எமக்கு இருக்கிறது.

தமிழகத்தில் ஒரு மரபிருக்கறது. வெளியில் சென்றுவிட்டு வந்தால் காலைத் தண்ணீர் கொண்டு கழுவுவது.இது தவறாது நடக்கும்.

எமக்கு தெரியாத பைபிள் உலகிலிருந்து, பார்ப்பன மரபிலிருந்து எமக்குத் தெரிந்த தமிழ் மரபு வரை தண்ணீரால் கழுவுவது நடைமுறையில் இருக்கிறது.

ஆனால்...
இங்கு கனடாவில் வாழும் நாம் தான் அதைப்பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை.

கனடாவில் எமக்கிருக்கும் நெருக்கடியான வாழ்க்கை, ஆண்டுக்கு ஆறுமாதம் நிற்கும் குளிர் என்பன கை கழுவுவதை தடுக்கின்றன. கைகழுவுவதால் அனைத்துப் பிரச்



சினைகளும் தீரும் என்றில்லாவிட்டாலும் பல சிக்கல்கள் தீரும்.

பாருங்கள். சில கூடா உறவுகளைக் கை கழுவினாலே எவ்வளவுபிரச்சினைகள் தீரும்.

சில இடங்களில் பட்டால் கைகழுவமுடியாத படி சிக்கிச் சின்னாபின்னமாகிப் போய் நிற்கும் நிலையும் வரும்.

சில உறவுகள் நட்புகள் இருக்கின்றன. கைகழுவினால் நல்லம் என்று தெரிந்தும் கழுவிவிடமுடியாதவை.

இதைப்போலவே கை கழுவினால் நல்லம் என்று தெரிந்தும் பலரும் கைகழுவாமல் இருக்கிறோம். கை கழுவினால் எத்தனை கிருமிகளை எம்மைத் தழுவாமல் தடுக்கலாம்.

எங்களுக்கு பஞ்சி என்ற ஒரு சொல் இருக்கிறது. அதை மட்டும் நாங்கள் கைகழுவிவிடமாட்டோம். கை கழுவவும் பஞ்சி.

இனியும் எப்போதும் வரவிருக்கும் நோய்களிலிருந்து தப்புவதற்கு கை கழுவுவது தான் ஒரே சிறப்பான வழி.

தண்ணீருக்கு இருக்கும் சிறப்பு அது சோப்புடன் சேர்ந்து வேலை செய்வதேயாகும். சோப்புடன் தண்ணீர் வேலை செய்வதால் பெரும்பாலான எண்ணைத் தன்மைகளை அகற்றுகின்றது. அதனால் நம்பிக்கையுடன் தணீரைப் பயணன்படுத்தி சோப்பின் உதவியுடன் கை கழுவுங்கள். அனைத்து நோய்களும் - பரவும் நோய்கள் வராது.

சாப்பிடும்போது மட்டும் கை கழுவும் பழக்கம் இருக்கிறது. பலர் எண்ணுவது கை கழுவி விட்டு சாப்பிட்டால் போதும் கிருமி பரவாது . அந்த எண்ணம் பிழையல்ல. ஆனால் எவ்வளவு தூரம் நாங்கள் சரியாகக் கை கழுவுகிறோம் என்று படம் ஒன்றில் பாருங்கள்.

இப்படிக் கைகள் படத்தில் இருப்பது போல அழுக்காக இருக்கும் போதுதான் நாங்கள் சாப்பிடுகின்றோம்.

சாப்பிடும் போதாவது கையைக் கொஞ்சமாவது பஞ்சியில்லாமல் கையைக் கழுவுகிறோம் என்றும் மகிழ வேண்டியதுதான்.

மாறிப் பலரும் வேறுமாதரியும் நினைக்கிறார்கள். வாய் வழியாகத் தான் கிருமிகள் பரவும். அதனால் சாப்பிடும் போது மட்டும் கையைக் கழுவினால் போதும். இது ஒரு வகைக் கருத்து.

கிருமிகள் கையிலிருந்து தோல் வழியாக - அதாவது முகம் - மூக்கு- காது வழியாக உடலில் பரவிவிடும் என்பதை பலரும் மறந்து விடுகின்றனர்.

இன்று கனடாவில் பரவும் பல வகை நோய்கள் மிகவும் ஆபத்தானவை. அவற்றின் கிருமிகள் மிகவும் வீரியமிக்கவை. அப்படியிருக்கையில் கையைக் கழுவுவதில் பஞ்சி பார்க்கலாமா?

சரி பொது இடங்களில் பெரும்பாலும் கை கழுவும் இடம் கழிப்பறை அல்லது பொது நீர் வழங்கல் இடமாக இருக்கும்.
அவற்றில் கை கழுவினால் கை கழுவிய பின்பு அந்த அறையின் எந்தஒரு பகுதியையும் தொடாது வெளியேற தெரிந்திருக்க வேண்டும்.

கையைக் கழுவியபின் பலர் ஸ்ரைலாக பைப்பைப் பூட்டிவிட்டு வருவார்கள். அந்த பைப்பில் எத்தனைபேரின் அழுக்குக் கை பட்டு இருக்கும்? அதைத் தொட்டால் கை கழுவி என்ன பயன்.

அதனால் கை கழுவிய பின் பைப்பைப் பூட்டுவதற்கு கைதுடைக்கும் தாளைப் பாவியுங்கள். பாதுகாப்பாக இருக்கும்.

ஆனால்
கைதுடைக்கும் தாள் எடுக்கும் போது ஏதாவது அந்த தாள் இருக்கும் பெட்டி அழுத்தும் அல்லது உருட்டும் வகையாக இருந்தாலும் உங்கள் கையில் கிருமி தொற்றிக் கொள்ளும்.

இதெல்லாம் முடிந்தாலும் வெளியே வரும் போது கழிப்பறைக் கதவுகளை எப்படித் திறப்பீர்கள்?

கை கழுவாத பலரும் அந்தக் கதவைப் பிடித்துத் திறந்து போயிருப்பார்கள்.

நீங்களும் அதில் பிடித்தால்... அவர்கள் அனைவரது கிருமியையும் மீண்டும் தொட்டது போலாகும். எனவே கதைவையும் கை துடைக்கும் தாளினால் பிடித்து வெளியேறுவது நல்லது.

தேவை.

எல்லாவற்றுக்கும் பொதுவாக கை துடைக்கும் தாள் ஒன்றைத் தயாராக வைத்துக் கொண்டு - அதைப்பாவித்து வெளியே வருவதற்காக - கழிப்பறைக்குப் போவது புத்தியசாலித்தனம்.

முதல் சொன்ன கதைகளுக்கும் இந்தக் கை கழுவுவதற்கும் என்ன தொடர்பு என்று



சொல்லத் தேவையில்லை.

பாவமே போகுமாம்-பிறகு கிருமி போகாதா?

ஆனால் எப்படிக் கழுவினாலும் கூட இருக்கும் கிருமிகள் போகவே போகாது. பல பேருக்கு மனிசிமாரே கிருமிதான். கழுவவா முடியும் ? போகவா செய்யும்? அது தலைவிதியில் பிடித்த கிருமி!

■ ■ ■


**RAVI INCOME TAX SERVICE**

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
**416-262-4176**

- **Residential**
- **Commercial**
- **Invetment Properties**

**Ravi Paramu**
Sales Representative
**416•262•4176**
rparamu@hotmail.com
www.raviparamu.com

HomeLife GTA Realty Inc.
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963



# Credit Score
# உங்கள் கடன் புள்ளிகளை முன்னேற்றுங்கள்.

மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



மேலைத்தேய நாடுகளில் ஒருவனுடைய நேர்மையை கடன் புள்ளிகளைக் கொண்டே நிர்ணயிக்கின்றார்கள். நீங்கள் எவ்வளவுதான் பணம் வைத்திருந்தாலும் உங்கள் கடன் வரலாற்றை கொண்டே உங்கள் நம்பகத் தன்மை தீர்மானிக்கப்படுகிறது. இவர்கள் இவ் அளவிடும் முறையையே FICO Score என அழைக்கிறார்கள். கடன் பெறத் தகுதியான தன்மைகளிற்கான (Credit worthiness) சிறந்த குறிகாட்டிகளுள் ஒன்று கடன் புள்ளியாகும். கடன் புள்ளிகள் 300 - 900 வரை காணப்படுகின்றன. பாரிய கடன்களுக்காக பரந்தளவில் பயன்படுத்தப்படுபவை இந்த FICO (Fair, Issac & Co) புள்ளிகளாகும். இது Fair, Issac & Co என்ற கம்பனியால் உருவாக்கப்பட்ட புள்ளியிடும் முறையை (Scoring System) அடிப்படையாகக் கொண்டது. இப் புள்ளிகள் கடன் அலுவலகங்களான Equifax, Trans Union ஆகியவற்றினால் கடன் வழங்குவோருக்கு வழங்கப்படுகின்றது

நுகர்வோர் (Connsumers) தமது FICO புள்ளிகளை இக் கடன் அலுவலகங்களில் இருந்து பெறமுடியும். நீங்கள் கடன்வழங்குவோரை அணுகுவதற்கு முன்பாக குறைந்தது மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்கு முன்பாக இந்த புள்ளிகளை மீள் பார்வை செய்வதன் மூலம் உங்கள் கடன் புள்ளிகளை முன்னேற்றுவதற்கு போதுமான நேரம் காணப்படும்.

பொதுவாக நோக்கினால், கடனாகப் பெறுவதை நீங்கள் எவ்வாறு திருப்பிச் செலுத்துவீர்கள் என்பதை கடன் புள்ளிகள் அளவிடும். இது உங்கள் கடன் அறிக்கையில் காணப்படும் தகவலை அடிப்படையாகக் கொண்டது. உங்கள் கடன் புள்ளிகளை அதிகரிப்பதன் மூலம் அதிகளவு கடன் பெறத் தகுதியுடையவர்களாவதுடன், சிறந்த வட்டி வீதங்களும் உங்களுக்கு வழங்கப்படும்.

கடனை முன்னேற்றுவதற்கு, முதலாவது படி, உங்கள் புள்ளியினுள் என்ன நடக்கிறது என்பதை விளங்கிக் கொள்வதாகும். FICO புள்ளியை கணிப்பிடும் சரியான படிமுறைகள் பொதுமக்களுக்கு கிடைக்கக் கூடியதாய் இராவிட்டாலும், உங்கள் புள்ளியை நிர்ணயிக்கும் பிரதான அம்சங்கள் காணப்படுகின்றன.

உங்கள் கடன் பெறும் தன்மையை அதிகரிப்பது பற்றிய அதிக தகவல்களைப் பெறுவதற்கு பின்வரும் 6 விடயங்களை கவனத்தில் கொள்ளுங்கள்.

### 1.தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள் (Correct blatant mistakes)

உங்கள் கடன் புள்ளியானது, உங்கள் கடன் அறிக்கையில் காட்டப்படும். கடனுக்காக விண்ணப்பிப்பதற்கு பல மாதங்கட்கு முன்னரும் வருடத்திற்கு ஒரு தடவையும் திருத்தமான தன் மையை நோக்குவதற்காக இரு கடன் அலுவலகங்களில் இருந்தும் உங்கள் அறிக்கைகளை மீள்பார்வை செய்யுங்கள். உங்கள் கடன் அறிக்கையில், காணப்படும் ஒரு தவறான பதிவினை மாற்றுவதற்கு 30 நாட்களில் இருந்து 3 மாதங்கள் வரை செல்லும். சிலசமயம் இன்னும் அதிக காலமும் எடுக்கும்.

### கடன் அறிக்கையில் பின்வருவனவற்றைக் கண்காணியுங்கள்.

- தவறான தபால் முகவரிகள்
- தவறான சமூக பாதுகாப்பு இலக்கங்கள் (Social Security Number)
- பழைய தொழில் வழங்குனர்கள் (Employers)
- அடையாளத் திருட்டுக்கான (Identity theft) அறிகுறிகள்
- உங்கள் கடன் கணக்குகளில் தவறுகள் காணப்படலாம்.
- காலம் தாழ்த்திய கொடுப்பனவுகள்.
- அதிகாரபூர்வமற்ற விசாரணைகள் (Unauthorized hard inquiries)

கடன்கள் இன்னும் கட்ட வேண்டியவை என காட்டப்பட்டிருக்கலாம் அல்லது காட்டப்படத் தேவையில்லாத பழைய கடன்கள் (எதிர் மறையானவை (negatives)), 7 வருடத்திற்குப் பின் நீக்கப்பட வேண்டியவை காட்டப்பட்டிருக்கலாம். இதற்கு வங்குரோத்துக்கள் விதிவிலக்காகும். இவை 10 வருட காலங்களுக்கு நிலைத்திருக்கலாம்.



உங்கள் கடன் புள்ளிகளைப் பாதிக்கக் கூடிய காரணிகளையே நீங்கள் உங்கள் அறிக்கையில் பார்க்கப் போகிறீர்கள். அறிக்கையில் தவறுகள் எதுவும் இருக்கின்றதா என அவதானியுங்கள். உதாரணமாக உங்களதல்லாத கணக்குகள், தாமதித்த செலுத்துகைகள்-ஆனால் அவை உண்மையில் சரியான நேரத்தில் கட்டப்பட்டவையாக இருக்கும். நீங்கள் செலுத்தி முடித்த தவறுகளைத் (Errors) திருத்திய பின்னர், சிறந்த புள்ளிகளைப் பெறும் அதிவேக வழியானது, கடன் அட்டைகளில் மிகுதிகளை செலுத்தி முடிப்பதாகும். இதன் மூலம் உங்கள் புள்ளிகளை 20 ஆல் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

9ம் பக்கம் பார்க்க...



# தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்



கே. எஸ். பாலச்சந்திரன்

தர்மத்தின் வாழ்வுதன்னை சூது கவ்வும். மறுபடி தர்மம் வெல்லும் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால் அந்த பழமொழி பிழைத்த கதை எனக்குத்தான் தெரியும். என்னவோ தெரியவில்லை. பழமொழிகளுக்கும் எனக்கும் பொருத்தம் எட்டாம் இடத்தில். உதாரணமாக "குலைக்கிற நாய் கடிக்காது" என்று சொன்னவர்களைத் தேடிக்கொண்டு திரிகின்றேன். நாய்க்கடிக்கு ஊசிபோட்டுக்கொள்வது எவ்வளவு நோவைத் தரும் என்று அவர்களுக்கு தெரிய வேண்டும்.

"களவும் கற்று மற" என்று சொல்வார்கள். அதன்படியே நடக்கவென்று செய்த முதற் களவுக்கு பிறகு நான் மறக்க வேண்டிய தேவை இருக்கவேயில்லை. பொலிஸ்காரர் வீட்டில் பப்பாசிப்பழம் திருடமுற்பட்ட முதல் ஆள் நானாகத்தான் இருக்க வேண்டும். அகப்பட்ட கடைசி ஆளும் நானாகத்தான் இருக்கவேண்டும். அந்த மனுசனிடம் வேண்டியதை மறக்கிறதாவது..!

இதேகதைதான் நான்முதற்சொன்ன.."தர்மத்தின் வாழ்வு தன்னை.."பழமொழிக்கும் நடந்தது. அமெரிக்காவில் நான் பயணித்துக் கொண்டிருக்கும் நாளில் நியூ ஜேர்சி என்ற இடத்தில் தங்கியிருக்கும் போதுதான் இந்த அனுபவம் எனக்கு நிகழ்ந்தது.

நான் தங்கியிருந்த வீட்டுக்கார நண்பர் ஒரு நாள் அதிகாலையே என்னை "புறப்படுங்கள்.. புறப்படுங்கள்" என்று அவசரப்படுத்திக் கொண்டிருந்தார். "எங்கே" என்று கேட்டதிற்கு, "எல்லா இடங்களும் தான் பார்த்து விட்டீர்கள்.. அட்லாண்டிக் நகரம் பார்க்காவிட்டால் எப்படி" என்றார். "அங்கே அப்படி என்ன விசேஷமாக இருக்கிறது" என்றதிற்கு, "தருமன் நாடு, நகரம் எல்லா வற்றோடும் திரௌபதியையும் தோற்ற இடம்.. சூதாடும் இடங்கள் அங்கு தாராளமாக இருக்கின்றன... போய்ப்பார்த்து விட்டு வாருங்கள்" என்றார்.

நாடு,நகரம்மட்டுமல்ல,ஒரு குச்சொழுங்கை, மாட்டுக்கொட்டில் கூட என் பெயரில் இல்லாத துணிவு ஒரு பக்கம் இருக்க, மனையாட்டியும் அருகில் இல்லாத காரணத்தால், நண்பர் சொன்னபடி "பார்த்து விட்டுத்தான் வருவோமே" என்று புறப்பட்டேன். அவரே 50 டொலரும் தந்து, "சென்று வாருங்கள்..வென்று வாருங்கள்" என்று ரத்தத்திலகம் வைத்து அனுப்பாத குறையாக, வழி அனுப்பி வைத்தார்.

பஸ்ஸில் புறப்பட்டேன். 17 டொலர் கட்டணம். என்னோடு வந்தவர்கள் எல்லோருமே வயதில் மூத்தவர்களாக "சளா..சளா" பேச்சுக்களுடன் மகிழ்ச்சியாக இருப்பதாகப்பட்டது. எல்லோரும் சகுனிக்கு சொந்தக்காரராக இருந்ததினால், அதாவது சூதாட அடிக்கடி போவதினால் ஒருவரை ஒருவர் அறிமுகமானவர்களாக இருந்தார்கள். என்னை ஒருவரும் கண்டு கொள்ளவேயில்லை.

ஏறக்குறைய இரண்டு மணித்தியாலப் பயணத்தின் பின்னர் அட்லாண்டிக் நகரத்தினுள் நுழைந்த பஸ், நேராகச்சென்று, அங்குள்ள பல சூதாட்டமையங்களில் ஒன்றான "தாஜ் மகால்" இன் கீழ்த்தளத்தில் தரித்து நின்றது. எல்லோரும் இறங்கினார்கள்.





அப்போதுதான், பஸ் சாரதி ஓர் அறிவித்தல் செய்தார். அதாவது நாங்கள் பயணம் செய்வதற்கு செலுத்திய தொகையை மேலே போய், "தாஜ் மகால்" கவுண்டரில் பெற்றுக் கொள்ளலாம் என்றார். எனக்கென்றால் ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். இப்படியும் நல்லவர்கள் இருக்கிறார்களே !

மேலே போய் பணத்தைப்பெற்றுக் கொண்டு நகரத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு, பஸ் திரும்பவும் புறப்படும்போது போய்க்கொள்ளலாம் என்று முடிவு செய்தாகிவிட்டது.

மேலே போய் "கவுண்டருக்கு" கிட்டப்போவதிற்கிடையில் என்னுடன் வந்தவர்களைப் போல பலர் அங்கங்கே இடம் பிடித்துக் கொண்டு நாணயங்களைப்போடுவதும்,காசு இயந்திரங்களின் கைப்பிடிகளைச் சுழற்றுவதுமாக இருந்தார்கள். "கடகட" வென்று நாணயங்கள் விழும் சத்தம் எங்கும் கேட்டுக்கொண்டேயிருந்தது.

அதைத்தாண்டிப் போவதென்பது மிகக் கஸ்டமான காரியம் என்று பட்டது. அப்பேற்பட்ட தர்மனுக்கே அந்தச் சோதனை வந்தது என்றால் என்னைப்போன்றவனுக்கு சொல்லவா வேண்டும்.

சரி வந்தது தான் வந்தோம். ஏறக்குறைய இனாமாக திருப்பிக்கிடைத்த 17 டொலரை வைத்து விளையாடிப் பார்ப்போம் என்று மனக்குரங்கு ஏவி விட்டது.

நானும் இடம் பிடித்து, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எப்படிச் செய்கிறார்கள் என்று பார்த்து, இயந்திரத்தில் நாணயங்களைச் செலுத்தி விளையாடத்தொடங்கினேன்

ஆரம்பத்தில் போடுவதற்கு அதிகமாகவே திருப்பி வர, உற்சாகம் கரை புரண்டோடியது. நேரம் செல்லச்செல்ல போக்கும் வரவும் சமமாக இருந்து, முடியும்தறுவாயில் இருப்பும் காலியாகி கையில் ஒரேயொரு 25சத நாணயம்தான் மிச்சமாக இருந்தது.

நல்லகாலம்.. திரும்பி வருவதற்கும் சேர்த்துத் தான் பஸ் கட்டணம் அறவிட்டிருந்தார்கள். இல்லாவிட்டால் அந்த நகரத்தின் கடற்கரையில் உள்ள பலகைகள் அடுக்கிய பாதையில், உல்லாசப்பயணிகளை வைத்து தள்ளுகின்ற "ரிக்ஷா" போன்ற ஒன்றைத்தள்ளும் வேலை பார்த்துக் கொண்டிருப்பேன்.

பஸ் புறப்படுவதற்கு நிறைய நேரம் இருந்தது. மனம்தான் எப்படிப்பட்டது. அந்த 25 சத நாணயத்தடன் மீண்டும் களத்தில் குதித்தேன். உள்ள தெய்வங்களையெல்லாம் மனதில் நினைத்துக்கொண்டு அந்த நாணயத்தை இயந்திரத்தில் போட்டு, கண்ணை மூடிக்கொண்டு கைப்பிடியைச் சுழற்றினேன்.

நாணயங்கள் தொடர்ந்து விழுந்து கொண்டேயிருந்தது. அருகில் இருந்தவர்கள் திரும்பிப்பார்த்தார்கள். மொத்தம் 160 நாணயங்கள். அருகில் இருந்தவர் சொன்னார். "விழுந்ததை எடுத்துக் கொண்டு ஓடித் தப்பும்". நானாவது விடுவதாவது !

தொடர்ந்து விளையாடி கையில் 25 சதமும் இல்லாமல் வீடு வந்து சேர்ந்தேன்.

அப்போதுதான் ஒன்று ஞாபகத்திற்க வந்தது. அந்த 17டொலரை அவர்கள் திருப்பித் தராவிட்டால் நான் 33 டொலர்கள் உடனாவது திரும்பி வந்திருப்பேன். அவர்கள் மகா புத்திசாலிகள்.

தர்மத்தின் வாழ்வ தன்னை சூது கவ்வும். மறுபடியும் தர்மம் வெல்கிறதாவது....

■ ■ ■

கனேடிய தமிழ் கலைஞர்கள் கழகம்
பாரதி கலைக்கோயில் வழங்கும்

கே. எஸ். பாலச்சந்திரனின்

" அண்ணை றைற் "

முதலான தனிநடிப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு
இறுவட்டு (CD) வெளியீட்டு விழா

;

September 1st 2007
சனிக்கிழமை
மாலை 5.30க்கு

இடம்: செல்வச்சந்நிதி ஆலய மண்டபம்
No 1, Golden Gate Court
(Brimley Road and Golden Gate)
North of Ellesmere Road

தொடர்புகளுக்கு: (416)529-2821, (416)457-8424,
(416)400-6406, (416)520-9771,
(416)893-0399

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## இது எமக்கு முக்கியமான காலம்

ஒரு பெரும் வரலாற்றுத் துயரத்தின் கால்நூற்றாண்டு நினைவை யூலை மாத இறுதியில் மீட்டிப்பார்த்திருக்கின்றோம். நமது இனஎழுச்சிக்கும் புலப்பெயர்ச்சிக்கும் வித்திட்ட நிகழ்வு அது. அது ஓர் இனத்தின் துயரம் அல்ல.. ஒரு வரலாற்றின் துயரம். அதன் வடுக்கள் பாதிக்கப்பட்டவர்களின் இதயத்தில் மட்டுமல்ல... புதிதாகப் பிறக்கின்ற ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் பதியப்பட்டிருக்கின்றது. காலத்தால் மாறாத இந்தக் காயங்கள் ஒருபோதும் சுவடழிந்து போகாது.

வெப்பகாலத்தோடு வீசும் வெப்பமாக, தேர்தல் சூடும் பரவ ஆரம்பித்திருக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் மெல்ல மெல்ல வாக்கு வேட்டைகளில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர். தேர்தல் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆரோக்கியமானது. கடந்தகாலச் சேவைகளை மதிப்பிட்டு வருங்காலத் தலைமைகளைத் தீர்மானிக்கவேண்டியது மக்களின் பொறுப்பு. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண வேண்டியவர்கள் மக்கள். அவர்களுக்குப் பொய்ப்பொருளைப் புகட்டி வழிநடத்த முயல்வது தவறானது. மக்கள் தமது தெரிவை சுதந்திரமாக மேற்கொள்ள வேண்டும். பரப்புரைகளும், ஊடகங்களும் சொல்லும் கருத்தைத் தெளிவாக உள்வாங்கி தெரிவை மேற்கொள்ள வேண்டும்.

மாநில தேசிய அரசியல் தலைமைகள் கடந்தகாலங்களைவிட நம் சமூகத்திற்குள் அதிகமாகத் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றன. இதற்குப் பல காரணங்கள் கூறலாம். என்றாலும், பிற இனங்களைவிட தேர்தலில் அதிக அக்கறை எடுத்து வாக்களிப்பில் பெருமளவு கலந்து கொள்ளும் இனம் நாம். தமிழர் வாக்கை பெற்றுவிட வேண்டும் என்ற முனைப்பே எம் இனம் மீதான அவர்களின் அக்கறைக்குக் காரணமாகும்.

இதை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதில் எமது தலைமைகள் போதிய கவனம் செலுத்த வேண்டும். இந்த மண்ணில் எமது இனம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் இன்னமும் தீரவில்லை. வேண்டுமானால் பிற்போடப்பட்டிருக்கலாம். தேர்தலுக்கு பின் வரக்கூடிய உறுதியான எந்த அரசும் எம்மை மீண்டும் சோதனைக்கு உள்ளாக்கலாம். தமிழ் பேசும் வேட்பாளர்கள் தேர்தலில் பங்குகொள்வதினால், எமது அபிலாசைகளை கட்சிகள் பூர்த்தி செய்துவிட்டன என்றோ, வெற்றி பெறும் வேட்பாளர்கள் எம் இனத்தைக் காப்பார்கள் என்று எண்ணுவதோ மிக் முட்டாள்த்தனமானது. வாக்கு வேட்டையாடுவதில் கைதேர்ந்த இக்கட்சிகள் சுலபமாய் எம்மை ஏமாற்றிவிடும்.

தமிழரின் பிரதிநிதி என்று கூறிக்கொள்ளும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தமிழரின் கல்யாண வீடு முதல் கருமாதி வீடு வரை கலந்து கொள்வார். இதற்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தேவையில்லை. இதுவரை காலமும் தமிழர்களுக்காக அவரவர் என்ன செய்தார் என்று பாருங்கள். ஓர் செயல் வீரரை தேர்தலுக்கு முன்னிறுத்துங்கள். இந்தக் கட்சிகள் எமக்காய் இலகுவாய் அசையாது. சிந்தித்து முடிவெடுங்கள், இது எமக்கு முக்கியமான காலம்.

■ ■ ■

## புதிய வீடொன்றை கட்டிட நிறுவனத்திடமிருந்து வாங்கி உறுதி எழுதப்படாமலே விற்க முடியுமா? அதனால் நட்டமேதும் ஏற்படுமா?

நீங்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் ‘Assignment’ அல்லது ‘non assignable’ என்பது போன்ற ஷரத்து எதுவுமில்லாத போது நீங்கள் உங்கள் ‘ஒப்பந்தத்தை’ இன்னொருவருக்கு விற்கவோ அல்லது மாற்றிக் கொள்ளவோ முடியும். விற்பதோ அல்லது உறுதி மாற்றிக் கொள்வதோ நோக்கமாகவிருப்பின் ஆரம்பத்திலேயே இப்படியான ‘Assignment Clause’ ஐ ஒப்பந்தத்தில் போட்டுக் கொள்வது நல்லது. ஆனால் பெரும்பாலான கட்டிட நிறுவனங்களின் ஒப்பநத்தில் மேற் குறிப்பிட்ட ‘Non Assignment Clause’ எழுதப்பட்டிருக்கிறது. அது இப்படியான வடிவத்தில் இருக்கலாம்

“This Agreement is personal to the Purchaser and may not be assigned other than to the Purchaser’s spouse or to an immediate member of the Purchaser’s family without the Vendor’s written approval. Prior to closing, the Purchaser covenants that he/she shall not advertise or list or enter into an agreement to sell the Real Property without the Vendor’s prior written approval in its sole discretion”

மேற் கண்டதின் தமிழாக்கம்: “இந்த ஒப்பந்தம் வாங்குபவரின் உடமை. விற்பவரின் எழுத்திலான உத்தரவின்றி வாங்குபவரின் துணைவர், துணைவி அல்லது அவரது குடும்ப அங்கத்தினரைத் (immediate family member) தவிர்ந்த வேறு எவருக்கும் இவ்வொப்பந்தத்தை மாற்றிக் கொள்ள முடியாது. இச் சொத்து வாங்குபவரின் உடமையாவதற்கு முன்னர், விற்பவரின் எழுத்திலான அனுமதியின்றி, அதை விற்பனை செய்வதற்காக விளம்பரம் செய்யவோ அல்லது ஒப்பந்தம் எதையாவது செய்து கொள்ளவோ மாட்டேன் என்று வாங்குபவர் இத்தால் உறுதி செய்து கொள்கிறார்”

இப்படியான சாராம்சத்துடன் உள்ள ஒப்பந்தத்தில் நீங்கள் கையெழுத் திட்டீர்களானால் விற்பவரின் முன் அனுமதியைப் பெற்றே விற்க முடியும்.

அதைவிட இன்னுமொரு அனுகூலமற்ற ஷரத்தும் பெரும்பாலான ஒப்பந்தங்களில் காணப்படுவது சகஜம். அது GST எனப்படும் வரி பற்றியது. பொதுவாக புதிய வீட்டின் விலையில் ($350,000க்கு உட்பட்ட) GST வரி அடங்குகிறது. வீடு எழுதப்படும்போது விற்கும் நிறுவனம் இந்த GST ஐ வாங்குபவருக்கு மீளக் கொடுத்து விடுகிறது (காகிதத்தில் மட்டும்). வாங்குபவர் வக்கீலிடம் கையெழுத்து வைக்கும் பத்திரமொன்று இப்படியாக வற்பவர் தந்த பணத்தை மீளவும் விற்பவருக்கே கையளித்து விடுவதாக குறிப்பிட்டிருக்கும். அதில் நீங்கள் கையெழுத்து வைத்ததும் அந்த GST திரும்பவும் விற்பவருக்கே போய்ச் சேர்ந்து விடுகிறது. வாங்குபவர் GST மீளப்பெற அருகதையற்றவர் எனின், உதாரணமாக வீடு மீளவும் விற்கப்படுமாயின், அல்லது வாடகைக்கு விடப்படுமாயின் இந்த GST வாங்கும் விலையுடன் சேர்க்கப்படும். வீட்டின் விலை $350,000 இற்கும் $450,000 இற்குமிடையில் இருப்பின் GST மீள் பணம் கிடைக்காது. பெரும்பாலும் GST மேலதிகமாகக் கொடுக்கவேண்டி ஏற்படலாம். $450,000 இற்கு மேற்பட்ட விலையுள்ள வீடுகளுக்கு சில கட்டிட நிறுவனங்கள் விலைக்கு மேலாக GSTயை அறவிடுவதுமுண்டு. எனவே புதிய வீட்டை முதலீடாக வாங்குபவர்கள் தமது முதன்மையான வீடாக (Primary home) எடுத்து எழுதிய பின்னர் விற்பது சிலவேளைகளில் லாபமாகவிருக்கலாம். எதற்கும் வக்கீலிடம் ஆலோசனை பெறுவது இவ்விடயத்தில் முக்கியம். ஒப்பந்தம் கைச்சாத்திடும்போதே ‘Solicitor Approval condition’ போட்டு நிபந்தனையுடனான ஒப்பந்தமாக எடுத்துக் கொள்வது எல்லோருக்கும் நல்லது.

இப்படியான ரத்துகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்றும் ஒன்ராறியோ நீதிமன்றங்கள் இவற்றை நிராகரிக்கச் சாத்தியமுண்டென்றும் சில வழக்கறிஞர்கள் கருதுகிறார்கள் எனினும் இது பற்றி முற்கூட்டியே அறிந்து வைத்து பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

■ ■ ■

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா,

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
For More Info:
Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
e-mail: thaiveedu@gmail.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை
விரிவாக்குவீர்!
416-400-6406, 416-646-3422

inayam
www.inayam.net
ரொரன்ரோவில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும்
பார்ப்பதற்கும் பதிவு செய்வதற்கும்.
இது முற்றிலும் இலவசமான சேவை!!

HOME LIFE,
GTA Realty Inc.

வீடு, வியாபார நிலையங்கள்
**வாங்க விற்க**



Sales Representative

ஞானேந்திரன்
நரசிங்கம்

CELL: 416.937.8090



Sales Representative

ஜூடி
ஞானேந்திரன்

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

OFFICE:
416.321.6969

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

**ராம் கிருஷ்**
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank · FIRST NATIONAL · TD · cervus · BMO

# Credit Score...

5ம் பக்கத் தொடர்ச்சி...

உங்கள் கடனை நேர காலத்திற்குச் செலுத்துங்கள்

உங்களுக்கு கடன் தேவைப்படும் காலத்திற்கு அண்மித்ததாக, கட்டணங்களைச் செலுத்துதல் சிக்கலானதாகும். உங்கள் கடந்த காலத்தில் ஓர் சில கொடுப்பனவுகளை காலம் தாழ்த்தி செலுத்தியிருந்தீர்களா? - நீங்கள் நிதி நெருக்கடியினால் சூழப்பட்டிருந்தால், 60 நாட்களுக்கு மேலதிகமான காலப்பகுதியில் உங்கள் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தாமதிக்க வேண்டாம். சில கடன் வழங்குநர்கள் 30 நாட்கள் கடந்து சென்றாலும் அறிவிப்பதில்லை. ஆனால் 60 நாட்கள் தாமதித்த கொடுப்பனவுகளை கடன் அலுவலகங்களுக்கு அறிவிப்பார்கள். கடந்த காலத்தில் உங்கள் கட்டணங்களைக் காலந்தாழ்த்திச் செலுத்தியிருந்தாலும், இன்றிலிருந்து ஒவ்வொரு கட்டணத்தையும் சரியான நேரத்தில் செலுத்தினால், உங்களது கடன் புள்ளிகளை அதிகரிக்கலாம். "மன்னிப்பு காலங்களை" (Grace periods) பற்றி கவனத்தில் கொள்ளாது, கடன் நிறுவனங்களுடன் உண்மையில் சிறந்த பதிவுகளை வைத்திருக்க வேண்டுமெனில், ஒவ்வொரு கட்டணத்தையும் அதன் இறுதி நாள்வரை காத்திராது செலுத்தி உங்கள் மீதியை குறைவாக வைத்திருங்கள். நீங்கள் செலுத்தாமல் விட்ட பணத்தினை அறவிடும் நிறுவனம் (Collection Agency) மூலம் மீள செலுத்தியிருந்தால், இவை 7 வருடங்கட்கு உங்கள் பதிவில் இருக்கும் என்பதை மறக்க வேண்டாம். நீண்ட கால நோக்கைக் கருத்தில் கொண்டு, உங்கள் கட்டணங்களை அறவிடும் நிறுவனத்திற்குச் (collection Agency) செல்ல விட வேண்டாம். உங்கள் கொடுப்பனவுகளை நேரகாலத்திற்கேற்ப செலுத்துவீர்களெனின் கடன் அட்டை வைத்திருந்தாலும் தவணை முறையில் கடன்களைச் செலுத்துவது (Instalment loans) உங்கள் கடன் புள்ளிகளை அதிகரிக்கும். கடனைக் கொண்டிருந்து அதனை பொறுப்புள்ள முறையில் பேணுபவரை விட, கடன் அட்டை (Credit Cards) இல்லாதவர் அதிக அபாய நிலையில் உள்ளவராகக் கருதப்படுவார். உங்கள் கட்டணங்களை செலுத்துவதற்கு நேரம் போதாமலிருந்தால் தன்னியக்கமாக (ATM) கொடுப்பனவு செய்யக் கூடிய வசதியை மேற்கொள்ளுங்கள். 35% மான புள்ளியானது எவ்வளவு உடனடியாக நீங்கள் செலுத்தித் தீர்க்கிறீர்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.

### 3. உங்கள் கடன் அட்டை மீதிகளை (balance) குறையுங்கள்.

FICO புள்ளியில் அதிக பெறுமதியுள்ள காரணி (A heavily weighted factor) உங்கள் மொத்த கடன் எல்லையளவுடன் தொடர்புடையதாக உங்கள் கடன் அட்டைகளில் நீங்கள் எவ்வளவு பணத்தை செலுத்தவேண்டியதாக உள்ளது என்பதைக் காட்டும். பொதுவாக, உங்கள் கடன் அட்டை மட்டுப்பாட்டில் (limit) 25% அளவில் அல்லது அதற்குக் குறைவாக உங்கள் மீதியை வைத்திருப்பதே சிறந்ததாகும். இது உங்களது கடன் புள்ளிகளை முன்னேற்ற உதவும். கடன் அட்டைகளையோ அல்லது வேறு வகையான சுழலும் கணக்கையோ நீங்கள் பயன்படுத்தினால், மாத இறுதியில் அவற்றைச் செலுத்தித் தீருங்கள்.அல்லது மீதிகளை இயன்றவரை குறைவாக வைத்திருங்கள். உயர்வான மீதிகள் உங்கள் கடன் புள்ளிகளை எதிர்மறையாக (negative) பாதிக்கும்.

### 4. கடனை ஒரு கணக்கிலிருந்து இன்னோர் கணக்கிற்கு மாற்றாது கடனைச் செலுத்தித் தீருங்கள் (Pay off debt rather than moving it around)

உங்கள் கடன் எல்லைக்கும் கடன் அட்டை மீதிக்குமான விகிதமானது (Ratio) பிரதானமானதாக இருப்பதனால், ஒரு கணக்கை மூடிவிட்டு, மீதியை இன்னோர் இடத்திற்கு மாற்றுவது உங்கள் விகிதத்தை அதிகரிக்கச் செய்யும். இது உங்கள் புள்ளியைக் குறைக்கச் செய்யும்.உதாரணமாக, நான்கு கடன் அட்டைகளில் மொத்தமாக $2000 ஐ செலுத்த வேண்டியுள்ளது என எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு கடன் அட்டையும் $2000 கடன் எல்லையை கொண்டிருக்கும்போது உங்கள் மொத்தகடன் எல்லை $8000 ஆகும். இதில் உங்கள் எல்லா மீதிகளையும் 2 அட்டைகளுக்கு மாற்றி விட்டு ஏனைய இரண்டையும் இரத்துச் செய்தால், உங்கள் மொத்த கடன் எல்லை $4000 ஆக குறைவடைவதுடன் $2000 மீதியானது அந்த கடன் எல்லையின் 50% மாக இருக்கும்.

### 5. கடன் எடுக்கும் நேரத்திற்கு அண்மித்ததாக பயன்படுத்தாத கடன் அட்டைகளை மூட வேண்டாம்.

உங்களிடம் பல கடன் அட்டை கணக்குகள் இருந்த போதிலும், நீங்கள் ஒரு சில வற்றையே பயன்படுத்துகிறீர்கள் எனின், நீங்கள் பயன்படுத்தாதவற்றை இரத்துச் செய்வதன் மூலம் நீங்கள் உங்கள் மீதிக்கும் (Balance) கடன் எல்லைக்கும் (Credit limit) இடையிலான விகிதத்தை மட்டுமே அதிகரிக்கிறீர்கள். நீங்கள் நீண்டகாலமாக வைத்திருக்கும் ஒரு கடன்அட்டை குறைந்த கடன் பெறுமதியை வைத்திருந்தாலும், அது நீண்ட கால கடன் வரலாற்றைக் கொண்ட ஒரு கடன் அட்டையாக இருக்கும். எனவே அவ்அட்டையை இரத்துச் செய்யாது, குறைந்த கடன் பெறுமதியை உடைய புதிய கடன் அட்டை ஒன்றை இரத்துச் செய்வதே சிறந்ததாகும். நீண்ட காலமாக கடன் வரலாற்றை வைத்திருக்கும் ஒருவர், சிறிய பெறுமதியைக் கொண்ட புதிய கடன் அட்டையை இரத்துச் செய்தாலும் அது அவரை பாதிக்காது. நீங்கள் ஒரு கடனுக்காக விண்ணப்பிக்கும்போது புதிய கணக்கு திறக்கப்படும். ஓர் குறுகிய கடன் வரலாறு அல்லது ஒரு சில கணக்குகள் மட்டுமே இருந்தால், புதிய கணக்கொன்றை திறக்கும் போது உங்கள் புள்ளிகளை குறைக்கும்.இதற்கு நிருபிக்கப்பட்ட கடன் பதிவுகள் இல்லாமையே காரணமாகும். கடன் வரலாற்றின் கால நீட்சியும் உங்கள் புள்ளிகளில் செல்வாக்குச் செலுத்தும் இன்னோர் காரணியாகும்.கல்லூரியில் ஓர் புதிய மாணவனாக இருந்த காலத்தில் பெற்ற கடன் அட்டை கணக்கை மூடிவிட்டு அண்மைக் காலத்தில் பெற்ற கணக்குகளை திறந்து வைத்திருந்தால், நீங்கள் புதிதாக கடன் வாங்கியவர் போன்று காட்டச் செய்யும். வட்டி வீதங்கள் எவ்வளவாக இருந்தாலும் பழைய கணக்குகள் சிலவற்றை மூடாது வைத்திருங்கள். எத்தனை வீத வட்டி என்பதை கடன் வழங்குவோர் கவனத்தில் கொள்வதில்லை.

### இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

ஓகஸ்ட் குறிப்புக்கள்

- பிள்ளைகளுக்கு பாடசாலையில் பயன்படுத்தத் தேவையான உபகரணங்கள், உடைகள் போன்றவற்றை ஆயத்தமாக்குங்கள்.
- இம் மாதம் 6ஆம் திகதி Civic Holiday அந்த Long weekendஐ கொண்டாட ஆயத்தம் செய்யுங்கள்.
- உங்கள் விடுமுறைக்கால நினைவுகளை நினைவுப் புத்தகங்களில் பேணுங்கள்.
- பூட்டுக்களையும் (Locks) பிணைச்சல்களையும் (Hinges) உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி எண்ணெயிடுங்கள்
- நீரை வெப்பமேற்றும் கருவியில் (Boiler), கசிவுகள் காணப்படுகின்றனவா வேலை செய்கின்றதா என சரிபாருங்கள்.
- சலவை இயந்திரத்தின் குழாய்களில் வெடிப்புகள், உடைவுகள் காணப்படுகின் றனவா எனவும் பொருத்துக்கள் துருப்பிடித்து கசிவுகள் ஏற்பட்டுள்ளதா எனவும் சரி பாருங்கள்
- வருடத்திற்கொரு தடவை பூக்கக் கூடிய தாவரங்கட்கு(Annuals), 2 தொடக்கம் 3 கிழமைகட்கு ஒரு தடவை நீரில் கரையக் கூடிய வளமாக்கிகளை இடுங்கள்
- நீண்ட காலத்திற்கு வாழக்கூடிய (Perennials) தாவரங்களின் அடிப்பகுதியில் கடினமான, மணியுருவிலான (Granular) வளமாக்கிகளை இடுங்கள்.
- தாவரங்களில் பூக்கள் உதிர்ந்தவுடன் அவற்றின் காம்புகளை முறிப்பதன் மூலம் (Deadhead) அவற்றின் தோற்றத்தை பொலிவாக்ச் செய்வதுடன் மேலும் அதிக மாகப் பூக்கவும் வழி ஏற்படும்.
- தோட்டத் தரையின் ஈரலிப்பைப் பேணவும் களைகளை அகற்றுமுகமாகவும் சேதனப் பொருட்களை (mulch) தோட்டத்திற்கு இடுங்கள்.
- முன்னைய இதழ்களில் கூறியபடி தாவரங்களுக்கு காலையிலேயே நீர் விடுவதன் மூலம் இந் நீர் காய்வதற்கு போதிய அவகாசம் கொடுங்கள்.
- உங்கள் தோட்டத்தில் களைகள் காணப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து உடனடியாக களைகளை நீக்குங்கள்.
- பீலிகள், கூரை போன்றவற்றில் கசிவுகள் காணப்படுகின்றதா என அவதானித்து தேவையெனின் திருத்தம் செய்யுங்கள்.
- மேலதிகமாக வளர்ந்த புதர்களை வெட்டி விடுங்கள்.

### திட்டமிடல்

ஓர் கொடுப்பனவு திட்டத்தை உருவாக்குவதுடன் ஓர் மாதாந்த வரவுசெலவுத் திட்டத்தையும்உருவாக்குங்கள்.உங்கள் மாதாந்த வருமானத்திலிருந்து உங்கள் செலவுகளைக் கழிப்பதன் மூலம் ஒவ்வொரு மாதமும் எவ்வளவைச் கட்ட முடியும் என்பதை நோக்கவும். எஞ்சிய தொகையை கணக்குகளுக்கிடையே பகிருங்கள். குறைந்த தவணைகளுடன் அதிகூடிய வட்டி வீதங்களுடனும் குறுகியகாலங்களுடனும் வட்டிகளையும் வட்டி வீதங்களையும செலுத்துங்கள். கொடுப்பனவு திகதிகளுடன் செலுத்துகை காலங்களையும் ஒவ்வொரு கட்டணங்களுக்கும் உருவாக்குங்கள். உங்கள் வங்கியினூடாக தன்னியக்கமான கட்டண கொடுப்பனவை ஏற்படுத்துங்கள். அல்லது இணையத்தினூடாக (Online) செலுத்துகைக்கு பதிவு செய்யுங்கள். உங்கள் கடனை சரியான பாதையில் தொடர்வதற்காக, கடன் கண்காணித்தலை இணையத் தளத்தினூடாக மேற்கொள்ள பதிவு செய்யுங்கள். கடன் எச்சரிப்பு மின் அஞ்சல்களும் போக்கு அட்டவணைகளும் (Trend Tables)உங்கள் கடன் காலப்போக்கில் எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டும்.

### எனது FICO கடன் புள்ளியை முன்னேற்ற எவ்வளவு காலம் எடுக்கும் (How long will it take to improve my FICO Credit Score)?

நேரான விடயங்களை விட எதிர்மறையான விடயங்கள் உங்கள் கடன் புள்ளிகளை மிக விரைவாக பாதிக்கும். காலந்தாழ்த்திய கொடுப்பனவுகள், ஒரு சில மாதங்களில் உங்கள் புள்ளிகளை பாதகமான முறையில் பாதிக்கும். அதே வேளை உங்கள் கட்டணங்களை சரியான முறையில் செலுத்துதல், உங்கள் புள்ளிகளில் கணிசமானளவு முன்னேற்றத்தை ஏற்படுத்த 6-12 மாதங்கள் எடுக்கும்.

அநேகமான கடன் வழங்குவோர் கடைசி 12 மாத கொடுப்பனவு வரலாற்றையே ஓர் கடன் விண்ணப்பத்திற்காக கவனத்திலெடுப்பர். உங்கள் இறுதியான செலுத்துகை 10 மாதங்கட்கு முற்பட்டதாயின் 2 மாதங்களில் நல்ல முறையில் நடந்து கொண்டால் உங்கள் அடுத்த கடன் விண்ணப்பத்தின் போது அதிக பலன் ஏற்படும்.

கடன் அலுவலகங்களானவை தமது நுகர்வோர் பதிவுகளின் கடன் வரலாற்றை தொடர்ச்சியாக காலத்திற்கேற்ப பதிவு செய்யும் (Update). இதன் மூலம் கடன் புள்ளிகள் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருப்பதால், கடன் முன்னேற்றமடைதலும் சாத்தியமானதாகும். எனவே மேற்கூறப்பட்ட வற்றைக் கருத்தில் கொண்டு சரியான நேரத்தில் உடனடியாக செலுத்துதல் உங்கள் கடனை முன்னேற்றுவதற்கு அத்தியாவசியமானதாகும்.

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations
Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:



தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# Buying or Selling Business / Property...

## UP TO $ 250,000 SMALL BUSINESS LOAN CAN BE ARRANGED

**Call for Complementary Market Evaluation & Professional Advice of your business or property**

**Toronto**





**$ 275,000**
Restaurant Business
Established over 9 years
Good Location

**Toronto**



**$ 375,000**
Potential Party hall/Restaurant
Property for sale
Good Location

**Hamilton**



**$ 1.7 Million**
Gas Station
Business with Property
Call for More Info !

**Toronto**




**$ 300,000**
Property for Sale
Automotive Business
Used Cars Sales Place
Good Location



**Toronto**



**$ 100,000**
Bar / Restaurant
Low Rent
Good Potential to grow

**Mississauga**



**$100,000**
Screw Machine Shop
Established Over 10 years
Good for owner/Operator

**Toronto**



**$ 350,000**
22 Years in Business
Great Restaurant/ Bar
Sales over 1 Million

**Pickering**



**$ 700,000**
Excellent Bar & Grill
Location ! Location !
Established Business

**CHANDRAN Sornalingam**
Real Estate Broker
**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED







வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்


**CEYLINGO FINANCIAL GROUP.**

# 416.430.0111

2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8



**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**



**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

# வீடு விலைகள் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றன?



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

வாசகர்களுக்கு மீண்டும் அன்புகலந்த வணக்கம். மருவிவரும் அவசர உலகில் வாசிப்பதற்கு சிறிது நேரத்தை ஒதுக்கி, உங்கள் கைகளில் தவழும் இவ்வீடு பத்திரிகையின் தரத்தினை உணர்ந்து, எழுதுவதைத் தொடர்வதில் எங்களுக்கும் மகிழ்ச்சி. எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் இயற்கை தந்த தரவுகள் நிறையவே உண்டு. இருப்பினும் இச்சஞ்சிகை வீடு சம்பந்தப்பட்ட தகவல்களையே அதிகம் தாங்கி வருவதால் நாம் அவை சார்பான விபரங்களை ஆராய்வதே பொருந்தும்.

இன்றைய பொருளாதார சூழ்நிலைகள் எம்மில் பலருக்கு வியப்பாகவே இருக்கின்றது.வீடு வாங்குவது சரியா,இது தருணமா, நாங்கள் அவசரப்பட்டுவிட்டோமா, அல்லது நாங்கள் பிந்திவிட்டோமா என பலவகையான வினாக்கள் எழுந்து பலத்த சிந்தனைகள், ஆராய்ச்சியின் பின்னர் வசிப்பதற்காக வாங்குகின்ற வீடு, ஒரு தகுந்த முதலீடு என்கின்ற முடிவுடன் வீடு தேடும் படலம் ஆரம்பமாகின்றது. இவ்வாறு தேடிக் கண்டு பிடிக்கின்ற இருப்பிடங்களின் சந்தை மதிப்பீடு எவ்வாறு கணிப்பீடு செய்யப்படுகின்றது என்பதை அறிந்துகொள்வதே இன்றைய நோக்கம்.

பேரம்பேசி வாங்குவது எமது பாரம்பரியம். வட அமெரிக்காவைப் பொறுத்தவரை அனேக பொருட்கள் குறித்த விலையிலேயே விற்பனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இருப்பினும் வீடு வாகனம் என்று வரும்போது குறித்த விலைமதிப்பீடு என்பது இயலாத காரியமாகின்றது. புதிய வீடுகளோ அல்லது வாகனங்களோ குறித்த விலைகளில் விற்கப்படுவது போல் பாவித்த வீடுகளை நிர்ணயிக்க முடிவதில்லை. பொதுவாக ஒரு பொருளுக்கு ஏற்படும் கேள்வியைப் பொறுத்ததுதான் அதன் விலை மதிப்பீடு. கேள்வி என்று குறிப்பிடும் போது ஒருவரது மனம் சம்பந்தப்பட்டதாகவோ தேவை கருதியதாகவோ அமையலாம். விற்பனைக்காக சந்தைப்படுத்தப்படும் வீடுகளை வீடு விற்பனைப் பிரதிநிதிகள் பல முக்கிய காரணிகளை மையமாக வைத்து விலையினைக் கணிப்பிடுகின்றார்கள்.. அதற்காக, குறித்த வீடு சம்பந்தப்பட்ட பல தகவல்களைச் சேகரித்தல், அயலவர்களின் சார்ந்த தன்மையுடைய விடுகளின் தகவல்களை இணைத்து ஆராய்தல் மற்றும் தற்போதைய சந்தை நிலவரங்களை ஒப்பீடு செய்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பெறப்படும் தகவல்கள் உபயோகப்படுகின்றன.



### வீடு சம்பந்தப்பட்ட தகவல் திரட்டுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1 ஒத்த தன்மையுடைய வீடுகளை ஒப்பீடு செய்தல்

2 வீட்டின் தரம் பற்றிய தகவல்கள்

3 மேலதிகமாக முதலிட்ட இணைப்புக்கள்

4 விற்பவர்களின தேவை (ஏன் விற்கிறார்கள்)

### ஒத்த தன்மையுடைய வீடுகளை ஒப்பீடு செய்தல்: CMA (Comparable market Analysis)

கருத்துக்களின் அடிப்படையில் எடைபோடுவதைவிட தகவல்களின் நம்பகத் தன்மையின் அடிப்படையில் எடை போடுவதே பொருத்தமானதாகும். ஒருவர் ஒரு வீட்டினைத் தெரிவுசெய்தபின்னர்,அந்த வீட்டினை ஒத்த அதே சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள பல வீடுகளின் விற்பனை விலைகளை ஒப்பிடுவதே இம்முறை. இதற்கான தகவல்களை வீட்டுப் பிரதிநிதிகள், தகவல் மையங்களான MLS உம் Land registry மற்றும் வீட்டுத்துறை நிறுவனங்களின் பதிவுகளில் இருந்து திரட்டுகிறார்கள். ஒத்த வீடுகள் எனும்போது, ஒரே சதுர அடி, படுக்கை அறைகளின் எண்ணிக்கை, குளியலறைகள், வீடு அமைவிடம், மாடிகளின் எண்ணிக்கை போன்றனவும் வீட்டின் வயது, சில தருணங்களில் கட்டிட நிறுவனங்கள் கூட கணக்கிலிடப்படுகின்றன. சுமார் 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் சமீப காலத்தில் விற்பதற்காக இருக்கும் வீடுகள் என்ன விலையில் சந்தையில் இடப்பட்டது, பின்னர் என்ன விலைகளில் விற்கப்பட்டது போன்ற தகவல்களும், சந்தைப்படுத்தலின்போது எத்தனை நாட்கள் அவ்வீடுகள் நிலுவையில் இருந்தன என்பதும் விலை நிர்ணயத்தின்போது முக்கிய காரணிகள் ஆகின்றன. நடைமுறையில் இருக்கும் விலைகளை விடுத்து, சிலர் சுயவிருப்பத்தின் பேரில் அதிக விலை கேட்கும் வீடுகள் பல, பல நாட்கள் நிலுவையில் இருப்பது மட்டுமன்றி, அந்தப் பகுதியிலுள்ள ஏனைய வீடுகளின் சந்தைப் படுத்தலுக்கும் இடையூறாகவே இருக்கும். அவ்வாறு விலையினை அதிகரித்து விடுவதால், பலர் பல அரிய சந்தர்ப்பங்களைக் கூட இழந்துவிடுகின்றனர். நீண்ட நாட்கள் சந்தையில் இருக்கும் வீடுகள்பற்றி மாற்றுக் கருத்துக்கள் உருவாகும் இக்கட்டான நிலைகூட ஏற்பட வாய்ப்புண்டு. அப்போதும், சமீபத்திய தகவல்கள் பழைய தகவல்களைவிட சிறந்தவையாகக் கருதப்படுகின்றது.

### வீட்டின் தரம் (Condition)

வயது, அறைகளின் எண்ணிக்கை, மற்றும் இதர தகவல்களைத் திரட்டிய நாம் வீட்டின் தரம் பற்றியும் கருத்தில் எடுக்க வேண்டும். ஒரே வயதினைஒத்த ஒரே பகுதியில் உள்ள வீடுகள் பாவனைத் திறனைப் பொறுத்து வேறுபட்ட நிலைமைகளில் தென்படும். அவற்றினைக் கருத்தில் கொள்ளும்போது,

25ம் பக்கம் பார்க்க...

Law Office
T. JEGATHEESAN
Semi det. 2 storey unfinished basement. 3 bedrooms and 3 washrooms. Few Years New Semi In Desirable Location With New 'Go' Station To Be Built Near To Walmart.

**MISSISSAUGA**



**299,900**

Semi det. 2 storey partly finished basement. 3 bedrooms and 2 washrooms. Many Upgrades And Custom Built-In Features, Extra Cupboards, Built-In Shelves,

**MISSISSAUGA**



**299,900**

Two storey townhouse, unfinished basement, 3 bed and 3 washrooms. Lovely, Bright, Spacious End Unit Freehold Townhouse On Quiet Court. Pretty, Fully Fenced Back Garden With Pond + 2 Tier Deck

**MISSISSAUGA**



**349,900**

Semi-det 2 storey house with finished basement with sep. entrance. Outstanding Home In High Demand Area. Generous Sized Manicured Backyard. Desirable Layout With Interlock Side-Walkway And Front

**MISSISSAUGA**



**529,000**

Detached bungalow, finished basement with separate entrance. 3+2 bedrooms, 3 washrooms. Opportunity To Own A Beauty In Applewood Hills, Prime Location. Newly Renovated Kitchen & Basement

**MARKHAM**



**289,900**

Link 2 storey house, finished basement 3 bedrooms and 2 washrooms. Immaculate, Very Well Kept Home In High Demand Area, Show Like Model, Very Well Decorated. Long Driveway, No Side Walk.

**MARKHAM**



**325,000**

2 storey, finished basement with sep entrance 3+1 bedrooms 3 washrooms. All Brick Detached Home In Excellent Location In High Demand Area. Huge Lot With Interlocking Driveway.

**MARKHAM**



**327,000**

Det. 2 storey, unfinished basement. 3 bedrooms 3 washrooms. Remington Model-Duke!!!Most Popular Spacious & Immaculate Home One Of the Best Detached-Links in the Area. All Brick

**BRAMPTON**



**214,900**

Freehold Townhouse Right Across From Park With Garage & Porch Enclosure W/Glass Block. Main Level Has Eat-In Kit, 3 bed, 2 wash finished basement. Fenced Yard.

**BRAMPTON**



**249,900**

Gorgeous 3-Br. Townhouse On Prime Location, Open Concept, Close To All, Just Move-In. Large Living/Dining Room, Ceramic Hallway & Kitchen Floor, Prof. Finished Basement. 3 bed, 2 wash.

- ***INVESTMENT*** - Luxury Condominiums, Commercial Properties and Vacant Lands.
- Selling and Buying your Properties or Businesses.
- Arranging Mortgages for LOWEST INTEREST RATE.

**For all your real estate questions and needs Call Param G**

# மிகச் சிறந்த யூன் மாதம்

## சந்தை நிலவரம் (யூன் 2007)

S.K. பாலேஸ்
- வீடு விற்பனை முகவர் -



### மார்க்கட் வோச்

சென்ற மாதம் ரொறன்ரோ றியல் எஸ்டேட் சந்தையில் பதிவான 10,451 விற்பனையே இதுவரை நடந்த யூன் விற்பனையில் சிறந்தது என்று ரொறன்ரோவின் றியல் எஸ்டேட் தலைவர் டொனல்ட் பென்ட்லி இன்று அறிவித்தார். இது சென்ற வருடம் யூன் மாத விற்பனையான 8,730 ஐ விட ஏறக்குறைய 20 வீதம் அதிகமாகும். மே மாதத்தில் நடந்த மிகச் சிறந்த விற்பனையான 21,597ஐ விட(ஆறு வீதம்)ச் சற்றுக் குறைவாகவும் உள்ளது. கடந்த இரண்டு மாதங்கள் 21,597 விற்பனைகள் 1977 வருடம் முழுவதும் விற்பனையான 20,572 எண்ணிக்கையைவிட அதிகமாகும்.

விற்பனை விலை வேகம் வேகமாக ஏறிக் கொண்டிருந்தபோது சராசரி விலை சிறிது இறங்கியது. $381,963 இலிருந்த ஒரு வீதம் இறங்கியது. 2006ன் முதல் ஆறு மாத விலையான $356,977ஐ விட வருடாந்தம் ஐந்துவீதம் சராசரி விலை உயர்ந்து $373,719 இல் இருந்தது.

### தனிக்குடும்ப வீடுகள் விபரம்

விலை உயர்வு ஒரு கணிசமான அளவு இருக்கும் என்று குறிப்பிட்டார். விபரங்கள் $27,789 பணவீக்கம் மேல் நோக்கிப் போவதைத் தடுக்கப் போதுமானது.

தற்போதைய சந்தை முதல தடவை வீடு வாங்குபவர்க்கு இன்னும் எட்டக்கூடியதாகவே உள்ளது..

TREB ல் அறிவிக்கப்பட்ட விற்பனையின் விபரம் பின்வருமாறு:

| எண்ணிக்கை | மாவட்டம் | சராசரி | விற்பனை |
|---|---|---|---|
| 28 | மேற்கு மாவட்டங்கள் | $356,513 | 3936 |
| 14 | மத்திய மாவட்டங்கள் | $513,491 | 1819 |
| 23 | வட மாவட்டங்கள் | $406,655 | 2,248 |
| 21 | கிழக்கு மாவட்டங்கள் | $392,558 | 2,448 |

### அயல் வட்டாரச் சதுக்கம்

எற்றோபிக்கோ

எற்றோபிக்கோவில் 2,734விற்பனைகள் இது வரை நடந்தன. இது 2006ம் ஆண்டு ஜனவரியில் இருந்து யூன் வரையான கால கட்டத்தின் சராசரி விலை $399,525. இது குறிப்பிட்ட காலத்திற்கு முன் பதிவுசெய்யப்பட்ட $38,320ஐ விட நான்கு வீதம் அதிகமாகும்.

### கொமேர்ஸ்ல் றியல்டி

(முதற் காலாண்டு அறிக்கை)

2007ல் முதற் காலாண்டில் நகரத்துக்குச் சற்று வெளியே இருந்த அலுவலகத் தரையின் பெறுமதி உயர்ந்தது. 2006 மூன்றாம் காலாண்டின்போது, எழுசந்தை யில் நான்கில் பெறுமதி உயர்ந்தது.

வன்கூவரில் 29.3 வீதம் உயர்ந்து ஏக்கருக்கு $970,000ம் கல்காரியில் 14.8 வீதம் உயர்ந்து ஏக்கருக்கு $907,000ம் காணப்பட்டது.

| வசிக்கும் வீட்டின் மாதிரி | விற்பனை | % | மீடியன் |
|---|---|---|---|
| 1. Detached | 5,191 | 98 | $395,000 |
| 2. Semi Detached | 1,236 | 100 | $320,000 |
| 3. Condo Town house | 859 | 98 | $251,000 |
| 4. Condo Apt. | 2,173 | 98 | $230,000 |
| 5. Link | 253 | 98 | $303,000 |
| 6. Alt. Row Townhouse | 693 | 99 | $301,000 |
| 7. Co-Op Apt. | 37 | 99 | $192,000 |
| 8. Det. Condo | 09 | 99 | $283,000 |

ரொறன்ரோ விலைகள் ஒரு ஏக்கருக்கு 7.5 வீதம் இறங்கி, ஏக்கர் $663,000 இலும் ஒட்டாவாவில் விலை 7.1 வீதம் குறைந்து $285,000 இலும் நின்றது.

### சக்தி மையம் வாடகை விகிதம் சற்று உயர்ந்தது

சக்தி மையத்தின் வாடகை வீக்கம் நாடு முழுவதும் சராசரி 2.5 வீதம் உயருமென்று எதிர்பார்க்கப்பட்டது. இது 2006ல் பதிவு செய்யப்பட்ட 2.4 வீதத்தை விட சிறிது அதிகம்.செலவுகள் சராசரி 2.4 வீதம் பொதுவாக வாடகை வீக்க வீதம் அதிகமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ரொறன்ரோவின் செலவும், வாடகையும் 2.4 வீதம் உயருமென எதிர்பார்க்கப்பட்டது. .

■ ■ ■

## நாம் அருந்தும் தண்ணீர் பாதுகாப்பானதா?


ரொறன்ரோ (GTA) மக்களுக்கு தண்ணீர் வரும் குழாய்கள் திருத்தப்பட வேண்டும் என்று group of construction contractors தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோவில் உள்ள தண்ணீர் குழாய்களில் இருபது வீதமான தண்ணீர் குழாய்கள் எண்பது வருடங்களுக்கும் மேலாக பழமை வாய்ந்தவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த குழாய்கள் ஆபத்தானவை. இந்தகுழாய்களில் இருந்து நாம் அருந்தும் தண்ணீரினால் நமது உடல் நலம் பாதிக்கப்படலாம். எனவே இந்த குழாய்களை மாற்ற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது..

ஆனால் இந்தகுழாய்களை இருபத்தைந்து வருடங்களுக்குள் மாற்ற 55 பில்லியன் டொலர்கள் தேவை என்று 1996ல் மதிபிடப்பட்டது.இன்று அது அதனைவிட மிகஅதிக பில்லியன் டொலர்களாக ஆகியுள்ளது.

நாம் தினமும் நமது வீட்டில் அருந்தும் தண்ணீர் ஒன்ராறியோ லேக்கில் இருந்து நமது வீட்டுக்கு குழாய்கள் மூலம் வருகின்றது. அதே சமயம் நமது மலசல கூடத்தில் இருந்து வெளியேறுகின்ற மலசலங்கள் இதே ஒன்ராறியோ லேக்குக்குத் தான் செல்கின்றன. அதே லேக்கில் உள்ள தண்ணீர் வடிகட்டப்பட்டு நமது வீட்டுக்கு மறுபடி வருகின்றது. அதைதான் நாம் குடிப்பதற்கும்,சமைப்பதற்கும், குளிப்பதற்கும் பயன் படுத்துகின்றோம். இது ரொறன்ரோவில் வாழ்கின்ற பல மில்லியன் மக்களுக்குத் தெரியாத ஒரு உண்மையாகும்.

■ ■ ■



# We make you realize your potential

## IT Professionals !!!

ExertTech
building a better future



## IT Training and Placement

- ExertTech Inc. provides training and placement for IT graduates to succeed in their career path.
- Designed to "Coach-the-right Candidate" to get into the competitive job market.
- "ready-to-work" level of confidence.
- Gain exposure to the new technologies and receive the latest training.
- 24/7 hours Lab access
- Individual counseling to our candidate for resumes and interview preparation
- 100% job assistance and help the candidate to get into the job market

**Find your dream job in a latest technology with competitive salary**



**Current job openings:**

- .Net Developers
- Java Developers
- Cognos Specialist
- Oracle Developer
- QA Specialist
- SQL Developer

**www.ExertTech.com**
**416-619-0603**

**We guarantee to assist you until you are in a new position.**

ExertTech, Inc.
1300 Don Mills Road, Suite 215, North York, Ont. M3B 2W6,
Email:info@exerttech.com,

ExertTech
building a better future

excelgra.com | 416.970.5533

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

# மங்காத கடன் என்று சங்கே முழங்கு



பெரி முத்துராமன்
- Senior Prsonal Banking Officer -

**இதுவரை...**

பெரும்பாலான நிறுவனங்கள் எக்யுபாக்ஸ் மூலம் கடன் சரிதத்தைப் பெறுகின்றன. சில நிறுவனங்கள் டிரான்ஸ் யூனியன் மூலம் கடன் சரிதத்தைப் பெறுகின்றன. சில நிறுவனங்கள் இரண்டிலும் உள்ள கடன் சரிதத்தைப் பார்த்து முடிவு எடுக்கின்றன. எக்யுபாக்ஸ் மற்றும் டிரான்ஸ் யூனியன் ஆகிய இரு நிறுவனங்களுமே கடன் மதிப்பை அளவிட எண் 300 இலிருந்து 900க்குள் பயன்படுத்துகின்றன. மதிப்பெண் கூடக் கூட கடன் தருபவரின் பார்வையில் உங்கள் மதிப்பும், வாய்ப்பும் கூடக் கூடு கின்றது. ஆனால் இந்த மதிப்பெண் ஒன்று மட்டுமே கடனைப் பெற்றுத் தந்து விடாது. உங்கள் வருமானம், உங்கள் வேலையின் தன்மை போன்றவையும் கடனை நிச்சயிக் கும் காரணிகளாகின்றன. வீடு போன்ற பெரிய கடன்களுக்கு விண்ணப்பிக்கு முன் எக்யுபாக்ஸ், டிரான்ஸ் யூனியன் இரண்டி லுமே உங்களைப் பற்றி உள்ள விவரங் களைச் சரிபார்த்துக்கொள்ளுதல் நல்லது. சரி இல்லாத விவரங்கள் இருந்தால் கடனுக்கு விண்ணப்பிக்குமுன், கடந்த சரித நிறுவனத்துடன் தொடர்புகொண்டு, தகுந்த ஆதாரங்களின் மூலம் தவறை நிரூபித்து சரிசெய்து கொள்ள வேண்டும். மேலும், ஆண்டுக்கு ஒருமுறை உங்கள் கடன் சரிதத்தை இலவசமாகத் தபாலில் பெற்று விவரங்களைச் சரி பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் கடன் சரிதத்தை நீங்கள் கேட்டுப் பெறுவது, உங்கள் கடன் மதிப்பெண்ணைக் குறைக்காது. ஏனென் றால் அது உங்கள் உரிமை.

**இனி...**

எக்யுபாக்ஸ் மற்றும் டிரான்ஸ் யூனியனில் உங்களைப்பற்றி உள்ள விவரங்கள் சற்றே மாறுபடக்கூடும். உதாரணமாக நீங்கள் முன்பு பார்த்த வேலை, ஒரு கடன் சரித நிறுவனத்திலும், இப்போது செய்யும் வேலை இன்னொரு கடன் சரித நிறுவனத் திலும் இடம்பெற்றிருக்கக்கூடும். அதேபோல மதிப்பெண்களும் இரண்டிலும் ஒன்றாக எப் போதுமே இருக்காது. ஏனென்றால் அவை மதிப்பிடப்படும் முறைகளிலும், இரண்டு நிறு வனங்களுக்கு இடையேயும் பல முரண்பாடு கள் உள்ளன. மேல் எழுந்தவாரியாகப் பார் த்தால் வித்தியாசம் இருப்பதைப் போலத் தோன்றாது.

### டிரான்ஸ்யூனியனில் கீழ்வரும் காரணிகள் உங்கள் மதிப் பெண்களைக் குறைக்கும்

1. கடன் அளவும் கடன்களும் நிறைய இருந்தால் மதிப்பெண் குறையும். கடன் அளவு என்னும்போது குறிப்பாக நாம் குறிப்பிடுவது பல நிறுவனங்களில் உங்க ளுக்குக் கடன் அனுமதி உள்ளது. ஆனாலும் நீங்கள் உபயோகிக்க வில்லை.இத்தகைய நிலைமையும் கடன் மதிப்பெண்ணைக் குறைக்கும். ஏனென் றால் சில கடன்தரும் நிறுவனங்கள் உங்களின் அதிகப்படியான கடன் அளவு எதிர்காலத்தில் உங்கள் திருப்பிச்செலுத் தும் சக்தியைப் பாதிக்கும் என்று கருதக் கூடும்.இத்தகைய சூழ்நிலையில் தேவை யற்ற சில கணக்குகளையும் கடன் அளவையும் குறைத்துக்கொள்ள வேண் டும். எல்லாக் கணக்குகளையுமோ அல் லது இருப்பதிலேயே மிகவும் பழையதாக உள்ள கணக்குகளையோ மூடக்கூடாது. அதுவும் மதிப்பெண்ணைக் குறைக்கும்.
2. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் அளவில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தொடர்ந்து உபயோகிப்பீர்களே யானால் மதிப்பெண் குறையும். பொது வில் மூன்றில் ஒரு பங்கு கடன் அளவே நீங்கள் உபயோகிக்கிறீர்கள் என்றால் உங்கள் மதிப்பெண் உயர்ந்த நிலையில் இருக்கும். சரிபாதிக்கு மேல் அபாயக் குறி அளவீடு ஆரம்பமாகின்றது. மதிப் பெண்ணும் குறைகின்றது.

 இதை உதாரணத்தின்மூலம் விளக்கு வோம். உங்களுக்கு இருக்கும் மொத் தக் கடன் அளவு எல்லை முப்பதாயிரம் (30,000) என்று வைத்துக்கொள்வோம். இதில் நீங்கள் எப்போதுமே சாதாரண மாக உபயோகிப்பது பத்தாயிரம் மட் டுமே. மதிப்பெண் உயர்வாக இருக்கும். உபயோகிப்பது பதினைந்தாயிரம் என் றால் பரவாயில்லை. இருபதாயிரம் என்று வைத்துக் கொண்டால் மோசமில்லை. அதற்கு மேல் போகும்போது நிச்சயம் மோசம்தான். சிலபேருக்கு கடன் அளவு க்கு மேல் கடன் இருப்பு இருக்கும். உதாரணத்திற்கு30,000 அளவுக்கு 30,050 என்று வைத்துக்கொள்வோம். இது கடன் மதிப்பைப் படு மோசமாகப் பாதிக்கும்.
3. கடன்களைத் தொடர்ந்து உபயோகிக் காமல் - சுழலும் தன்மையைப் பாதிக் கும் வகையில் - கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்தால் கடன் மதிப் பெண் வெகுவாக விழும். கையில் இருக் கும் காசைப்போல் கடனை எண்ணிப் பார்த்துச் செலவுசெய்து உரிய தேதிக்கு முன்னர் முழுவதையும் திருப்பிச் செலுத் திவிடுவது என்ற பழக்கம் கடன் மதிப் பெண்ணை உயரச்செய்யும்.

### எக்யுபாக்ஸில் மதிப்பெண் எதன் அடிப்படையில் கணக் கிடப்படுகின்றது

**குறிப்பாக மதிப்பெண் அதிகம் இல் லாமல் போவதற்காக காரணங்களை ஆராய்வோம்.**

1. அடிக்கடி கடனுக்கு விண்ணப்பித்து, அதன் காரணமாக எழுந்த விசாரணை கள் கடன் மதிப்பெண்ணைக் குறைக் கும். தேவையான போது மட்டுமே கடனுக்கு விண்ணப்பிப்பது என்பது நல்ல பழக்கம். புதிய கடன் சரிதம் உள்ளவ ருக்கும், பழைய கடன் சரிதம் உள்ள வருக்கும் கூட மதிப்பிடப்படும் முறையில் வித்தியாசங்கள் உள்ளன.புதிதாக கடன் பெற்றவர்கள் தொடர்ந்து கடனுக்கு விண்ணப்பிக்காமல் இருந்தால் கடன் மதிப்பெண் உயரும்.
2. உங்கள் கடன் எவ்வளவு பழையது என் பதும், கடந்த காலத்தில் எவ்வாற தவணை தவறாமல் கட்டிவந்துள்ளீர்கள் என்பதும் கண்காணிக்கப்படுகிறது. மிகப் பழைய கணக்குகளைத் தொடர்ந்துநல்ல நிலையில் மூடாமல் வைத்துக்கொள்ளு தல் மதிப்பெண் தொடர்ந்து நல்ல நிலை யில் இருந்துவரக் காரணம் ஆகலாம். புதிது புதிதாகக் கடன்களை ஆரம்பிப்பது மதிப்பெண்ணைக் குறைக்கும்.
3. வீட்டுக் கடன் இல்லாத மற்றக் கடன் களின் கடன் இருப்பு (Balance) அதிகம் இருந்தால் மதிப்பெண் குறையும். கடன் களில் குறைவு தென்படவில்லை என்றா லும் கடன் மதிப்பெண் குறையும். ஒரு கடனிலிருந்து பணத்தை எடுத்து மற்றக் கடனுக்குப் பணத்தைக் கட்டுவது என் பது மதிப்பெண்ணை உயர்த்தாது. ஏனென்றால் மொத்தக் கடனில் மாறுதல் இல்லை.
4. மிக அதிகமான கடன்களும், அவற்றில் தவணை தவறுதலும் மதிப்பெண்ணை வேகமாகக் குறைக்கும். கடன் குறைய இருந்தாலும் தவணை தவறுதல் மதிப் பெண்ணைக் குறைக்கும். இரண்டிலும் வித்தியாசம் இருந்தாலும் மொத்தத்தில் மதிப்பெண் குறையும். எவ்வளவு என்ப தில்தான் வேறுபாடு. கடன்கள் ஓரள வுக்கு இருந்து தவணையை ஒழுங்காகத் தவறாமல் செலுத்திவந்தால் மதிப்பெண் ணில் பெரிய வீழ்ச்சி ஒன்றும் இருக்காது. பெரிய உயர்வும் இருக்காது, ஆனால், சிறுகச் சிறுக உயரவோ அல்லது இருக் கும் நிலையில் தொடர்ந்து இருக்கவோ வாய்ப்பு உள்ளது.

தவணை தவறாதீர்; வார்த்தை மாறாதீர்; வளர்வீர்கள்.

■ ■ ■

பெரி. முத்துராமன்
நிதித்துறை ஆலோசனைகளுடன் கூடிய சேவை
Scotiabank™
Perrii Muthuraman
MBA, M.Comm, PFP
Senior Personal Banking Officer
Direct Line: 416.439-3040 x:2008

VIEW TECH WINDOWS INC.
•Industrail •Commercial • Residential

• Storm Doors
• French Doors
• Patio Doors
• Porch Enclosures
• Thermal Windows
• Vinyl Windows
• Aluminum Windows
• Glass & Screen
All work Guaranteed
Vinyl and Aluminum Replacement Windows
FREE ESTIMATE

6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON
KARUNA 905•796•9292/ 416•892•7070

VJ'S
RENOVATION & CARPET CLEANING

• HARDWOOD FLOORING
• PLUMBING
• BASEMENT WORKS
• ELECTRICAL WIRING
• CARPET CLEANING (RESIDENTIAL/COMMERCIAL)
• TOTAL RENOVATION
CONTACT: VJ. KUMAR
647.588.2880

# நிதித் திட்டமிடலும் பணத்தால் பணம் செய்வதும்

இன்று பண முதலீட்டு உலகம் விரைந்து விரிவடைவதுடன் புதுப்புது நிதி முதலீட்டுச் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. அதே வேளை தொழில் நுட்பம் வளர்ச்சிகரமாயுள்ளதுடன் விரிவுபட்டு வரும் முதலீட்டுச்சந்தையில் ஆழ்ந்த அறிவு இல்லாத வேளைகளில் சிறு தவறும் பாரிய கெடுதிகளை ஏற்படுத்துவதால் பலரும் முதலீட்டுச்சந்தையினின்று ஒதுங்கி இருக்கவே விரும்புகிறார்கள். தேனி கொட்டும், அதற்காக தேனை குடிக்காமலிருப்பதிலும் அந்தத் தேனை பெற்றுத் தரக்கூடிய ஒருவர் உதவியைப் பெறுவது சிறப்பல்லவா? கரணம் தப்பினால் மரணம் என்று முதலீட்டுச் சந்தையிலிருந்து விலகி சீட்டுப் போடுவதிலும் வீடுவாங்கி விற்பதிலும் செல்வத்தைச் சேர்ப்பதிலும் நிதித்திட்டமிடல் வல்லுனர் உதவியுடன் நல்ல பலனைப் பெறுவது சிறப்பாகும்.

பலருக்கும் பொதுவான இலக்குகளான பிள்ளைகள் கல்விச்செலவு, தமது சொந்த ஓய்வூதியம், வருவாயில் முன்னேற்றம் ஆகியவற்றை அறிந்திருப்பார்கள். ஆனால் இவ்விலக்குகளுக்கு ஒரு விலை மதிப்பிடுவதவசியம். உதாரணமாக கல்விக்காக 2010ம் ஆண்டு 50,000வெள்ளி தேவை அல்லது இன்னும் பத்து வருடத்தில் ஓய்வுபெறும் போது 5,000வெள்ளிதேவை அல்லது தமது மூலதனத்தால் மாதம் 750 வெள்ளி வருவாய்தேவை என வரையிட்டுக் கூறினால் பின் அதை பெறுவதற்கான வழிவகைகளை ஆராயலாம். இப்படி தெளிவான இலக்கு இல்லாதவிடத்து கலங்கரை விளக்கு இல்லாத துறைமுகத்தை நோக்கி இரவில் பயணம் செய்வது போலாகும்.

இலக்குகள் வெறும் பகல்க்கனவாக மாறாது இருக்கவேண்டுமானால் அது யதார்த்தத்திற்கு ஒவ்வாததாக இருக்கக்கூடாது. இல்லாவிடில் அந்த இலக்குகள் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகத்தான் முடியும். ஒரு முதலீடு செய்கையில் செய்பவரின் மனநிலையும் ஒரு முக்கிய அம்சமாகும். சிலர் ஆபத்தான முதலீடுகளில் துணிந்து இறங்கி பெரும் பொருள் ஈட்டுவார்கள். இன்னும் சிலர் பாரம்பரியமாக ஓரளவு வருவாயுள்ள முதலீட்டையே விரும்புவார்கள். எனவே மனநிலை, முதலீட்டுக்குரிய கையிருப்புத் தொகை, முதலீட்டுக்கான காலவரை ஆகியவற்றை அறிந்த பின்பே நாம் முதலீடு செய்யமுடியும். உதாரணத்திற்கு 2009ம் ஆண்டு $ 50,000 கல்விக்காக சேமிப்பவர் சற்றுத் துணிச்சலுடன் முதலீடு செய்யக் கூடியவராயின் முடியுமாயிருப்பினும் அவர் மிகக்கவனமாக முதலீடு செய்யும் மனநிலை உள்ளவர் எனின் கிட்டத்தட்ட $30,000 மட்டுமே சேமிக்கக் கூடியதாயிருக்கும்.

பொதுவாக ஒருவர் தமது நிதி நிலவரம் பற்றி ஒரு குத்துமதியமான அறிவையே கொண்டிருப்பார். உங்கள் குடும்பத்தின் நிதி நிலையைக் கணிப்பதுடன் முதலீட்டின் ஆரம்பப்படியாகும் இதைக் கணிப்பது மிக எளிதான ஒரு விடயம். முதலில் உங்களிடம் உள்ள செல்வத்தின் மொத்த பெறுமதியைக் கணியுங்கள். அதாவது உங்கள் வீட்டின் பெறுமதி வங்கி இருப்பு மற்றைய முதலீடுகள் உங்கள் ஓய்வூதியத்தின் தற்போதைய பெறுமதி ஆகியவற்றின் கூட்டுத் தொகையே கையிருப்பிலுள்ள செல்வமாகும். அடுத்து உங்கள் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை, அதாவது வங்கிக் கடன், அடமானக்கடன், கடனட்டைக்கடன் மற்றுமுள்ள சிறுசிறு கடன்தொகையைக் கூட்டுங்கள். மேற்கூறிய இரு தொகைகளின் வித்தியாசமே உங்கள் நிகர பெறுமதியாகும்.

கையிருப்பு = கொடுப்பனவு = நிகரபெறுமதி

நீங்களே ஓரளவு நிகர பெறுமதியைக் கணிப்பினும் ஒரு நிதித் திட்டமிடல் வல்லுனர் அதைக் கணித்து மேலதிகமாக உள்ள செல்வத்தை எப்படி முதலீடு செய்யலாம் என்பதை அறிவுறுத்துவார். இதனை நீங்களாக செய்வதனால் பணமுதலீட்டு முகாமையாளர், தனிப்பட்ட நிதித்திட்டமிடல் வல்லுனர், வங்கி முகாமையாளர், காப்புறுதி முகாமையாளர் போன்றவர்கள் உதவலாம். Scotia McLeod போன்ற முதலீட்டு திட்டமிடல் நிறுவனங்கள் இத்தகைய திட்டமிடலை இலவசமாக வழங்குவதுடன் உங்கள் நிதிநிலையைத் தொடர்ந்து பராமரிக்க உதவி வருவார்கள்.

இப்படியான நிதிமுதலீடு செய்யும் வேளைகளில் நிதித் திட்டமிடல் வல்லுனர் உங்கள் நிதிநிலையை பற்றி விரிவாக அறிந்திருப்பது அவசியம். இப்படியான, பெறப்பட்ட விபரங்களில் இருந்து அவர்கள் முதலாவதாக ஏதாவது குறைபாடுகள் அல்லது மாற்றங்கள் செய்யவேண்டியிருப்பின் அதை

- கல்யாணி நாதன் -
நிதி திட்டமிடல் ஆலோசகர்

அறிவுறுத்துவார்கள்.

இத்தகைய அறிவுறுத்தல்கள் உங்கள் தற்போதய வருமானம், எதிர்கால வளர்ச்சி, தற்போதய செலவுகள், காப்புறுதித் தேவைகள், உங்கள் எதிர்கால ஓய்வூதியம், உங்கள் எதிர்கால எதிர்பார்ப்புக்கள், அத்துடன் உங்களுக்குப்பின் உங்கள் சொத்து பகிரப் படவேண்டிய முறை யாவையும் கருத்திற் கொண்டு செயற்படுவார்கள்.

உங்கள் பிரத்தியேக நிதி திட்டமிடல் வல்லுனர் உங்களுடன் தொடர்ச்சியாக செயற்படுவதால் தேசியமாகாண வரிச்சட்டங்களில் காலத்துக்குக்காலம் எற்படும் மாற்றங்களைக் கருத்தில்கொண்டு ஏற்ற அறிவுரைகளையும் வழங்குவார்கள்.

நீங்கள் வேலை செய்து உழைப்பதால் பெறப்படும் பணம் தானாக பணம் செய்யுமானால் அதுவே சிறப்பாகும். உலகத்தின் மிகப்பெரும் பணக்காரராய் இருந்த ரொக்பெல்லர் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உலகத்தில் இரண்டு விதத்தில்தான் பணம் பெறப்படுகிறது. ஒன்று “மனிதன் தொழில் செய்து பணம் செய்வது” மற்றது “பணம் பணம் செய்வது” உங்கள் பணத்தால் பணம் செய்பவரே நிதித் திட்டமிடல் வல்லு

■ ■ ■

typros
typros printing

Business Cards
Invitation Cards
Wedding Cards
Brochers
Booklets
Bulletins
Flyers
Posters
Letter Heads

Message Pads
Note Pads
Tickets
Business Forms
Aplication Forms
Order Forms
Stickers
Labels
Much More.......

உங்கள் நினைவுகளை நாங்கள் அச்சில் கொண்டுவருகிறோம்

- வியாபார அட்டைகள்
- தன்னறிமுக அட்டைகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- பூப்புனித நீராட்டு விழா
- அழைப்பிதழ்கள்
- அரங்கேற்ற மலர்கள்
- விழா மலர்கள்

இது போன்ற உங்கள் அனைத்து அச்சுத் தேவைகளையும் உங்கள் விருப்பப்படி நீங்கள் அச்சில் ஏற்றிட இன்றே நாடுங்கள் Typros அச்சகம்

Call Us Today!

t. 416.635.8761
f. 416.635.7244

3957 Chesswood Drive,Downsview,
ON, M3J 2R8

digi

CTR
கனடியத் தமிழ் வானொலி
416.264.8798

## CTR தகவல் பலகை

### ROOMS / BASEMENT RENT

**Morning Side & Kingston**
3 B/R Basement for Rent.
Near TTC, School
Call: 416 265 3513 / 416 546 2721

**Markham & Ellesmere**
2 B/R Basement for Rent
Big Rooms – Separate Entrance
Call: 416 430 0588

**Birchmount & Ellesmere**
2 B/R Basement for Rent
Cable & All Facilities
Rent - $750 – Separate Entrance
Call: 905 202 4885 / 416 757 0712

**Markham & Ellesmere**
2 B/R Basement for Rent
Separate Entrance (New Stove)
Call: 416 289 8728

**HWY 10 & Eglinton**
1 B/R Basement for Rent
Parking & Near TTC.
Call: 905 507 9737

**Markham & 14th Ave.**
2 B/R. Basement for Rent
Call: 905 201 6673

**Scarborough Golf Club & Lawrence**
2 B/R Basement for Rent
Call: 416 509 0937

**Steels & Brimley**
2 B/R Basement for Rent
Call: 905 470 1293

**Morning Side & Finch**
2 B/R Basement for Rent
Upstairs 1 Room for Rent
( Women or Girls)
Call: 416 910 0487

**Dunforth & Eglinton**
2 B/R Basement fro Rent
Separate Entrance
Call – 416 431 1469 / 416 898 1469

**Warden & Lawrence**
3 B/R House, 2B/R Basement (New)
for Rent
Call: 416 752 6254 / 416 931 6254

**Pharmacy & Lawrence**
2 B/R Basement for Rent from Aug.1st.
Separate Entrance
Call: 416 750 4077

**Neilson/Finch**
4 B/R for Rent
416-910-0487

**Manson/ Ellesmere**
2B/R Basement Apt.
416-617-4671

**Neilson/Finch**
4 B/R for Rent
416-910-0487

**Manson/ Ellesmere**
2B/R Basement Apt.
416-617-4671

**Eglinton/Donmils**
3B/R Condo for sale
416-429-6276

**Markham/Eglinton**
3B/R Condo for rent.
1 room available in 2B/R Apt.
647-409-6759

**Midland / Eglinton**
1 B/R in Basement Sep.ent.
3 B/R in top floor.
416-826-1643

**Old finch/ Stains**
1 B/R Basement
416-298-7336

**McCowan/ 16th Ave.**
2B/R Basement. Immid.
416-414-5562

**Malvern Mall**
2 B/R Basement
416-802-2827

**McCowan / Steels.**
2B/R Basement.
Cable, car park.
905-209-8540

**Jane / Finch**
2 B/R for rent in house.
416-745-0283

**Kennedy/ Eglinton**
1 B/R Basement
416-792-5073

### HOUSE / CONDO FOR SALE

**McCowan & Lawrence**
3 + 1 B/R Bungalow Row House for Sale
2 B/R Basement (Separate Entrance)
Call: 416 439 5405

**Markham & Eglinton**
1700 sq. 3 B/R House for Sale
Call: 416 459 0417

**Keel & Finch**
1 B/R Condo for Sale
Call: 416 456 8895

**Dixie & Becerra**
(Brampton)
200 sq.feet. 4 B/R House
1 B/R Basement for Sale
Call: 905 494 0220

**Warden & Finch**
2 B/R Condo Wanted from August
Call: 416 502 2124

**Warden & McCowan**
Wanted 3 B/R Condo (Finch Area)
Call: 416 546 8043
416 992 1155 / 416

**Kennedy & Ellesmere**
3 B/R New Condo for Sale
Call: 416 754 2873

### AUTO FOR SALE

**1996 Ford Tercel**
$850
1996 Dodge Spent - $800 for Sale
Call: 416 878 4453

**94 Nissan Altma**
220K for Sale
1250 With Certify
Call: 905 888 5809 / 416 809 4415

**94 Nissan Altima SE**
Stranded 180 km
Call: 416 704 7866

**1998 Toyota**
(170km)
1998 Honda – (220 km) for Sale
Call: 416 917 8336

**2002 Toyota Sienna**
120 km
Blue, Full Lorded
Call: 416 939 3977

### OTHERS

**Piano for Sale**
(New)
Key Board Yamaha TSR 160
Call: 905 640 9799

**Trees for Sale**
Call: 905 201 9116

**TV Stand for Sale**
New 52" – 62" $250
Call: 416 754 9359

**Furniture for Sale**
6 Chair with Tables & Dining
table and other Furniture items for Sale
Call: 4516 752 6254

**Furniture for Sale**
2 TV RCA, 2 Coffee Table,
Metal Self for Sale
Call: 416 840 7645

**Painting**
Call - 416-828-5745

**Daycare (1-10)**
Scarborough Golf Club
416-847-9802

**Employment**
Toronto Sun. Delivery.
416-455-3514 / 416-283-7586
Ajax / Pickering

**Plant for sale**
Clay pots in, rose of cheran.
Vilvan: 905-201-9116


## முதலீடு இல்லாமல் (0% Down) எப்படி வீடு வாங்கலாம்?

- வீடு வாங்குவதற்கு முதலிட முற்பணம் இல்லை என்று கவலைப்படுகிறீர்களா?
- வங்கிகள் இப்போது வீடு வாங்கும்போது வீட்டின் விலையின் முழுத்தொகையையும் கடனாகத் தரத் தயாராய் உள்ளன.
- நீங்கள் முதன் முறையாக வீடு வாங்குபவராக இருக்கலாம் அல்லது ஏற்கனவே ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாகக் கூட இருந்திருக்கலாம்.
- இப்படியான ஒரு கடனைப் பெற உங்களுக்கு என்னமாதிரியான தகுதிகள் தேவை என்பதை அறிந்து கொள்ள வேண்டுமா?
- இத்துறையில் பல ஆண்டு கால அனுபவமுள்ளவர்களினால் இது பற்றிய தகவல்கள் கொண்ட ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

416-284-9999
Ext 21 (தமிழ்)
Ext 34 (English)

## வாடகை வீட்டை சொந்தவீடாக மாற்றுவது எப்படி?

- வந்த நாளிலிருந்தே வாடகைக்கே பல ஆயிரம் டொலர்கள் கொடுத்து வாழ்ந்து விட்டீர்களா?
- நீங்கள் கட்டும் வாடகைப்பணத்திலே தான் வீட்டுச் சொந்தக்காரன் தனது ஆழசவபயபந ஐக் கட்டி அந்த வீட்டை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான் என்பதை அறிவீர்களா?
- அந்த வாடகைப் பணத்திலேயே ஏன் நீங்கள் ஒரு சொந்த வீட்டை அமைக்கக்கூடாது?
- நீங்களும் எப்படி ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாக ஆகலாம் என்பதற்கான பல வழிமுறைகளை விளக்கி இத்துறையில் பல ஆண்டுகால அனுபவமுள்ளவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு விசேட அறிக்கை எம்மிடம் உள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

416-284-9999
Ext 20 (தமிழ்)
Ext 33 (English)

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

உங்கள்
சிறு
விளம்பரங்களும்
வீடு
பத்திரிகையில்
விளம்பரமாவதற்கு
416-646-3422

# நீர்ப் பாசனம்

## சூழல் - 5

**- பொன் குலேந்திரன் -**

தென் கிழக்காசியாவிலும் சீனாவிலும் ஜப்பானிலும் மக்களுக்கு சக்தியைக் கொடுக்கும் பிரதான உணவு அரிசி. நன்னீர் இப்பயிரின் உற்பத்திக்கு முக்கியமானது. இதில் நீர்ப்பாசன முறை கடைப்பிடிக்கப்படுகிறது. நீரைத் தேக்கிவைத்து, தேவையான அளவு நீரை வயல்களுக்குப் பாய்ச்சும் முறை பல ஆயிரம் ஆண்டுகளாக பல தேசங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில், சூழல் விருத்திக்கும், உணவு உற்பத்திக்கும் இது அவசியமாகும்.

கி.மு 4000 ஆண்டளவில், தெற்கு பபிலோனியாவில்(இராக்) நீர்ப்பாசனம் பற்றி கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னரே நீரின் உபயோகம் பற்றி மக்கள் அறிந்திருந்தனர். பண்டைய நாகரீகங்கள், நகரங்கள் நதிக் கரை ஓரங்களில் தோன்றின. இந்து மதத்தின் நான்கு வேதங்களில் ஒன்றான இருக்கு வேதத்தில் நீர்ப்பாசன வாய்க்கால்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தென் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறிய திராவிடமக்கள், தென் இந்திய நீர்ப்பாசன முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தினர். இயக்கர், நாகர் இன மக்கள் கூட நீர்ப்பாசன முறைகளைக் கடைப்பிடித்தனர். ஆனால் இதற்கான கல்வெட்டுகளோ ஆதாரங்களோ இல்லை. விஜயன் ஆட்சியில் மதுரை நகருடன் இவனுக்கு திருமணத் தொடர்பு இருந்ததினால் நீர்ப்பாசன முறையை தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு அவன் அறிமுகப்படுத்தி இருக்கலாம். ஆனால் மகாவம்சம் பல சிங்கள மன்னர்களினால்தான் பிரமாண்டமான குளங்கள் விவசாயத்துக்காக அமைக்கப்பட்டது என்கிறது. மகாசேனன்,பராக்கிரம பாகு, வசபாகு ஆட்சிகாலத்தில் மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம் போன்ற குளங்கள் கட்டப்பட்டது என்கிறது இலங்கை சரித்திரம். அனுராதபுரத்தில் பல குளங்களை சிங்கள மன்னர்களே கட்டினர் என்கிறது மகாவம்சம். இதில் சோழ மன்னர்களுக்கும் அவர்களது ஆட்சிக் காலத்தில் பங்குண்டு என்பதை எழுத மறந்துவிட்டார்கள். பொலநறுவையையும் சோழர் ஆண்டனர். காவேரி நதி ஓரத்தில் விவசாயத்துக்கு வழி வகுத்த சோழர்கள், இலங்கையில் தங்கள் ஆட்சிக்காலத்தில் ஏன் நீர்ப்பாசனத்தை அறிமுகப்படுத்தியிருக்க முடியாது?



வன்னிப்பகுதி குளங்கள்

வன்னிப் பகுதியில் உள்ள வவுனிக்குளம், அனுராதபுரத்தில் உள்ள திசாவெவ ஒரே காலகட்டத்தில் உருவாகியவை. அக்குளத்துக்கு மழை காலத்தில் வழிந்தோடும் வரண்ட வன்னி ஆறுகளிடம் இருந்து நீர் பெறப்பட்டது. பாலிநதியில் இருந்து இக்குளம் நீரைப்பெற்றபடியால் ஒரு காலத்தில் பாலிவாவி என அழைக்கப்பட்டது. மகாவம்சத்திலும் இக்குளத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே துட்டகைமுனு காலத்திற்கு முன்னரே இக்குளம் உருவாக்கப்பட்டிருக்கலாம்.கி.மு 3ம்நூற்றாண்டு காலத்தில் 40வருடங்கள் ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனால் கட்டப்பட்டிருக்கலாம் என்பது பலர் கருத்து. ஆனால் போதிய ஆதாரங்கள் இல்லை. 9700 அடிகள் நீளமுள்ள பாவற்குளமும் கி.மு 3ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. 18 அடிகள் ஆழமுள்ளது இக்குளம். கட்டுக்கரைக் குளத்தை பண்டைய காலத்தில் ஊருவலை குளம் என அழைத்தனர். ஊரைச்சுற்றி உள்ள குளமாதலால் அப்பெயர் வந்திருக்கலாம். இக்குளம் இப்போது முருங்கனுக்கருகே உள்ள இராட்சத குளமாகும் (Giants Tank). வன்னியில் தண்ணிமுறிப்பு, முத்தையன்கட்டு, விஸ்வமடு, கணுக்கேணி குளம் ஆகியவை குறிப்பிடப்படவேண்டியவை. இவை யுத்தம் காரணமாக சீர்திருத்தப்படவேண்டிய நிலையில் உள்ளன.

நீரின் சக்தியையும் பயனையும் அறிந்த பண்டைய மன்னர்கள் இலங்கையில், அனுராதபுரம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவை, ஹம்பாந்தோட்டை பகுதிகளில் குளங்களை அமைத்து விவசாயத்துக்கு வழி வகுத்தனர். வன்னிப் பகுதியில் மழைகாலங்களில், கட்டுக்கடங்காமல் மழை நீரானது கடலை நோக்கி ஓடி மறைகிறது. மழைநீரை விரையமாகாமல் தடுத்து நிறுத்த, குளங்களை குறுநில மன்னர்கள் கட்டினார்கள்.

வரண்ட பிரதேசங்களை பசுமை நிறைந்த பயனுள்ள நிலமாக்கும் சக்தி மழை நீருக்குண்டு. ஒருகாலத்தில் இலங்கைத் தீவினை கிழக்கின் நெற்களஞ்சியம் என அழைத்தனர். இன்று நிலைமை மாறி, சோற்றுக்கு பிறநாடுகளை கையேந்தி வாழும் நிலமை உருவாகியுள்ளது.

**நீர்ப்பாசனத்தைச் செயல்படுத்த இரு முக்கிய முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.**

சேமிப்பின் அடையாளம்
அழகானதோர் வீடு...



வீடு வாங்க விற்க அல்லது
அது சம்பந்தமான விபரங்களுக்கும்
குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ்
செய்யவும் நட்புடன் அழையுங்கள்....

Tel: 416-843-8585
Bus: 416-290-1200



KUGA RAVEENDRARAJAH
Broker

Century 21.
Affiliate Realty inc. 80 Corporate Drive, Suite 208, Toronto Ont.

குளத்தின் கரைகள் பலம்வாய்ந்ததாகவும் உயரமாகவும் இருத்தல் வேண்டும். மழை காலத்தில் கரை உடைந்து நீர் பெருக் கெடுத்து ஓடாமல் இருத்தல் வேண்டும். மழை காலங்களில் நீர் விரையமாகாமல் குளங்களில் சேமிக்க இது உதவும். இதற் காக உயரமான குளக்கட்டுகள் கொண்ட குளங்களை தோற்றுவித்தனர். கோடைக் காலங்களில் தேவையான அளவு நீரை குளங்களில் இருந்து வாய்க்கால் மூலம் வயல்களுக்குப் பாய்ச்சுவார்கள். பச்சைப் பசேலெனத் தோற்றமளிக்கும் நெல்வயல் கள் ஊடாக வளைந்து செல்லும் நீர் நிரம் பிய வாய்க்கால்கள் பார்ப்பதற்கு கண்ணுக் குக் குளிர்ச்சியாக இருக்கும். சிறுவர்கள் இவ்வாய்க்கால்களில் குளித்து மகிழ்வர். வாய்க்கால் ஓரங்களில் நிற்கும் வெண் கொக்குகள், எங்கே மீன்கள் தம் பார்வைக்கு எட்டாதா என ஏங்கி நிற்கும் காட்சியே தனி அழகு. மேலே நீல நிற வானம் கீழே பச்சை நிறப் பயிர்கள். அதில் வரிசையாக நிற்கும் வெண்ணிறக் கொக்கு கள். இந்த வர்ணஜால காட்சி கவிஞர் களின் கற்பனையைத் தூண்டிவிடுகிறது. ஒரு சிறு சலசலப்பு கேட்டவுடன் கொக்கு கள் எல்லாம் ஒற்றுமையாக ஒரே நேரத்தில் ஒன்றாக மேலே எழும்பி பறந்து செல்லும் காட்சி கிராமப்புறத்தில் இயற்கையின் கண் கொள்ளாக் காட்சியாகும்.

இரண்டாவது நீர்ப்பாசன முறையானது, நதியின் நீரை சிறு வாய்க்கால்கள் வழியே பெரிய வாய்க்காலுக்கு திசை திருப்பி வெகு தூரத்தில் உள்ள வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதாகும். இம் முறை தமிழ்நாட் டிலும், வடமேற்கு இந்தியாவிலும், மத்திய இந்தியாவிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இராக்கில் உள்ள யூப்பிரட்டீஸ் நதி ஓரத் திலும் எகிப்தில் உள்ள நைல் நதி ஓரத் திலும் இம்முறை ஆரம்பிக்கப்பட்டது. கி.மு 1500– 3000 ஆண்டளவில் செழித்து இருந்த இந்து நதி பள்ளத்தாக்கு நாகரீகத்தில் வாய்க்கால் வழியேயான நீர்ப்பாசன முறை இருந்துவந்தது என்பதற்கு தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் ஆதாரங்கள் உண்டு. தொல்பொருள் ஆராய்ச்சியின் போது இந்து நதிபள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட சின் னங்கள் விவசாயத்தையும் நீர்பாசனத்தை யும் வெளிக்காட்டுகிறது. இந்து நதிப் பள்ளத்தாக்கில் கிமு 1500-3000ல் வாழ்ந்த மக்கள், இந்து நதிவழியே தடம் புரண்டு ஓடியநீரைக் கட்டுப்படுத்தி, வாய்க்கால் வழி யேயான நீர்ப்பாசனம் மூலம் கோதுமை, அரிசி, பார்லி முதலான பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். மொசப்பட்டேமியா என்று அழக் கப்பட்ட இராக் தேசத்தின் யூப்பிரட்டஸ் நதியில் இருந்து உருவாகிய நீர்ப்பாசன முறையையும்,நைல் நதி பிரதேச முறை யையும் இந்து நதிப் பள்ளத்தாக்கு மக்கள் பின்பற்றினர். இம்மூன்று நாகரீகங்களுக் கிடையே தொடர்பு இருந்ததிற்கு ஆதாரங் கள் உண்டு. நைல் நதி, யூப்பிரட்டீஸ்-டைகிறீஸ், இந்துநதி ஆகிய மூன்று பெரும் நதிகளைச் சுற்றி நாகரீகமும் கலாச்சார மும் வளர்ந்தது. எங்கு நீர் தாராளமாக இருந்ததோ அதைச்சார்ந்து நகரங்கள் தோன்றின. விவசாயம் வளர்ந்தது. உணவு உற்பத்தி பெருகியது.

இந்துநதியில் பெருவெள்ளம் புரண்டோடிய காலத்தில் மக்களைப்பாதுகாக்க உயர மான கற்களை நதியின் ஓரத்தில் அமைத் தனர்.

தமிழ் நாட்டில் ஏரிகளுக்கும் நதிகளுக்கும் குறைவில்லை. கல்லணை ஏரி கரிகாலன் என்ற மன்னனால் சுமார் 1600 ஆண்டு களுக்கு முன்னர் கட்டப்பட்டது. சிவகங்கை யில் 10,000க்கு மேற்பட்ட குளங்கள் உண்டு. குளங்களைப் பராமரிப்பது அது அமைந்துள்ள கிராமத்து மக்களின் பொறு ப்பு. உணவு உற்பத்தியில் இருந்து வரும் வருமானத்தில் 4 விகிதம் குளங்களின் அணைகளினது பராமரிப்புக்குச் செலவு செய்யப்படுகிறது. நீர் பங்கீட்டு பிரச்சனை-களை கிராம மக்கள் பஞ்சாயத்து மூலம் தீர்த்து வைப்பதுண்டு. பண்டைய தமிழ் நாட்டு மன்னர்கள் குளங்களைக்கட்டி விவ சாயத்தைப் பெருக்கினார்கள். இலங்கை மேல் படையெடுத்து கைப்பற்றி ஆட்சி புரிந்த காலத்தில் அங்கும் அம்முறையைப் பின்பற்றினர். திருகோணமலை மாவட்டத் தில் உள்ள பிரமாண்டமான கந்தளாய்க் குளத்தை உருவாக்கினவன் குளகோட் டான் என்ற மன்னன். பல குளங்களை கட்டியபடியால் குளத்தைக் கட்டியவன் என் பதில்இருந்து அவனது நாமம் குளக்கோட்ட னாக மருவியிருக்கலாம். திருகோணமலை கோணேஸ்வரார் கோயிலின் வளர்ச்சியிலும் அவனுக்குப் பங்குண்டு. பல நெல் வயல் களை சாசனத்தில் கோயிலுக்கு எழுதி வைத்து அதில் இருந்து விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கோணேஸ்வரக் கோயில் பரிபாலனம் செய் யப்பட்டது.

## யாழ் குடாநாடும் நன்னீர்க் கிணறுகளும்.

யாழ் குடாநாட்டில் 600க்கு மேற்பட்ட குளங்கள் உண்டு.இவைகள் பெரும்பாலும் மனிதனால் உருவாக்கப்பட்டவை அல்ல. இயற்கையாகவே தோன்றியவை. சுண் ணாம்புக் கற்பாறைகளை மழை நீர் ஊடு ருவி அப்பள்ளங்களைக் குளமாகத் தோற் றுவித்தது. மழை நீர் இச்சுண்ணாம்புக் கற்பாறைகளுக்கு அடியில் தேங்கிநிற் கிறது. கிணறுகளுக்கு குடாநாட்டிலும் அதைச் சுற்றியுள்ள தீவுகளிலும் குறை வில்லை. தீவு மக்கள் கிணற்று நீரையே நம்பி விவசாயம் செய்து வாழ்கிறார்கள். கிணற்று நீரானது கடல் மட்டத்தைப் பொறுத்துள்ளது. கிணறுகள் கடல் மட்டத் துக்கு கீழே உள்ளதால் நிலத்துக்கடியில் உள்ள சுண்ணாம்புக் கற் பாறைகள், கடல் நீரை வடிகட்டி நன்னீராக மக்களுக்கு அளிக்கிறது. இந்த அமைப்பு சிலாபத்துக் கருகே உள்ள கடலோரக் கிராமமான உடப்பில் காணலாம். இக் கிராமத்தில் கடலுக்கு வெகு அருகே சிறு ஆழத்தில் குடிப்பதற்குரிய நன்னீரை கிராமவாசிகள் பெறுகிறார்கள். மாரிகாலத்தில் பெய்யும் கடும் மழை கிணறுகளை நிரப்பினாலும் காலப் போக்கில் நீர் மட்டம் குறைந்து ஒரு அளவை அடைகிறது.

## முக்கியமான மூன்று கிணறுகள் யாழ் குடாநாட்டில் உள்ளன.

ஒன்று 140 ஆடி ஆழம் உள்ள புத்தூர் கிணறு. இதில் உள்ள நீரின் மேல்பாகத் தில் நன்னீரும் அடிப்பாகத்தில் உப்புச்சத் துள்ள நீரும் அமைந்துள்ளது. அக்கிணற் றின் நீர் மட்டம் கடல் மட்டத்தின் மாற் றத்தில் தங்கியுள்ளது. கிணற்றுக்கும் கடலு க்கும், நிலத்துக்கு கீழ் மக்னீசியம் கலந்த சுண்ணாம்புக் கற்களின் தொடர்புண்டு. நவகிரியில் உள்ள நிலாவரைக் கிணறும் பிரசித்தமான தொன்று. மூன்றாவதாக தெல்லிப்பளை ஊரில் உள்ள கிணறு. இது மழையாலும் வரட்சியாலும் மாறுபடாத தொன்று. ஆனையிறவு உப்புக் கடலை கிழக்கேயும் மேற்கேயும் அரண்கள் கட்டி, சீர் திருத்தி மழை நீரை விரையமாகாமல் பாதுகாக்கக் கூடிய திட்டம் பல வருடங் களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டாலும் செயல்படுத்தப்படவில்லை.

■ ■ ■


**Basement for Rent.**

Brimley & Eglinton

2அறைகள் கொன்ட விசாலமான நிலக்கீழ் குடியிருப்பு வாடகைக்கு உண்டு.
பாடசாலை, TTC, Nofrills, போன்ற பல வசதிகளுடன்

தனி வழியும் ( Seperate Entrance )உண்டு

**தெடர்புகளுக்கு 416 264 4173**



# CELL TELL MOBILITY

**FOR ALL YOUR CELLPHONE AND ACCESSORY NEEDS...**

We sell new & used cellphones, pagers and accessories for:

**Rogers Wireless, Fido, Telus Mobility, Bell Mobility**



NEW

**VIDEO CALLING**

Talk face to face with your friends and family in real time with video calling

**UNLIMITED LOCAL CALLING !!!**

**$40 /Month**


PREPAID ONLY




BLACKBERRY 8800



NOKIA N95




SAMSUNG I600

## CELL TELL MOBILITY WIRELESS REPAIR CENTRE

NOKIA, MOTOROLA PANASONIC, SONY ERICSSON, SAMSUNG

Display, Antenna Replacement and all the repairs... Call us first....

**PHONE RENTAL** • Planning a Vacations? You can rent a world wide GSM Phone

**We Also UNLOCK GSM PHONES**

| Eglinton/Midland | 16th Ave/Markham | Birchmount/Finch |
|---|---|---|
| 2687 Eglinton Ave. East | 220 - 5990 16th Ave. | 5C - 2950 Birchmount Road |
| 416.266.6818 | 905.201.4859 | 416.495.7776 |

Call Toll Free: 1.877.312.5123

Shop Online @ www.celltelmobilty.com

# “விடுமுறையில்” போவதற்கு முதல்

- நடராஜ் -

“கொஞ்சம் நில்லுங்கப்பா!”

விடுமுறையில் போகப்போகின்றோம் என்று நினைத்தவுடனேயே புதிய உற்சாகம் தொற்றிக் கொள்ளும். வேலைக்களைப்பு, கடன் தொல்லை, குடும்பநிலைமை எல்லாமே மறந்துவிடும். களிப்பான விடயம் அல்லவா? (விடுமுறையில் பிரம்லிபீச்சுக்கு போவதைப் பற்றி நான் சத்தியமாய்ச் சொல்லவில்லை)

ஆனால் விடுமுறை முடித்து வீட்டுக்குத் திரும்புகின்ற போது பல சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

- ஒருத்தருடைய வீட்டுப் பைப்லைன் உடைந்து எக்கச்சக்கமான நட்டம். வெப்பநிலை பூச்சியத்துக்கு கீழ் இருபது பாகைக்கும் குறைந்த நாள் ஒன்றில் இது நடந்துமுடிந்திருந்தது. அந்த நேரம் யாழ்ப்பாணத்து வெய்யிலில் நண்பர் வெய்யில் குளியல் போட்டுக் கொண்டிருந்தார்.
- இன்னொருத்தர் வீட்டு தபால்பெட்டி நிரம்பி வழிந்து, பின்னர் காற்றில் பறந்து தெருத் தெருவாகக் கிடந்தது.
- மற்றொருத்தர் வீட்டுவாசலில் ஒரு பத்திரிகைக் கடையே கிடந்தது. முப்பது நாள் பேப்பர் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்து.

வழமையாக அரைக் கிலோமீற்றருக்கு அப்பால் இருந்து பேப்பரை எறிகின்றவன் இப்படி அழகா அடுக்கிவைப்பான் என்று நம்பமுடியாது. யார் அடுக்கிவைத்தது என்பதற்கு விடை சில நிமிடங்களில் கிடைத்தது. மலையாக கிடந்த பேப்பரைக் கண்டதும் அந்த வீட்டுக்காரார், நீண்டநாள் வெளியில் போய்விட்டனர் என்பது பாக்தாத் திருடர்களுக்கு தெரிந்துவிட்டது. சாரி, ரொறன்ரோ திருடர்களுக்குத் தெரிந்துவிட்டடது. குப்பையாக கிடந்த பேப்பர்களை அடுக்கிவைக்கின்ற சாட்டில் வீட்டுக்கு வந்து திருடர்கள் தங்கள் கைவரிசையையும் காட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

எனவே விடுமுறையில் போகின்றவர்கள் போவதற்கு முன்பாக பல விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

- உங்கள் வீட்டுக்கு முன்புறம் போடப்படும் பத்திரிகைகள் மற்றும் தபால் பெட்டியில் போடப்படும் கடிதங்களை, நம்பிக்கைக் குரிய உறவினர் அல்லது நண்பர் மூலமாக இரண்டு தினங்களுக்கு ஒரு தடவையாவது எடுத்துவைப்பதற்கு ஒழுங்கு செய்துவிடுங்கள்.
- காசு கொடுத்து வாங்கும் பத்திரிகை தற்காலிகமாக நிறுத்தினாலும், கடிதத்துடன் வரும் குப்பைகளும், இலவசமாக உங்கள் வீட்டுக்கு கொண்டுவந்து போடப்படும் விளம்பரப் பொதிகள், பேப்பர்கள் என்பன உங்கள்வீட்டில் குவிந்து காட்டிக் கொடுத்து விடும்



- வீட்டில் உள்ள எல்லாக் கதவுகளும், யன்னல்களும் நன்றாக தாளிடப்பட்டுள்ளனவா? என்பதை ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வீட்டுத்திறப்பை ஒரு போதும் வீட்டுக்கு வெளியால் மறைத்து வைத்து விட்டுப் போகவேண்டாம்.
- எல்லா மின் சக்தி உபகரணங்களின் மின் இணைப்புகளையும் (தொலைக்காட்சிப் பெட்டி, மின்கணினி, அடுப்பு...) துண்டித்து விடுங்கள்.
- குளிர்சாதனப் பெட்டியில் இருந்து நீங்கள் வருவதற்குள் பழுதாகிவிடக்கூடிய எல்லா பொருட்களையும் முன்கூட்டியே எறிந்து விடுங்கள்.
- வீட்டுக்குள் உள்ள சில மின் விளக்குகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒளிர்ந்து பின் மடியுமாறு Timer மூலம் Set பண்ணவும்.
- குளிர்காலம் என்றால் உங்கள் வீட்டுக்கு முன் விழுகின்ற பனியை (Snow) வைவழிப்பதற்கு உரிய ஒழுங்குசெய்துவிட்டுப் போகவும். கோடை காலம் என்றால் உங்கள் வீட்டுப் புல்லுக்கு தண்ணீர் விட ஒழுங்கு செய்யவும். தண்ணீர் பாச்சுவதை Timer மூலமும் Set பண்ணலாம்.
- நம்பிக்கையான Neighbor இடம், நீங்கள் வீட்டில் இல்லை என்பதையும், எப்போது வருவீர்கள் என்பதையும், அதுவரை உங்கள் வீட்டின் மீது ஒரு கண்வைத்திருக்குமாறும் சொல்லிவைப்பது எப்போதும் சிறந்தது. அவசரத்துக்கு உங்களுடன் தொடர்பு கொள்ள அவரிடம் உங்கள் விடுமுறை இடத்து தொலைபேசி இலக்கம், விலாசம், அல்லது மின்னஞ்சல் விலாசத்தையும் கொடுப்பது நல்லது.
- உங்கள் வீட்டுக்கு alarm வசதி உண்டு என்றால், உங்கள் alarm companyக்கு நீங்கள் விடுமுறையில் செல்வதையும், எப்போது திரும்பிவருவீர்கள் என்பதையும் அறிவித்து விட்டுச் செல்லுங்கள்.
- அதே போல உங்கள் ஏரியா பொலீசிடமும், நீங்கள் இல்லை என்ற விடயத்தை கூறிவிடுங்கள். அவர்களும் உங்கள் வீட்டில் ஒரு கண்வைத்திருப்பார்கள்.
- பணம், நகை, முக்கிய பத்திரங்கள், மற்றும் பெறுமதியான பொருட்களை வீட்டினுள் வைக்காதீர்கள். தற்காலிகமாக ஆயினும், வங்கியில் வைத்து விட்டுப் போங்கள். வங்கியில் வைக்க முடியாத பெரியபொருளானால் அதை நம்பிக்கையான உறவினர் அல்லது நண்பர் வீட்டில் வைக்கவும்.
- உங்கள் வீட்டில் நாய், பூனை, மீன் என்று செல்லப்பிராணிகள் இருந்தால் அவற்றை உரிய முறையில் பராமரிக்க உரிய ஒழுங்கு செய்ய வேண்டும். தினமும் அவற்றைக் கவனிக்க நம்பிக்கையான ஆட்களை ஒழுங்கு செய்ய வேண்டும்.
- உங்கள் வீட்டின் வெப்பநிலை குறைந்தபட்சம் 17 பாகையில் செல்சியஸ் இல் இருக்குமாறு Set பண்ணி விட்டுச் செல்ல வேண்டும்.

■ ■ ■

ELROD
Renovation
Kitchen
Washroom
Hardwood Flooring
Laminate Flooring
Tiling
Electrical
Plumbing
Separate entrance
Full basement
Over 12 years of experience
For free estimate and consultation contact
Prem @ 416-712-1016

Logos
Flyers
Businesscards
Brochures
Cover Designs
Banners/ Posters
Vinyl Signs
Religious Program Recording/Mixing
Radio Commercials
Tamil Karaoke Songs
Tape to CD Transfers
CD Albums
Voice Dubbing & Re-recordings
Audio Mixing & Mastering
Video Commercials
Logo Animation
Short Films
HD Movie Production
"Connecting your voice to media"
STS ADVERTISING
416 640 5445
stsads@gmail.com

# நரிப் பிசாசுகளும் சவப்பெட்டியும்



**Martha Helen Kostyra Stewart**

பிறப்பு: August 3, 1941 (age 65)
Nutley, New Jersey

**தொழில்:** முன்னாள் பங்குச்சந்தை முகவர், பஸன் மொடல், வீட்டு அலங்கார நிபுணர், பத்திரிகையாளர், Marths Stewart Livimg Programm தயாரிப்பாளர், அறிவிப்பாளர்.

ImClone என்ற மருந்து தயாரிக்கும் நிறுவனத்தின் பங்குகளை விற்றதில் ஏற்பட்ட மோசடிக்காக 5 மாதம் சிறை வாசமும், 5 மாதம் வீட்டுக் காவலிலும் அடைக்கப்பட்டார். இவர் பங்குகளை விற்ற அடுத்த நாள், ImClone ன் பங்குகள் 16 விகிதம் வீழ்ச்சி யடைந்தன.

சொத்து மதிப்பு: $638 million
துணைவர்: Andy Stewart (divorced)



**Sanjay Kumar**

**பிறப்பு:** 1962
கொழும்பு, இலங்கை

1976ல் அமெரிக்கா வருகை.

**தொழில்:** 1987ல் UCCELல் இயக்குன-ராக வேலை பார்த்த பொழுது, அந்த நிறுவனத்தை Computer Associates நிறுவனம் வாங்கியது. அதன் பின்னர் துணைத்தலைவர், பின்னர் President, CEO–Computer Associates ஆக உயர்ந்தார்.

November 02,2006ல் Computer Associates நிறுவனத்தின் பங்குகளை மோசடி செய்ததற்காக 12 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இவர் கணக்குப் புத்தகங்களை அதிக நாட்கள் (35) திறந்து வைத்திருந்தார். இதனால் பங்கின் விலையை தனக்கு சாதகமாக்கினார். இவருடன் இணைந்து செயல்பட்ட சிலரும் சிறையில் அடைக்கப்பட்டனர். மொத்த மோசடி 800 மில்லியன் டொலர்கள்.

NewYork Islanders என்ற பிரபல கொக்கி நிறுவனத்தில் இவருக்கு 50விகிதம் சொந்தமாகியிருந்தது.



**Alan Eagleson**

பிறப்பு: சித்திரை 24, 1933,
சென். கதீரினஸ், ஒன்ராரியோ

தொழில்: சட்டத்தரணி, ஹொக்கி விளையாட்டு வீரர், முகவர், NHLPA (National Hockey League PlayersAssociation)ன் முதலாவது முகாமைத்துவ இயக்குனர் (1967-1991)

அரசியல்: 1963-1967 MPP Lakeshore, Ontario,

Alan Eagleson Progressive Conservative Partyன் மிக முக்கிய உறுப்பினர். பிரதமராவதற்கு உரிய தகுதிகள் கொண்டவர் என கட்சியின் முக்கியஸ்தர்களால் கருதப்பட்டவர்.

பட்டங்கள்: Order of Canada, Hockey Hall of Fame – NHL

1972ம் ஆண்டு முதலாவது கனடா கிண்ணம் வெற்றி பெற பெரும் காரரண கர்த்தா.

குற்றங்கள்: கொக்கி விளையாட்டு வீரர்களது பென்சன் பணத்தை கையாடல் செய்தமை.

1984, 1987, 1991 கனடா கிண்ணம் பணத்தைக் கையாடியமை.

இவர் பொஸ்ரன் மற்றும் ரொரண்ரோ நீதிமன்றங்களில் தண்டனை பெற்றவர்.



**Bernard John Ebbers**

| | |
|---|---|
| பிறப்பு: | August 27, 1941<br>Edmonton, Alberta, Canada |
| Conviction(s) | Fraud, |
| conspiracy | மொத்த மோசடி 11 பில்லியன் World Com நிறுவனத்தின் (much of it a pattern of chalking up expenses as long-term capital expenditures, which are classified as assets.) |
| Penalty | 25-year imprisonment |
| Spouse: | Linda Piggott (divorced), Kristie Webb<br>மொத்த சொத்து 1.4பில்லியன் டொலர்கள். |

இவர்கள் வெள்ளை சட்டை குற்றவாளிகள். வெள்ளை சட்டை தூய்மையைக் குறிக்கும். இக் குற்றவாளிகள் முகாமைத்துவ நிர்வாகத்தில் உள்ளவர்கள். ஒரு நிறுவனத்தை வழிநடாத்துபவர்கள். அதன் மிக முக்கிய முடிவுகளில், இவர்களது கருத்துகள் முக்கியத்துவம் பெறும்.

கடந்த பலதசாப்தங்களாக வட அமெரிக்காவில், மிக முக்கிய கணக்குப் பரிசோதனை நிறுவனங்களும் (Audit Firms) மிகப்பெரிய நிறுவனங்களின் மோசடியில் உதவி புரிந்துள்ளன. அத்துடன் இந்த நிறுவனங்களும் மோசடியில் ஈடுபட்டுள்ளன.

Enron நிறுவனத்தின் கோப்புக்களை Author Anderson நிறுவன அதிகாரிகள் அழித்துள்ளனர்.அமெரிக்காவின் ஐம்பெரும் கணக்குப் பரிசோதனை நிறுவனங்களுள் ஒன்றான, இந்த நிறுவனம் தனது தகுதி அனுமதி சட்டப் பத்திரத்தை, இந்த மோசடியால் இழந்தது. அத்துடன் இந்த நிறுவனமும் மூட வேண்டி வந்தது.

கடந்த சில மாதங்களாக பத்திரிகைகளில் அடிபடும்பெயர், ஒரு மிகப்பெரிய பத்திரிகை அதிபரின் பெயர். அவர் Conrad Black. ஒரு காலத்தில் உலகின் மூன்றாவது மிகப் பெரிய பத்திரிகை அதிபர். இவரது பூர்வீகம் மொன்ரியல், கியூபெக். ஆவணி 25ம் நாள் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட "ரின்ரி" கல்லூரியில், சோதனைத்தாள்களை விற்றமைக்காக, கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் லவால் பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்பை முடித்தார்.

இவர் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு சாராயத் தொழிலதிபர். இவரது தாயார் Great West Life மற்றும் Daily Telegrpah நிறுவனங்களின் ஸ்தாபகர்களின் பேத்தியாவர்.

பிளாக்கின் முதல் மனைவி Joanna Hishon. இவர்களுக்கு இரு பிள்ளைகள் உண்டு. இவரது இரண்டாவது மனைவி Barbara Amiel இவருக்கு இது நான்காவது திருமணம். யூத இனத்தைச் சேர்ந்த இவர், லண்டன் The Spectator பத்திரிகையின் இயக்குனராவர். பின்னர் ரொரண்ரோ சன் பத்திரிகையின் ஆசிரியருமாவர்.



**- ரதன் -**

1984ம் ஆண்டு Angus நிறுவன டொமினியன் ஸ்ரோரஸ்ன் ஊழியர்களின் பென்சன் பணத்தில் முதலீட்டில் கிடைக்கப்பெற்ற இலாப் பணமான 56 மில்லியனை தன்வசமாக்கியதற்கு எதிரான வழக்கில், சுப்பீரிம் கோர்ட் இவருக்கு எதிராக தீர்ப்பளித்தது. இவரது திருவிளையாடல்கள் அன்று ஆரம்பமானதுதான். இன்று வரை ஓயவில்லை. பல நிறுவனங்களை இணைத்து Hollinger International தோன்றியது. இந்த நிறுவனம் The Chicago Sun-Times , The Jerusalem Post போன்ற நிறுவனங்களின் (பத்திரிகை) தலைமை நிறுவனமாகும். இங்குதான் இவருக்கு சோதனை. அமெரிக்க அரசு இவருக்கும், இவரது சகாக்களுக்கும் எதிராக 17 குற்றங்களை சுமத்தியது. இவற்றின் சுருக்கங்கள்:

- சுமார் 2.9 மில்லியன் பணத்தை ஓர் பத்திரிகை நிறுவனத்துக்கு அனுப்பியமை.
- திட்டமிட்டு அமெரிக்க பங்கு கண் காணிப்பு மையத்துக்கு தவறான தகவல் களை அனுப்பியது,
- பிளாக்கின் மனைவியின் பிறந்த தினத்தை நிறுவனத்தின் பணத்தில் $62,000.00 கொண்டாடியது,
- மூன்று மில்லியன்டொலருக்கு நியுயோர்க் நகரில் (மன்காட்டன்) தொடர் மாடி வீடு ஒன்றை நிறுவனப் பணத்தில் வாங்கியமை.
- கோலிங்கரின் கோப்புக்களை (13 பெட்டிகள்) அமெரிக்க பங்கு கண்காணிப்பு மையத்திடம் இருந்து மறைத்தமை.
- கோலிங்கர் நிறுவனத்தின் லாபத்தை 1999ல் 13 மில்லியனால் குறைத்தமை,
- 2000ல் 16 மில்லியனால் குறைத்தமை.

இவரது பிரச்சினையே சிறு கொலிங்கரின் பங்குதாரர்களால்தான்..இவர்கள் அமெரிக்க பங்கு கண்காணிப்பு மையத்திடம் புகார் கொடுத்தமையே. பிளாக் ஆரம்பத்திலிருந்தே தனது திருவிளையாடல்களை ஆரம்பித்து விட்டார். இவருக்கு அரசியல் பலமும் இருந்தது. இவரது நிறுவனங்களின் Board of Directors ஆக முன்னாள் பிரதமர்கள் மார்கிரட் தச்சர், பிறையன் மல்ரோனி இருந்துள்ளனர். ஆனாலும் முன்னாள் கனடியபிரதமர் கிறிச்சியனுடன் பிரித்தானிய பட்டத்துக்காக மோதினார். இதிலும் இவர் நீதி மன்றம் சென்ற பொழுதும் இதிலும் இவருக்குத் தோல்வியே.

2004ல் தொடங்கிய இவரது வீழ்ச்சி, 2007ல் சிறைவரை சென்றுவிட்டது. ஆனாலும் 2009 வரை இவர் சிறை வாசத்தைச் சந்திக்க மாட்டார். மேன் முறையீடு, அதன் தீர்ப்பு என காலத்தை ஓட்டி விடுவார். இவருக்காக வாதிடும் வழக்கறிஞர் கனடாவின் பிரபல கிரிமினல் வழக்கறிஞர் Edward Greenspan. எது எப்படியிருப்பினும் இவரது சிறைவாசம், சற்றுத் தள்ளியாவது நடைமுறைப்படுத்தப்

> “கடந்த பல தசாப்தங்களாக வட அமெரிக்காவில், மிக முக்கிய கணக்கு பரிசோதனை நிறுவனங்களும் **(Audit Firms);** மிகப் பெரிய நிறுவனங்களின் மோசடியில் உதவி புரிந்துள்ளன. அத்துடன் இந்த நிறுவனங்களும் மோசடியில் ஈடுபட்டுள்ளன.”

49ம் பக்கம் பார்க்க...

# நரிப் பிசாசுகளும் சவப்...

48ம் பக்கத் தொடர்ச்சி...

படும்.



## அமெரிக்க அரசும் கனடிய அரசும் இதனைத்தடுக்க வழிகள் மேற்கொண்டுள்ளனவா?

Sarbanes-Oxley Act of 2002 அமெரிக்க அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் நிறுவனங்களின் கணக்குகளைப் பரிசோதிக்கும் நிறுவனங்கள் கண்காணிக்கப்படுகின்றன. இவர்களது கடமைகள் தெளிவுபடுத்தப்படுகின்றன. அத்துடன் நிறுவனத்தின் கையொப்பமிடும் அதிகாரிகளின் கட்டுப்பாடுகள் போன்றன தெளிவு படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இது மேலும் மிகக் கடுமையான சட்டங்களையும் கொண்டுள்ளது.

இது போன்ற ஒரு சட்டத்தை கனடாவில் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கனடிய சட்டங்கள் நிறுவனங்களுக்கு சாதகமானவையே.

கீழ்க்கண்ட நிறுவனங்கள் கடந்த காலங்களில் சட்டத்துக்குப் புறம்பாக செயற்பட்ட நிறுவனங்கள். இவை வெறும் உதாரணங்கள் அல்ல. மக்களுக்குச் சொந்தமான வரிப்பணத்திலும் இவர்களுக்கு லாபமே.

- 2006 HP Spying Scandal
- Adelphia scandal
- BAE Systems bribery scandal in Saudi Arabia (Al Yamamah contract)
- Bre-X scandal
- Clearstream, Compass Group, bribed the United Nations in order to win business.
- Enron accounting fraud, involving Arthur Andersen
- Exxon over reporting of oil reserves
- Fannie Mae underreporting of profit
- Firestone Tire and Rubber Company for use of child labor
- Ford Pinto scandal
- Guinness affair
- Hafskip's collapse
- Halliburton overcharging government contracts
- Harken Energy Scandal
- Lernout & Hauspie accounting fraud
- Lockheed bribery scandal in Germany, Japan, and Netherlands
- MG Rover Group accounts and pensions scandal
- Morrison-Knudsen scandal Led to William Agee's ouster
- Nortel executives overstate post-dot-com recovery earnings in order to earn bonuses

> “பங்குச் சந்தையில், நிறுவனங்களின் பங்குகளது விலைகள் நாளுக்கு நாள் - ஏன் நிமிடத்துக்கு நிமிடம் மாறின. புதிய முதலீடுகளை பெற, நிறுவனங்களும் உண்மைக்குப் புறம்பான நிறுவன நிதி நிலைமைகளையும், எதிர்பார்க்கும் பெறுபேறுகள் பற்றிய தவறுதலான கணக்குளை வெளிப்படுத்துகின்றன.”

- One.Tel collapse
- Options backdating involving over 100 companies
- Parmalat accounting scandal & mutual fund fraud
- Phar-Mor company lied to shareholders. CEO eventually sentenced to prison for fraud and company eventually became bankrupt.
- RadioShack CEO David Edmondson lied about attaining a B.A. degree from Pacific Coast Baptist College in California
- Refco, Inc. commodities & futures scandal involving hidden debts involving under writing firms Credit Suisse First Boston, Goldman Sachs, Bank of America Corp.
- Royal Dutch Shell overstated its oil reserves twice, it downgraded 3.9 billion barrels, or about 20 percent of its total holdings.
- Tyco International
- World com
- Xerox alleged accounting irregularities involving auditor KPMG, causing restatement of financial results for the years 1997 through 2000 and fines for both companies.
- David Wittig scandal

**Mutual funds**
Epicurum fund/Parmalat
Mutual-fund scandal (2003)

**Insurance**
AIG

ஐரோப்பாவிலும், குறிப்பாக இங்கிலாந்திலும் இதன் தாக்கங்கள் உள்ளன. முதலாளித்துவத்தின் கட்டமைப்பு ஆரம்பமான காலங்களிலேயே இதுவும் ஆரம்பமாகிவிட்டது. (1711) கீழ்க்கண்டவை சில உதாரணங்கள்.

Bank of Credit and Commerce International, the Vatican bank, the Savings and Loans industry, the Saunders and Lyons of the Guinness takeover battle

**Marsh & Mclennan**
கொக்கோ கோலா போன்ற பெரிய நிறுவனங்கள் மூன்றாம் உலக நாடுகளில் செய்யும் மோசடிகளையும்,அழிவுகளையும் எந்த சட்டமும் கட்டுப்படுத்தவில்லை. போபாலில், யூனியன் கார்பனைட் செய்த பேரழிவைத் தடுக்கும் சட்டங்கள் இன்றுவரை இயற்றப்படவில்லை. முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், அதன் தாதாக்களின் செழிப்பை வழிப்படுத்துவதற்கும், காலத்துக்குக் காலம் சில உதிரிச் சட்டங்களை இயற்றி மக்களை ஏமாற்றுவார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த Oliver Stone ன் Wall Street மிகச் சிறந்த உதாரணப் படம். இதைத் தவிர பின்வரும் படங்கள் இந்த மோசமான வியாபார உலகை வெளிப்படுத்துகின்றன.

The Corporation - The history and critic of the corporation documentary and book
Conspiracy of Fools - Documentary about Enron
Enron: The Smartest Guys in the Room - the Oscar nominated documentary

ஆரம்ப காலங்களில் இருந்தே வர்த்தக நிறுவனங்களின் கணக்குகளைப் பரிசோதிக்கும் ஸ்தாபனங்களுக்கும், இவற்றைக் கண்காணிக்கும் சபைகளுக்கும் இடையில் அரசாங்கத்தின் தலையீடு குறைவாகவேயிருந்தது. இதற்கு மற்றுமொரு காரணம் கட்சிகளுக்குப் பெருமளவு பணத்தை நிதியாக இந்த நிறுவனங்களே வழங்குகின்றன. (பிளக் National Post (தமிழ் தேசியத்தை உறுதிப்படுத்திய பத்திரிகை) ஆரம்பித்த பொழுது கொன்சவேட்டிக் கட்சி பெருமளவு ஆதரவு வழங்கியது.) அரசாங்கங்களை இந்த நிறுவனங்களே நடாத்தின. புதிய பொருளாதாரச் சந்தையில் தோன்றிய புதிய பொருட்களை கட்டுப்படுத்தும் சட்டங்களை அரசாங்கங்கள் இயற்றத் தவறிவிட்டன. (Credit Cards, Mutual Funds, Insurance, Stock) (கிறடிக்காட் வரி விகிதம் பற்றிய கட்டுப்பாட்டுச் சட்டங்கள் எதுவும் இல்லை, ஆனால் உங்களால் கட்ட முடியாமல் போனால்,அல்லது வங்குரோத்து நிலைமையடைந்தால், ஏழு வருடங்கள் கடன் பெற முடியாமல் போகும். இந்த நிலை நிறுவனங்களுக்கு விதி விலக்கு)

பங்குச் சந்தையில், நிறுவனங்களின் பங்குகளது விலைகள் நாளுக்கு நாள் - ஏன் நிமிடத்துக்குநிமிடம் மாறின. புதிய முதலீடுகளைப்பெற நிறுவனங்களும், உண்மைக்கு புறம்பான நிறுவன நிதி நிலைமைகளையும், எதிர்பார்க்கும் பெறுபேறுகள் பற்றிய தவறுதலான கணக்குளை வெளிப்படுத்துகின்றன. இதனால் பங்குகளது விலைகள் நிறுவனங்களுக்குச் சாதகமாகின்றன. பல நிறுவனங்கள் உண்மைக்குப் புறம்பாக வங்குரோத்து நிலையை அடைகின்றன. இதன் முதலாளிகள் பணத்தைச் சுருட்டிக் கொண்டு வேறு நிறுவனங்களை ஆரம்பிக்கின்றனர்.

நாங்கள் வாழ்ந்துகொண்டிருப்பது முதாளித்துவத்தின் உச்சக் கட்டமைப்பில். இங்கு உண்மைக்கு இடமில்லை.டார்வினின் விதிப்படி, உங்களுக்கு திறமையிருப்பின் தப்பிக் கொள்வீர், இல்லேயேல் உங்களது வரிப் பணத்தில் அவர்கள் சவாரி செய்வார்கள்.
பிற் குறிப்பு
வெள்ளைப்பொய் என்ற பதம் அமெரிக்காவில் சகஜமாகப் பாவிக்கப்படுகின்றது. இதன் உண்மை அர்த்தம்-மற்றவரின் மனம் நோகக் கூடாது என்பதற்காக கூறும் பொய். இறந்த வீட்டுக்கு செல்லவில்லையென்றால் அவரை எனக்குப் பார்க்க பிடிக்கவில்லை என்பதை கூறாது, எனக்குத் தெரியாது அல்லது தொலைபேசியில் செய்தி கிடைக்கவில்லை போன்ற பல காரணங்களைக் கூறுவது. உண்மையில் இது சுத்தப் பொய்.

அதுபோலவே இந்த வெள்ளை, தூயநிறக் குற்றவாளிகளும். மற்றவர்கள் கஸ்டப்படக் கூடாது என்பதற்காக கொள்ளையடிப்பவர்கள்.

ஒரு சிலரைத் தண்டிப்பதன் மூலம், முழு முதலாளித்துவத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியே இது.

▪ ▪ ▪


தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

வீடு பத்திரிகையில்
விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!

416-400-6406






MEGA CARPET & DUCT CLEANING LTD.

உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை

• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents

NATHAN: Dir: 416.893.8363, Tel: 416.286.2416, www.megaduct.com

# பறவைகளும் பழமரமும்

**- மஞ்சுளா நாதன் -**

உங்கள் வீட்டுத் தோட்டத்துக் கிள்ளைகள் பலவிதமான மரங்கள் பலவிதமான அவசியத்தை பறவைகளுக்கு உணர்த்துகின்றன. குறிப்பாக பறவைகள் முட்டையிட்டுக்குஞ்சு பொரிக்க, இலை தழைகள் உணவாகப் பயன்பட(பழங்கள், விதைகள்கூட இவற்றுள் அடங்கும்), தட்ப வெப்ப நிலைகளுக்கிடையில் வீடாக மரங்களைப் பாவித்திட,



மற்றும் எதிரிகளிடமிருந்து தம்மை தற்பாதுகாத்துக் கொள்ளவென பறவைகள் மரங்களை நாடுகின்றன.

இம்மரங்களுக்கு இணைதான் ஏது? பறவைகளை நிரந்தர விருந்தாளிகளாகவே கோடைகாலத் தருணத்தில் தங்க வைத்துக் கொள்ள கையாளக்கூடிய உத்திகள் என்னவென்று சற்றே ஆராய்வோம்.

நிச்சயமாய், இந்த ஒரு நொடிப்பொழுதில்க் கூட உங்கள் வீட்டுத் தோட்டப் புறத்தில் பறவைகளைக் காணலாம் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. மேலும் விதம் விதமான பறவைகளை நீங்கள், வரவழைக்க விரும்பின் நல்ல விருட்சமுடைய, நிழல்பொதிந்த மரங்களை நடவேண்டும். இவற்றில் முக்கியமாக, பழங்கள் விதைகள், போன்றவற்றைப் பிரசவிக்கக்கூடிய மரங்கள், செடிகள் போன்றவற்றை நட்டால், கூடுதல் பலனைக் காணலாம்.



பறவைகளுக்கோ செர்ரிப்பழம் என்றால் கொள்ளை ஆசை. நீங்கள் இனிப்பான செர்ரிப்பழ இனமரத்தை நடும்போது, பறவைகளின் ஆதிக்கம் உங்கள் தோட்டத்தில் மிதமிஞ்சி இருப்பதைக் காணலாம். இந்தச் சின்னஞ்சிறு மரத்தை, மெல்லிய வலைத்துணியைக் கொண்டு பாதுகாப்பதன் மூலம், பறவைகளின் ஆக்கிரமிப்பை ஓரளவு கட்டுப்படுத்தமுடியும். ஆனால் புளிப்பான செர்ரிப்பழ இனங்களும் கடைகளில் உண்டு. நாம் விரும்பாவிட்டாலும், பறவைகளுக்கு மிகவும் பிடித்தவகை இந்தப் புளிப்பான சுவையைக் கொண்ட செர்ரிப்பழம் ஆகும்.

மிகவும் கடினமான நிறத்தைக் கொண்ட 'Moontain ash' எனப்படும் செர்ரிப்பழ வகையானது, பறவைகளுக்குக் குறிப்பாக 'Robin' என்ற பறவை இனத்துக்கு மிகவும் பிடித்தமானது. 'Moontain ash' செர்ரி வகையிலேயே பலவித நிறங்களும் சுவைகளும் உள்ளன. இந்தப் பழங்கள் இலையுதிர் காலம் முடியுந்தருவாயிற்கூட பறவைகளால் உண்ணாது விடப்பட்டாலும் குளிர்காலங்களில் கெட்டுவிடாத் தன்மை இந்தச் செர்ரி மரங்களுக்குண்டு. கிட்டத்தட்ட குளிர்கால மத்திம பாகத்தின் போது உறைபனி இவ்வகை செர்ரிகளுக்கு உரமாகவும், உணவாகவும் பயன்படுகின்றது. பின்னர் வசந்தகாலத்தின் முற்பகுதியிலேயே இவ்வகை மரங்களைத் தேடி கடல், தேசங் கடந்து வரும் பறவைகள் முற்றுகையிடுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும் 'Redpolls',Pine Siskins', Golo Finches' போன்ற பறவைகள், 'Birch' மரத்தை மிகுதியாக நாடி வருகின்றன. காரணம் இம்மரம் விதைகளை உற்பத்தி செய்வதால் ஆகும். இம்மரம் பார்க்க மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும். இம்மரம் குறிப்பாக 'Chickadees' எனப்படும் பறவை இனங்களுக்கு மிகவும் உபயோகப்படக் கூடியவை. நம் வீட்டு வளாகத்தில் இந்த 'Birch' மரம் தழைத்து வளர்ந்திருப்பின் மேற்கூறிய பறவைகள் எம்முடனேயே கடும்குளிர்காலங்களில் இம்மரத்தில் வாசம் செய்கின்றன என்பது சற்றே ஆச்சரியமான உண்மைதான். மேப்பிள், தேக்கு போன்ற பிரம்மாண்டமான செறிவுள்ள மரங்கள் உங்கள் வீட்டைச் சுற்றி இருக்குமெனில் இவை 'Orioles', Tanagers', மற்றும் 'Red eyed vireo' போன்ற பறவை இனங்களை மிகவும் கவரக்கூடிய தன்மையைக் கொண்டவையாம். இம்மரங்களில், பொந்துகளும் மரத்தில் உச்சாணிகளில் அமைந்திருப்பதால் இவை கூடுதல் பாதுகாப்பு உணர்வை இந்தப் பறவைகளுக்கு தந்து விடுகின்றன.

'Spruce', Pine', 'Rir', 'Larch', 'Hemlock' போன்ற மரங்களாவன பறவைகளின் இனிய இல்லமாகவும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் தளங்களாகவும் அமைவதுடன் மட்டும் நின்றுவிடாமல், கூடுதல் சேவையாக, உணவு படைக்கும் அட்சய பாத்திரமாகவும் இருப்பதால், பறவைகள் இவ்வகை மரங்களை மிகுதியாக நாடிவருகின்றன. 'Yew' எனப்படும் மரத்தின் சிவப்பு நிறத்தைக் கொண்ட பழமானது, இலையுதிர் காலமுற்பகுதியில், இவ்வகை மரத்தில் விளையக்கூடியது. இந்தப்பழமானது 'Cedar wax love' எனப்படும் பறவை இனத்துக்கு மிகவும் பிடித்தமானது.

ராஸ்பெர்ரி, நாவல் பெர்ரி, போன்ற சிறிய ஆனால் செறிவுடைய மரங்களைக் கண்டால் எந்தப் பறவையும் விட்டுவைக்காது. நீலபெர்ரிப் பழவகை மரத்தை முன்னர் விபரித்தது போல், மெல்லிய வலைத்துணியினால் மூடி, பழங்களைப் பாதுகாக்க வேண்டும். அவை பறவைகளுக்கு மட்டுமென்ன, மனிதர்களுக்கும்தானே மிகவும் பிடித்த சுவையான பழங்களாம். சிலவகைப் பெர்ரி வகைகள், சில இனப்பறவைகளால் மட்டுமே விரும்பி சுவைக்கப்படுகின்றன. உதாரணத்துக்கு, அடர்ந்த கறுப்பு நிறத்தைக்கொண்ட 'Serviceberry' எனப்படும் பெர்ரியும் 'Elderberry' என்ற பெயருடைய பெர்ரியும், Thrushed மேலும் 'பாடும் பறவைகள்" என்ற இருவகை இனப்பறவைகளால் மிகவும் விரும்வி உண்ணப்படுபவையாகும்.

'Viburnums' எனப்படும் மரவகையின் ஒரே



ஒரு இனத்தைத் தவிர மிகுதி வகையான மரங்கள் யாவுமே பெர்ரிப் பழத்தைத் தரக்கூடியவை. 'High Brush Granberry' எனப்படும் பெர்ரிவகை மரமானது மிகவும் பிரகாசமான நிறத்தைக் கொண்ட பழங்களைத் தரக்கூடியது. இந்த பெர்ரிவகைகள், பறவைகள் ஒருபோதும் விரும்பி உண்பதில்லை.ஆனால் கடுங்குளிர் காலங்களில் இந்தப் பெர்ரிவகை உணவின்றி வாடும் பறவைகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே அமைந்து விடுகின்றன. 'Nanny Berry' இனவகையைச் சேர்ந்த பெர்ரிப்பழமானது, 'Brown Thrasher' என்னும் பறவைக்கு மிகவும் பிடித்த ஆகாரமாகும். இவ்வகைப் பெர்ரி வகைகளில் Bearberry, Chokeberry, Barberry, Dogwood, Roses, Holly Chokecherry, Cotoneaster, Russian olive, Junoper, Privet, Firethorn, Buckthorn, Snowberry, Coralberry முதலியனவும் அடங்கும்.

உங்கள் வீட்டுத் தோட்டப் பகுதியிலேயே, ஒரு பகுதியை பிரத்தியேகமாக பறவைகள் வந்து தங்குவதை நீங்கள் விரும்பினால் உயர்ந்து வளரக்கூடிய புல்வகைகளை ஒரு பகுதியில் வளரவிடுங்கள். இதில் சிலவகையான கதிர்களையும் வளர்ப்பின் மேலும் பறவைகளின் வரவை அதிகரிக்கலாம். இவற்றில் சில Thistles, Goldenrod, Horned Lark, Meadowlark, Buntings, Bobolink என்பனவாகும். சில வகையான புல்வகைகள் குளிர்கால நிலைகளில் வாடிப்போவதில்லை. தனித்தன்மை கொண்ட இவ்வகைப்புல், சமயத்தில் பறவைகள் உணவாக உட்கொள்ளும் விதைகளையும் உற்பத்தி செய்வதுண்டு. இவ்வகைப் புற்களையும் சிலவகைச் செடிகளையும் மிகவும் குட்டையாக வெட்டிவிடாமல் அப்படியே விட்டால் இவை பின்னர் உணவின்றிக் குளிரில் வாடும் பறவைகளுக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கும். இதில் சூரியகாந்தி, நட்சத்திரம், ஸீனியா,காஸ்மோ போன்றவை அடங்கும்.

'Virginia Greeper' எனப்படும் வழமையாக அடர்ந்த பளபளப்பான கறுப்பு நிறத்திலும் இலையுதிர் காலங்களில் அடர்ந்த செம்மை நிறதிதிலும் காணப்படும் பெர்ரிவகையானது, ராஜபறவை, நீலப்பறவை, Flycatchers முதலியவகைப் பறவைகளினால் மிகவும் விரும்பி உண்ணப்படுவதாகும்.

■ ■ ■


EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI–Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario



COMMERCIAL
• INVESTMENT • LANDS
• DESIGN-BUILD • LEASING
• HOTELS • MOTELS
• PLAZAS • INDUSTRIAL
• OFFICE • PROPERTY VALUATION
ROYAL LEPAGE
digi Media Creations
UTHAYAN NADARAJAH
Broker
Cell: .416.727.9945
Royal LePage Credit Valley Real Estate Inc.
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000


Protectron
Free Alarm System Stating from $19.95
Residential & Commercial Alarm Systems
11:30
Special Offer
• Free Installation
• 2 Digital Key Pad
• 3 Motion
• All Windows & Doors
• Garage Opener
• Tel & Cable
• Burglar alarm
• fire alarm
• police emergency
• Medical alert
Security Camera
New Home Buyer!
• Dish Washer • Ice Maker
• Waser & Dryer • Phone Jack
Insulation and Labour FREE
(some conditions may apply)
Garage Door Opener
Range Hood
• General Contractors • Sales • Service • Installation
Please Call for a FREE in-home product consultation
647-893-4414


# HomeLife Future Realty Inc.

## நிறுவனத்தின் 5வது அண்டு விழாவில்












**SELVA VETTYVEL**
Broker of Record

**HomeLife Future Realty Inc., Brokerage**
262 Markham Road, Scarborough, ON M1J 3C3
**T: 416-264-0101, C: 416-568-4301**



# HomeLife Future Realty Inc.

## நிறுவனத்தின் 5வது அண்டு விழாவில்

















**SELVA VETTYVEL**
Broker of Record

**HomeLife Future Realty Inc., Brokerage**
262 Markham Road, Scarborough, ON M1J 3C3
**T: 416-264-0101, C: 416-568-4301**



M and M CONSULTANTS

Serving 22years in Canada
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

SERANDIBTRAVEL1

AROUND THE WORLD WITH SERANDIB

WITH US YOUR ARE A GUEST NOT A PASSENGER




Serandib Travel1

For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# கோடை விடுமுறை



திரு மகேசன்

காத்திருந்து காத்திருந்து கண்கள் பூத்து விட்டது. காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. கோடை கால விடுமுறையின் ஒருமாதம் பூர்த்தியாகிவிட்டது. பிரச்சனை தீரும் என்று பார்த்துக்கொண்டிருப்பவர்கள் எண்ணிக்கை கூடியதே தவிர பிரச்சினை தீர்ந்தபாடில்லை. ஆகாய விமானங்கள் அங்கிருந்தும் இங்கிருந்தும் பயணிகள் இன்றி பரிதவித்தபடி சிறீலங்கா நோக்கிப் பறக்கின்றன. உல்லாசப் பிரயாணிகள் வருகை விழுந்துவிட்டதாக நமது இலவசப் பத்திரிகைகளும் ஆரூடம் சொல்கின்றன.

ஒரு சின்னச் சமாதானம் வந்தால் அந்த இடைவெளியில் ஓடிப்போய் எல்லை வேலியைப் போட்டு காணியையோ வீட்டையோ விற்று காசை உண்டியலால் அனுப்பி மோட்கேஜ் பிரச்சினையை தீர்க்கப் பார்த்துகொண்டிருக்கிறது ஒரு கூட்டம். என்ன பாவம் செய்ததோ தமிழ்ச் சனம் என்று முணுமுணுத்தபடி, செய்த பாவங்களைக் கழுவி, பிராயச்சித்தம் தேடிக்கொள்ள அகப்பட்ட ஒரே இடம் இந்தியா.

சரி, இந்தியா போவதென்றால் "இனி விசாவுக்கு இங்கை அவங்களோட அடிபட ஏலாது" என்று ஒரு கூட்டம் பின்னடிக்க, 'இல்லை அடிபட்டெண்டாலும் விசா எடுக்க வேண்டும்' என்று ஒரு மாதத்திற்கு முன்பே கனடா போஸ்ட் இல் பதிவுத் தபாலில் விசாவுக்கு விண்ணப்பித்து, சரியாக ஒரு மாத காலத்தில் விசாவைப் பெற்றக்கொண்டு



இந்தியத் திருத்தல யாத்திரைக்காக குழு (Group) ஆகவும், தனித்தனியாகவும் தமது பயண ஒழுங்குகளைச் செய்துகொண்டு ஹோட்டல் முதல்கொண்டு வாகன வசதி அனைத்தையும் பெற்றுக்கொண்டு பலர் இந்தியா நோக்கி பயணித்தபடி இருக்கின்றனர். இந்தியா செல்லும் விமானங்கள் அனைத்தும் full booking செய்யப்பட்ட நிலையிலேயே பயணிகள் பலர் இன்னமும் காத்திருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் ஏன் இந்தியப் பயணக் கட்டுரை வரையக்கூடாது என்ற பலரின் வேண்டுகோளுக்கு இணங்க இக்கட்டுரை வரையப்படுகின்றது.


Air Canada, Air India உட்பட பலதரப்பட்ட விமான சேவை நிறுவனங்கள் உங்களை ரொறன்ரோவிலிருந்து நியூ டெல்கிக்கு அழைத்துச்செல்லும் வசதியுள்ளது. இப்படி சொகுசுப் பயணத்தில் டெல்லியைச் சென்றடையும் நீங்கள் அங்கிருந்து நேரடியாகவே மதுராவுக்கு (Mathura) அழைத்துச் செல்லப்படுவீர்கள். அதற்காகவே விமான நிலையத்தில் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம் காத்திருக்கும். பயணிகளின் தொகைக்கேற்ப வாகனத்தில் இருக்கை வசதிகள் ஒழுங்கு செய்யப்படும்.

கிருஸ்ணாவின் பிறப்பிடமாகவே மதுரா கருதப்படுகிறது. இந்துக்கள் இவ்விடத்தைப் பார்ப்பதோடு, தம் கால்கள் இம்மண்ணில் படிவதால் பெருமையடைகிறார்கள். யமுனா நதியின் மேற்குப்புறத்தில் 148 கி.மீ.தொலைவில் டில்லியிலிருந்தும், 58 கி.மீ. ஆக்ராவிருக்கும் பக்கமாவும் அமைந்திருக்கிறது மதுரா. புத்த, பிராமண, ஜெயின் மத கலாச்சாரங்கள் வளர்ந்த இடமாக மதுரா கருதப்படுகிறது. வருடம் முழுவதும் இங்கே சமய நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. கிருஸ்ணன் அவதரித்த இடத்தை Shri Krishna Janma Bhumi என்றே அழைக்கின்றார்கள். Lord கிருஸ்ணா அசுர வதம் செய்தபின் ஓய்வு எடுத்த இடமும் இங்கேதான் உண்டு.

இவ்விடத்தை Vishram Ghat என்று அழைப்பர். இங்கே அமைந்திருக்கும் Dwarkadheesh Temple 1814ம் ஆண்டு கட்டப்பட்டது. ஹோலி, தீபாவளிப் பண்டிகை நாட்களில் இவ்வாலயமானது மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுக் காட்சியளிக்கும். அதிக அளவில் சிற்பக்கலையுடன் திகழும் இடமாகக் கருதப்பட்டு, அனைவராலும் கவரப்படும் இடமாக விளங்குவது Gita Mandir ஆகும். அரசின் பொறுப்பில் இயங்கிவரும் தொல்பொருள் காட்சியகம் Dampier Park இல் அமைந்துள்ளது. இங்கே மிகப் பழைய கால அரிய கலைப் பொக்கிசங்கள் பாதுகாக்கப்படுகின்றன. Abo-Nabir-Khan ஆல் கட்டப்பட்ட 1661 காலத்திற்குரிய Jama Masjid பல சமயத்தவராலும் நிச்சயமாகத் தரிசிக்கப்படுகிறது.

இங்கிருந்து 15கி.மி. தொலைவில் அமைந்திருக்கிறது பிருந்தாவன். இவ்விடமும் கிருஸ்ணாவுடனும் மதுராவுடனும் சம்பந்தப்பட்ட இடமேயாகும். பிருந்தாவனத்தில்தான் கிருஸ்ணன் தனது லீலைகளைப் புரிந்ததாகக் கருதப்படுகிறது. அதனால்தானோ என்னவோ இங்கே றொமான்ரிக் நிறைந்த ஒரு அமைதியானசூழல் நிலவுகிறது. பிரம்ப குண்டா, கோவிந்த குண்டா எனப்படும் இரண்டு பெரிய நீர்நிலைகள் இங்கே காணப்படுகின்றன. இவை 1590 காலப் பகுதியைச் சேர்ந்தவையென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கோவிந்த தேவா எனப்படும் ஆலயம் இங்கே பெருமைக்குரிய ஆலயமாகக் கருதப்படுகிறது. இதுமட்டுமன்றி, 'ஷாஜி ரெம்பிள், ராங் ஜி ரெம்பிள், மதன்மோகன் ரெம்பிள், கிருஸ்ண பலராம் மந்திர், ராதா பாலப்பா ரெம்பிள், கோபிநாத் ரெம்பிள் போன்ற ஆலயங்களும் லோட் கிருஸ்ணாவுக்கு பக்திக்குரிய ஆலயங்களாகக் கருதப்படுகின்றன. இங்குள்ள கிருஸ்ண பலராம் மந்திர் உலகம் பூராவும் 400க்கு மேற்பட்ட நிலையங்களை நிறுவி, ஹரே ராமா ஹரே கிருஸ்ணா என்று அழைக்கப்படுகிறது. இதன் ஸ்தாபகர் பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா. நாளாந்தம் இவ்வாலயத்திற்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் குவிந்து கொண்டிருப்பதோடு, இங்கே அமைக்கப்பட்டுள்ள லோட் கிருஸ்ணா கொள்ளை கொள்ளும் அழகு நிறைந்ததாகும். இங்கிருந்து கிருஸ்ணாவின் பக்திரசம் ததும்பும் இடங்களை வழிபட்டபின் நாம் பயணிப்பது ஆக்ரா நோக்கி.

அழகிய ஹோட்டல்கள் அமைந்துள்ள ஆக்ராவின் அழகில் நாம் இரவினைக் கழிப்போம். ஆக்ரா என்றவுடன் நம் நினைவுக்கு வருவது தாஜ்மஹால்தான். ஷாஜகான் தனது காதலி மும்தாஜுக்காக (சினிமா நடிகை அல்ல!) கட்டிய காதல் மாளிகைதான் இந்த தாஜ்மஹால். காதலின் சின்னமாகவே தாஜ்மஹால் கருதப்படுவதாலோ என்னவோ இளம் ஜோடிகள் இங்கே கூட்டமாக வருவதைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. 1653இல் தனது மதிப்புக்குரிய ராணி மும்தாஜின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக



கட்டப்பட்ட இடமே இது. 22 வருட கடுமையான உழைப்பால் (1630-1752) 22,000 உழைப்பாளிகளைக் கொண்டு, பேர்சிய கட்டிடக் கலைஞர் Ustad Isa வினால் தாஜ்மகால் கட்டப்பட்டது. 'ராஜகானும் மும்தாஜும் துயில்கொள்ளும் இம்மசூதியினுள் ஒரே நிசப்தம் நிலவுகிறது. மக்கள் அமைதியாக நின்று அஞ்சலி செலுத்துகின்றார்கள். பலநாட்டு உல்லாச பிரயாணிகளால் இவ்விடமானது நிரம்பிவழிகிறது. இத்தாஜ்மகாலின் மறுபக்கத்தில் அமைதியாக யமுனா ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. காலை 6 மணியிலிருந்து மாலை 7.30 மணிவரை இது திறந்திருக்கும். வெள்ளிக்கிழமைகளில் திறக்கப்படமாட்டாது.

இங்கிருந்து நமது பயணம் ஆக்ரா கோட்டை (Agra Fort) நோக்கி நகர்கிறது. அக்பர் சக்கரவர்த்தியினால் 1565 இல் இக்கோட்டை கட்டப்பட்டது. அவரது காலத்தின்பின் அவரது பேரனான 'ராஜகான-னால் இப்பணி முடித்து வைக்கப்பட்டது. இங்கேதான் 1666 இல் 'ராஜகான் சிறை வைக்கப்பட்டிருந்தான். முஸ்லிம் கலாச்சாரச் சின்னங்களைப் பிரதிபலிப்பதாக இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோட்டையானது சூரியன் உதிக்கும் நேரத்தில் திறக்கப்பட்டு, சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பூட்டப்படுவது இன்னொரு சிறப்பம்சமாகும்.

சிக்கந்தரா என்று அழைக்கப்படும் சக்கரவர்த்தி அக்பரின் சமாதி அமைந்திருக்கும் இடமே இதுவாகும். 1613 இல் அவரது மகன் ஜகாங்கீர் இனால் இச்சமாதி வேலைகள் முடித்துவைக்கப்பட்டன. இச்சமாதியானது இந்து, முஸ்லிம் மத சின்னங்களைத் தாங்கியதாகக் காணப்படுகிறது. அக்பரின் கொள்கைப்படி இக்கட்டிடமானது அமைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. It is one of the well preserved monuments. This is the last resisting place of the Mughal Emperor Akbar.

பயணமானது இங்கிருந்து Fatehpur Sikri வழியாக தொடர்கிறது. இந்நகரமானது யூனிசெப் பாதுகாப்பில் காக்கப்படும் கலாச்சாரப் பிராந்தியமாகும். World Heritage site என UNESCO வினால் அழைக்கப்படுகிறது. ஆக்ராவிலிருந்து 38 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. அக்பர் தனது சமஸ்தானத்திற்கு தலைநகரமாகவே இவ்விடத்தை விஸ்தரித்தார். ஆனால், இவ்விடத்தில் தண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதால் இவ்விடத்தைக் கைவிட்டு, முகாலய சாம்ராச்சியத்தின் தலைநகரமானது லாகூருக்கு மாற்றப்பட்டது. இம்முகலாய சாம்ராச்சியத்தினுள் நின்று சூரியன் மறையும் காட்சியைக் காண்பது அழகுக்கு அழகு! இங்கிருந்து நாம் புறப்பட்டு ஜெய்ப்பூர் நோக்கிப் பயணமாகிறோம். நமது பயண களைப்புத் தீர ஜெய்ப்பூர் நகரத்தில் இரவு நேர தங்குதல் மிகச் சிறந்த ஹோட்டல் ஒன்றில் ஒழுங்கு செய்யப்படுகிறது. இரவு ஜெய்ப்பூரில் கழிகிறது. மறுநாள் ஜெய்ப்பூர் பயணம் தொடர்கிறது. ஜெய்ப்பூர் அழகு சொட்டும் நகரமாகும். இது ஆங்கிலத்தில் Pink City என்றே அழைக்கப்படுகிறது. ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரமே ஜெய்ப்பூர் ஆகும். திரும்பிய பக்கமெல்லாம் செந்தணல்போல் சிவப்பு நிறமாகவே ஜெய்ப்பூர் காட்சியளிக்கிறது.

ஆக்ராவிலிருந்து 246 கி.மீ. தொலைவில் இருக்கிறது ஜெய்ப்பூர். 1973 இலிருந்து ஜெய்ப்பூரின் சகோதர நகரமாக நமது கல்காரி, அல்பேட்டா விளங்குகிறது.

ஜெய்ப்பூர் அரண்மனையானது நாம் தமிழ் சினிமாக் காட்சிகளில் காண்பதைவிட மிக அழகாக இருக்கின்றது. கண்ணைக் கவரும் இரண்டு யானைச் சிற்பங்கள் அரண்மனை வாசலில் கம்பீரமாக நின்று வரவேற்கிறது. தங்க முலாம் பூசப்பட்டதுபோல் வாசல் தகதகவென மினுமினுத்தபடி இருக்கிறது. ஜந்தர் மந்தர் அன்றைய அரச வம்சத்தினரின் சுகபோக வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகிறது. லட்சுமி நாராயணன் ஆலயமானது வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு, ஜெய்ப்பூருக்கு இன்னமும் அழகைக் கூட்டுகிறது. Pink City என்றழைக்கப்படும் ஜெய்ப்பூரின் அழகிய அரண்மனைகளையும் யானை சவாரி, ஒட்டகச் சவாரி என்ற ஏகப்பட்ட உல்லாசப் பயணத்துறை சார்ந்த இடங்களால் நிறைந்திருக்கும் இதன்




சிறப்புக்களைப் பற்றி எழுத ஒரு தனிக்கட்டுரைத் தொடரே எழுதலாம். எனவே, இப்பயணத் தொடர் இத்தோடு முற்றுப் பெறாது. ஜெய்ப்பூரின் மகிமையுடன் தொடர்ந்து அடுத்த கட்டுரையில் சந்திப்போம்.

■ ■ ■


UNITED TAMILS ASSOCIATION PRESENTS
ADVANCE TICKETS $3.00
DOOR PRICE $5.00
MARKHAM FAIR GROUNDS
10801 McCowan Road
அன்னக்கிளி நீ வாடி,
காதல் வந்தும் சொல்லாமல் புகழ்
பிரசன்னா
கானா காணும் காலங்கள்
முதல் முதலாய் புகழ்
மதுமிதா
ஓ மரியா ஓ மரியா
கைய வைச்சுக்கிட்டு புகழ்
தேவன்
டோ மாசம் 98இல்
டோலு டோலு தான் புகழ்
சுசித்ரா
இசைப்பயணம்,
காக்க காக்க புகழ்
சாருலதாமணி
பாட்டுக்கு பாட்டு புகழ்
அன்பு அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத்
YOGI-B & NATCHATHIRA
FROM MALAYSIA
Sponsored by
JRB Universal
TAMIL CARNIVAL
2007
"அசத்தப் போவது யாரு" புகழ்
காமடி மன்னர்கள்
Sponsored by INDIRAN SWEETS
உங்கள் வர்த்தகச் சாவடிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்
Venders, Food Venders and
Ice Cream Truck & Hot Dog Vehicle Info
416.564.9642
தமிழ்மக்களுக்கான ஒரு
குதூகலத் திருவிழா
தமிழ்
காணிவல்
www.tamilsevent.com
AUG 11 SAT
AUG 12 SUN

# நோய்க் கணிப்பு முறைகள்

ராஜசேகர் ஆதியப்பன்




எந்தவொரு நோயுற்ற நிலையிலும் நோயாளிக்கு மருந்தளிப்பதற்கு முன்னர் அந்நோயை முற்றிலும் ஆய்ந்து அதன் தன்மையை அறிதல் மிகவும் முக்கியமாகும். பல்வேறு நோய்க்குறிக் கணிப்பு முறைகள் உள்ளன. எனினும் அவற்றில் நாடி பார்த்து நோய்களைத் தீர்மானித்தலே சித்த மருத்துவத்தில் சிறப்பாகக் கருதப்படுகிறது.

## நாடி பார்த்து நோய்க் கணித்தல்

இதயம் குவிந்து விரிவதனால் இரத்த நாளங்களும் விரிந்து சுருங்கும். இவ்வாறு இரத்த நாளம் சுருங்கி விரியும் தன்மை நாடி நடை எனப்படும். இதயத்தின் இயக்கம் உடல் நலத்திற்கு ஏற்றவாறு அமையும். உடலில் நோய் கண்டால் இதயத்தின் இயல்பு நடை திரியும். நாடி நடையை ஆய்வு செய்வதன் மூலமாக உடலில் உள்ள நோயின் தன்மையைக் கணிக்கலாம். கைகள், கணுக்கால்கள், நெற்றிப்பொட்டு முதலிய இடங்களில் நாடி நடையை எளிதில் தொட்டு உணரலாம். எனினும் கையில் நாடி பார்த்தலே சிறப்புடையதாகும். கையில் மணிக்கட்டு அருகில் பெருவிரலுக்குக் கீழே ஒரு விரற்கடை விட்டு மூன்று விரலால் மெதுவாக அழுத்தியும் தொட்டும் ஆய்வு செய்ய, முதல் விரலில் உணர்வது வாதம், இரண்டாவது விரலில் உணர்வது பித்தம், மூன்றாவது விரலில் உணர்வது ஐயம் (கபம்) ஆகும்.

உணவு, உடை, செயல்களின் ஒவ்வாமையாலும் இயற்கை வேறுபாட்டாலும், பிற காரணங்களாலும் இம் மூன்று நாடிகள் மிகவோ, குறையவோ அன்றி அளவுகள் வேறுபடவோ நிகழ்கிறது. அவற்றின் மூலம் நோய்களைக் கணித்தல் ( Diagnosis ) சித்த மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்ப்பது முறையாகும்.

சித்திரை, வைகாசி மாதங்களில் உதயத்திலும் ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மதியத்திலும் மார்கழி, தை, மாசியில் மாலையிலும், பங்குனி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் இரவிலும் நாடி தெளிவாகத் தோன்றும்.



எண்ணெய்க் குளிப்பு செய்தவர்க்கும் அளவுக்கு மிஞ்சி உணவு கொண்டவர்க்கும், வெயிலில் அலைந்து வந்தவர்க்கும், போதைப்பொருள் உண்டவர்க்கும், யோகிகளுக்கும் நாடி சரிவரத் தோன்றாது,

வாதம் ஒரு பங்கும், பித்தம் அரை பங்கும் ஐயம் கால் பங்கும் அதாவது வாதம் 1 மாத்திரை, பித்தம் அரை மாத்திரை, ஐயம் கால் மாத்திரையுமாக நடந்தால் உடம்பில் **வாத** நாடியானது தொட்டில் ஆட்டம் போலும் தவளை கத்துதல் போலும், குருவி, காடை ஆகியவற்றின் நடையை ஒத்து இருக்கும். **பித்த** நாடியானது மயில் மாடப்புறா, ஊர்க்குருவி, கருடன் ஆகியவற்றின் நடையைப் போல் வன்மையுடன் சிங்கத்தின் அசைவைப் போல் இருக்கும். **ஐயநாடி** கோழி, சிலந்தி ஆகியவற்றின் நடையை ஒத்திருக்கும். நோய் இல்லை எனலாம்.

வாதத்தில் வாதமாகில் (வாதநாடி நடக்க வேண்டிய மாத்திரை அளவிற்கு இரண்டு பங்கு மிகுந்திருந்தால்) உடல் நொந்து நெகிழ்ச்சியால் சுருங்கும். உடல் பதறும், உணவு செல்லாது. வாதத்தில் பித்தமாகில் வாய் குளறிப் பேசும், கால் குளிரும், வீக்கம் உண்டாகும். வாதத்தில் ஐயமாகில் உடல் வீங்கி வலிக்கும், மண்டையிடியுடன் மெய் வெளுக்கும். உணவில் நாட்டம் இராது. நாளுக்கு நாள் வீக்கம் மிகும்.

பித்தத்தில் பித்தமாகில் வாய்ப்பிதற்றல், கிறுகிறுப்பு, விக்கல், இளைப்பு, உடல் வறட்சி, வெளுப்பு ஆகியவை தோன்றிப் பின் உடல் வீங்கும்.பித்தத்தில் வாதமாகில் பிடரி, கை, கால்களில் குத்தல், உடல் பதறுதல்,காய்ச்சல் உண்டாக்குதல், கோபம் உண்டாதல் ஆகிய குணங்களைக் காட்டும். பித்தத்தில் ஐயமாகில் வாய்க்குளறிப் பிதற்றும். விக்கலெடுக்கும், உமிழ்நீர் ஒழுகும், தலைசுற்றும், வயிற்றில் வலி தோன்றும். பித்தம் வாந்தியாகும் பிடரி வலிக்கும்.

ஐயத்தில் வாதமாகில் பிடரி வலி, நரம்பு வலி, வாய்க்குளறல் ஆகியவை தோன்றும். ஐயத்தில் பித்தமாகில் உணவு கசக்கும். நாவில் கசப்புச் சுவையிருக்கும் பேச்சில் தடுமாற்றம் இருக்கும். கபம் கட்டிக் குரல் கம்மும் கண்ணில் பீளையுண்டாகும்.

## ஐயத்தில் ஐயமாகில் விழி சுழன்று உயிர் பிரியும்

**வாதத்தில் ஐயம் சேர்ந்தால்**
சன்னி, தோசம், உடல் மயக்கம், மூர்ச்சை, சோகை, பாண்டு ஆகியவை உண்டாகும்

**பித்தத்தில் வாதம் சேர்ந்தால்**
பீனிசம், மண்டைக்குத்து, பவுத்திரம், அரையாப்பு, மூலநோய் ஆகியவை உண்டாகும்.

**பித்தம் வாதத்தில் சேர்ந்தால்**
பாண்டு, காமாலை, மகோதரம் ஆகியவை உண்டாகும்.

**ஐயம் பித்தத்தில் சேர்ந்தால்**
உமிழ்நீர் ஊறல், சுரம் உண்டாதல், பேதி, வாந்தி, காணல் ஆகியவை உண்டாகும்.

வாதம் இரண்டு மாத்திரையும் பித்தம் ஒரு மாத்திரையுமாக நாடி நடக்குமானால் வாதப் பித்த, தொந்தம் எனப்படும். வாயு மிகுந்து வயிறு வீங்கி வலிக்கும். வாதம் ஒரு மாத்திரையும் பித்தம் இரண்டு மாத்திரையும் நடக்குமானால் பித்த வாதத் தொந்தம் எனப்படும். வெப்பு மிகுந்து உடல், கண் எரியும், பசி, தாகம் உண்டாகும். வாய் கசக்கும், காடியில் ஆசை மிகும். வாதம் இரண்டு மாத்திரையும் ஐயம் ஒரு மாத்திரையுமாகில் வாத ஐயத் தொந்தம் ஆகும். வயிறு பொருமி வலிக்கும், பசியிராது. பித்தம் இரண்டு மாத்திரையும் ஐயம் ஒரு மாத்திரையுமாகில் பித்த ஐயத் தொந்தம் ஆகும்.தலை வறட்சியாகிப் பிடரி வலிக்கும். உடம்பெல்லாம் தினவு உண்டாகும். வயிறு ஐயவாதத் தொந்தமாகும். சன்னியுண்டாகும். தலைவலிக்கும். வாய் இனிக்கும். உணவு செரிக்காது. ஐயம் இரண்டு மாத்திரையும் பித்தம் ஒரு மாத்திரையுமானால் ஐயப் பித்தத் தொந்தம் ஆகும். உடல் குளிர்ந்து கூசும்.

■ ■ ■





நடிகர் நடிகைகள் தேவை

பிரபல திரைப்ட நிறுவனம்

தயாரிக்க இருக்கும் திரைப்படத்தில் நடிப்பதற்கு

நடிகர் நடிகைகள் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் தெடர்பு கொள்ளவும்

v. ravi

416 902 6829


Insurance/Investment/Retirement
I'm an expert in Financial affairs
with 15 years of experience in the Industry
• RRSPs, RRSP Loans • Mortgages
• Insurance • RESP
• Income Tax
Call now for a Free Consultation.....
Quick and Easy
Maran Chelliah B.Sc
Mortgage Specialist with 15 years Banking Experience
416.568.2450
www.maranc.com
COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.


Kuberan
Divine Homes
1845 Lawrence Av.East. Scarborough,
ONT. M1R 2Y3 (Lawrence /Pharmacy)
Tel: 416 999 3997, 647 435 0105
சுவாமி சிலைகள், குபேரன் சிலைகள், வலம்புரிச் சங்குகள்,
அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள்
அன்பளிப்பு பொருட்கள் இன்னும் பல...
www.divinehome.org
divinehome@rogers.com

## Conrad Black Vs United States of America

# கொன்ராட் பிளாக்கும் அமெரிக்காவும்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -


உலகின் ஆட்சியியலில் பல வகையான அரசாங்கங்கள் இருக்கின்றன. அவை அரசர் ஆட்சி, சர்வாதிகாரம், பொதுவுடைமைக் கொள்கை, முதலாளித்துவம், ஜனநாயகம் எனப் பல வகைப்படும். இந்த ஆட்சி முறைகள் குழம்பாமல், குழப்பப்படாமல் இருக்கவேண்டுமானால் மக்களுக்கு அந்த ஆட்சி முறையின்மீது நம்பிக்கை இருக்க வேண்டும்.

இது இவ்விதம்இருக்க, இந்த Conrad Black என்ற கனடியர் மிகுந்த கடின உழைப்பாளி. வர்த்தகங்களைத் திறம்பட நடத்தும் மதியூகம் படைத்தவர். இவர் தனது நண்பரான திரு.Radlerஎன்பவருடன் சேர்ந்து Hollinger என்ற நிறுவனத்தை உருவாக்கி பல பத்திரிகைகளை நடத்தி பெரும் பணக்காரர் ஆனார்.

London Telegraph உட்பட பல உலகளாவிய ரீதியில் செல்லும் பத்திரிகைகள் பல இவருடைய நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்தது. கனடாவில் National Post ஐ உருவாக்கியவரும் இவரே. கனடாவில் ஒரு தேசியப் பத்திரிகையாக இருந்த Globe and Mailக்குப் போட்டியாக இன்னொரு தேசியப் பத்திரிகையை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டு விடாப்பிடியாக National Post ஐ உருவாக்கினார். பல்வேறு காரணங்களுக்காக National Post ஐ ஞாபகம் வைத்திருக்கும் நமது வாசகர்களுக்கு National Post ஐ உருவாக்கியவர் Conrad Black தான் என்பது தெரிந்திருக்க நியாயமில்லை.

இந்த வர்த்தக ரீதியிலான செல்வாக்குகளினால் இவர் பெரும் புள்ளிகளுக்கு நண்பரானார். அரசர்கள், ராணிகளுடன் வைபவங்களில் கலந்துகொண்டார். ஏனென்றால் Daily Telegraph போன்ற பத்திரிகைகளின் சொந்தக்காரரின் உறவு இந்தபெரும் புள்ளிகளான அரசியல்வாதிகளுக்கும் தேவையானதாகவே இருந்தது.

இதனால், பிரிட்டிஸ் அரசு இவருக்கு Lord என்ற பட்டமளித்து அங்கிருந்த அரசியலில் இவருக்கு முக்கியத்துவம் அளித்தது. இந்த பட்டம் கிடைத்த நேரத்தில் கனடியப் பிரதமர் திரு.கிறெச்சியன் உடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஒன்றினால் தனது கனடிய பிரஜா உரிமையை உதறித் தள்ளினார். இவருக்கு பிரிட்டி‘ குடியுரிமை இருக்கிறது. Order of Canada பட்டம் கூட இவருக்கு ஒரு நேரத்தில் கொடுக்கப்பட்டது.

இவருடைய நிறுவனம் வளர வளர, இவரின் செல்வாக்கும் அதிகரிக்க அதிகரிக்க நிறுவனத்திலிருந்து



இவருடைய கையாடலும் அதிகரித்துச் சென்றது. Hollinger நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தானே பொறுப்பு என்பதால் அந்த நிறுவனத்தின் திறைசேரியில் பலவிதமான கையாடல்களை மேற்கொண்டார்.

முதலாளித்துவ அமைப்பில் பங்குச் சந்தை மிக முக்கியமான ஒன்றாகும். இந்த Hollinger நிறுவனத்தில் சிக்காகோவில் உள்ள சிக்காகோ றிபியூன் ஒரு பகுதியாக இருந்ததுடன், Hollinger நிறுவனத்தில் அமெரிக்க முதலீட்டாளர்களும் முதலிட்டிருந்தார்கள்.

நன்றாக இருந்த நிறுவனம் உச்ச கட்டத்தில் இருந்தபோது Lord Black இனதும் அவரது கூட்டாளிகளினதும் ஊதாரித்தனம் அதிகரித்தது.

பொதுமக்கள் முதலிடும் நிறுவனங்களின் இயக்குனர்கள் அவர்களின் முதலீடுகளைப் பாதுகாக்கும் வகையில் பல கடமைகள் இருக்கின்றன. இந்தக் கடமைகள் முதலாளித்துவ நாடுகளின் முதலீட்டாளர்கள் பாதுகாப்பில் சட்டங்களினால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

Lord Black போன்றோர் அதிகார, செல்வ மமதையினால் இந்த சட்டங்களை மறந்து இந்த நிறுவனங்களின் செலவில் தங்களின் சுகபோகங்களை வைத்துக்கொண்டார்கள்.

இந்த நேரத்தில் Hollinger நிறுவனம் Lord Black க்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தொடங்கிய நேரத்தில் அமெரிக்கஅரசும் தனது மூக்கை நுழைத்தது.

Hollinger நிறுவனத்தில் பணத்தைக் கையாடியது, அங்கு பல ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டது, இந்த வழக்கிற்கான சாட்சியங்களை ஒளித்தது போன்ற பல குற்றச்சாட்டுகளை வைத்து நடந்த வழக்கில், Lord Black குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் இவர் மிஞ்சியிருக்கும் தமது வாழ்க்கையை அனேகமாக சிறையில் கழிக்கக்கூடும்.

இரு அமெரிக்க ஜனாதிபதிகளின் வாழ்க்கைச் சரிதையை எழுதிய இவருக்கு மிச்சமுள்ள நாற்பது ஜனாதிபதிகளின் கதையை எழுத நிறைய நேரம் இருக்கிறது!

இது இவ்விதமிருக்க இதுபோன்ற வழக்குகளும் Lord Black போன்ற பெரிய புள்ளிகளைச் சிறைக்கு அனுப்புவதானதும் இங்குள்ள ஆட்சி முறைமீது மக்களுக்கும் பங்குச் சந்தையில் முதலிடுபவர்களுக்கும் அது பாதுகாப்பானது என்ற செய்தியைக்கொடுக்கவும் மிக முக்கியமானதாகும்.

இது போலவே, Enron, World Com போன்ற பல நிறுவனங்களின் தலைமை இயக்குனர்கள் அமெரிக்கச் சிறையில் வாடுகின்றார்கள். அமெரிக்காவில் இறுக்கமாக இருக்கும் இந்தச் சட்டங்கள் கனடாவில், ஐரோப்பாவில் அவ்வளவு இறுக்கமானது அல்ல. கனடாவில் நடந்த BreX போன்ற ஊழல்களுக்கு இன்னும் எவரும் சிறைசெல்லவில்லை.

இந்த Lord Black இன் வழக்கில் 13 குற்றச்சாட்டுகளில், பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்ததைவிட, ஏமாற்று வேலைக்கும் சாட்சியத்தை மறைத்ததற்கும் தான் யூரிகள் முக்கியத்துவம் கொடுத்து குற்றச்சாட்டுகளை உறுதிசெய்துள்ளார்கள். சட்டம் படித்தவர்களை விட, யூரர்களாக வந்த சாதாரண பொதுமக்களுக்கும் இந்த முதலாளித்துவ அமைப்பைப் பற்றிய தெளிவு முழுமையாக இருந்துள்ளது. இந்த அமைப்பு செழிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

### Conrad Black

- **1944ல் மொன்றியல் கியூபெக்கில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஜோர்ஜ்பிளாக் பெரிய பணக்காரர்.**
- **Lavel பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை 1970ல் முடித்தார்.**
- **1971ல் Sherbrooke Record என்ற பத்திரிகையை வாங்கி நடத்தி வந்தார். இவருக்கு தந்தை வழியில் வந்த சொத்துக்களினால் வேறும் பலமுதலீடுகளைச் செய்ய முடிந்தது.**
- **2003ல், 7 மில்லியன் டொலர்களைக் கையாடியமைக்காக இவர் Hollinger நிறுவனத்தில் இருந்து இராஜினாமாச் செய்தார்.**
- **நவம்பர்2004ல் குடியியல் (சிவில்) குற்றவியல் (கிரிமினல்) குற்றச்சாட்டுக்கள் இவர்மீது அமெரிக்க அரசாங்கத்தினால் சுமத்தப் பட்டது.**
- **ஜுலை 2007ல் இவர்மீது குற்றவியல் வழக்குகள் சிலவற்றிற்காக குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இவற்றிற்கு இவர் மேன் முறையீடு செய்துள்ளார். இந்த மேன்முறையீடுகளுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்படுமானால் இவர் 35 ஆண்டுகள் வரையில் சிறையில் கழிக்க நேரிடலாம்.**

■ ■ ■


தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

**வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர். வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!**

416-400-6406



# www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

**இணையம்** .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே ***inayam.net*** இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே ***inayam.net***

முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam

**416•400•6406**

digi

முதன் முதலாக

## யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடி

(வண்ணார்பண்ணைக்கு அருகில்)

கனடா வாழ் மக்கள்

# ஒன்று கூடல்

ஒன்றை **Markham – Miline Park –Mapleview A**

(Just South of Hwy 7, On McCowan) ல்

**August 19,2007** ல்

நடாத்துகின்றனர்.

**ஐயனார் கோவிலடி கனடா வாழ் (ரொரண்ரோ பெரும் பாகம்) மக்கள் அனைவரையும் கலந்து உங்கள் உறவினர்கள், நண்பர்களை சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.**

உங்களது வருகையை தேவன் - 416-491-8326

என்ற தொலை பேசிக்கு அழைத்து, ஆவணி 12ந் திகதிக்கு முன்னர்

பதிவு செய்து கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு

கொளசி 416-450-6833, 905-887-7457

வெற்றி வேல் 416-831-8549 (கைத் தொலைபேசி) 416-283-6651

# வேண்டுகோள்

அனலைதீவு வாழ்வும் வளமும் "வரலாற்று நூல்" பதிப்பாசிரியர் திரு.பெ.துரைராஜா அவர்களின் முயற்சியினால் ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டு நூலாக்கப் பதிவுகள் துரிதமாக நடை-பெற்று வருகின்றன. அனலை சார்ந்த அனைத்து மக்களிடமிருந்து ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்டுகின்றன. ஆக்கங்கள் தரவிரும்புபவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 20ந் திகதி 2007க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைப்பதோடு அனலையின் சான்று பகர் பழைய, புதிய புகைப்படங்கள் இருப்பினும் அனுப்பி வைக்கும்படி நூலாக்கக் குழு கேட்டுக்கொள்கின்றது. இவை நூலாக்கக் இக்குழுவினால், மேற்பார்வை செய்யப்பட்ட பின் தரமானவை அந்நூலில் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகிறோம்.

நன்றி

தொடர்புகளுக்கு
தலைவர்
நூலாக்கக்குழு
பதிப்பாளர் கரு கந்தையா
திரு.பெ.துரைராஜா Tel 416-284-5555
Tel 416-286-3798 -Fax 416-284-5727
Analaitivuhistory@gmail.com
Analaitivuhistory@gmail.com

# கூர்

## கனடா நவீன தமிழ் கலை, இலக்கியத் தொகுப்பு

2008 பனிக் கால ஆரம்பத்தில்
வெளிவரவிருக்கிறது.
தொகுப்பிற்கான சிறுகதை, கவிதை,
விமர்சனக் கட்டுரை, நூல் மதிப்புரை,
மொழிபெயர்ப்பு ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

**தொடர்புகளுக்கு:**

Koor Art & Literary Circle, 24, Brimstone cres., ON. M1V 2L3 | koorcircle@gmail.com

416 458 9426 | 416 551 0087 | 416 500 9016

# பூச்சிக் கொல்லிப் பயன்பாடு

- த. சிவதாசன் -
வீடு விற்பனை முகவர்

பல கோடிக்கணக்கான விடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை இயற்கையை செயற்கைத்தனமாக மாற்றி வருவதால் இயற்கையின் சமநிலையில் பல குழப்பங்கள் உருவாகின்றன. விஞ்ஞான வளர்ச்சியால் வாழ்வியல் மிகவும் இலகுவாகிய நிலையில் நமது அன்றாட வாழ்வில் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் இராசயன பதார்த்தங்களின் தாக்கம் இருக்கின்றது. குடிக்கின்ற நீரில் குளோரீன், வீசுகின்ற காற்றில் காபனீரொட்சைட்டு போன்ற கரிவாயுக் கழிவுகள், வாகனப்புகை, தொழிற்சாலைப் புகை போன்றவற்றால் உருவாகும் விண்ணின் ஓசோன் ஓட்டைகள் UV கதிரின் தாக்கத்தால் மண்ணில் மாந்தர் பாதிப்புறுகின்றனர். மண்ணில் மட்டுமென்ன பூச்சி கொல்லிகள், களைகொல்லிகள், கிருமி நாசினிகள், உர வகைகள் என்று பலதரப்பட்ட இராசயன சேர்வைகள் சூழலை அசுத்தப்படுத்துகின்றன. இவற்றின் மத்தியில் இயற்கையிலிருந்து அன்னியப்பட்ட செயற்கைத் தனமான மனிதர்களின் வாழ்வு.... இதனால் பல உடல், மன நோய்கள்... செயற்கைத் தனத்தை அடியோடு ஒழித்துவிட்டு இயற்கையை நம்பி வாழும் வாழ்விலிருந்து நாம் நெடுந்தூரம் அன்னியப்பட்டுவிட்ட நிலையில் இதையே எண்ணிக் கலங்குவதை விடுத்து வாழ்க்கையை அதன் போக்கில் எதிர்கொண்டால்தான் என்ன? அறிவியல் வளர்ச்சியில் உலகம் விழித்துக் கொண்டிருக்கின்ற போது நாமும் விழிக்க வேண்டாமா?

விஞ்ஞானம் வாழ்வை வளப்படுத்துகிறதா? சிதைக்கிறதா? என்பது ஆரம்ப காலத்திலிருந்தே சர்ச்சைக்குரிய விவாதமாகவிருந்து வருகிறது. எனவே இந்தக் கேள்விகளுக்கு ஒரு சார்பாக ஒருபோதுமே தீர்வு சொல்ல முடியாது என்பதே உண்மை. எனவே அதை ஒரு புறமாக விட்டு விட்டு இன்று எடுத்துக்கொண்ட விடயத்துள் நுழைவோம்.

சில மக்கள் களை கொல்லிகளை, பூச்சி கொல்லிகளை வீடுகளில் பாவிப்பதனால் தமக்கு சுவாச நோய்கள், புற்று நோய்கள் வருவதாகவும் இதற்கு அரசு உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என்றும் ஒரு கண்டனப் போராட்டத்தை நிகழ்த்தியிருந்தனர். இதற்குக் காரணம் கனடாவில் மலிந்து கிடக்கும் இரசயான பதார்த்தங்கள்தான். வளர்ந்துவிட்ட நாடுகள் எதிர்நோக்கும் சுவாச நோய்கள், புற்று நோய்கள், மலட்டுத்தன்மை போன்றவற்றின் காரணிகள் இவ்வகையான இராசயன பதார்த்தங்கள் என்பது நிருபணமாகாத தகவல்கள். ஆனால் நிருபிக்கப்பட்ட நிலையில் அவற்றை நிச்சயம் பாவனையிலிருந்து அகற்றுமளவுக்கு சட்டம் மிகவும் விழிப்பாகவே இருக்கிறது.

கனடிய அரசு மார்கழி 2002 இல் இது குறித்து மற்றுமொரு புதிய சட்டத்தையும் அமுல்ப்படுத்தியிருந்தது.இதன்படி குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் முதியோர் ஆகியோரின் பாதுகாப்பை எந்த நிலையிலும் உறுதி செய்ய வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

பொருட்களிலுள்ள மூலப் பொருட்களாலான பாதிப்புக்களின் அளவை அளவிடவென ஒரு அலகு உண்டு. பண்ட உருவாக்கப் பாதுகாக்குக் காரணி (Product Formulation Safety Factor) என்பதே அது. மேற்குறிப்பிட்ட புதிய சட்டத்தின் மூலம் இவ்வுலகானது 100 மடங்கிலிருந்து 1000 மடங்குகளாக அதிகரிக்கப்பட்டடு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

Health Canada வின் பூச்சிக் கட்டுப்பாட்டு மீளாய்வு வாரியம் (Pest Management Review Agency) எத்தகைய பூச்சி கொல்லிகளாலும் மனிதர்கள், வீட்டுப் பிராணிகள், சூழல் சுகாதாரம் பாதிப்புறுவதை ஆராயும் பணியை மேற்கொண்டு வருகிறது. இவ் வாரியம், குறுகிய கால பாதிப்புகளை மட்டுமன்றி, மிக நீண்டகாலத்துக்கும் தொடரக்கூடிய அல்லது பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பக்க விளைவுகளையும் ஆராய்ந்து வருகின்றனர்.

அந்த வகையில் மிகச் சிறிய அளவிலேனும் பாதிப்பை ஏற்படுத்துமென சந்தேகிக்கும் பட்சத்தில் அப்பொருள் சந்தைப்படுத்து



வதில் தடைகள் உண்டாகும். இத்தகைய ஆய்வுகள் ஆய்வு நிறுவனங்களாலும் சட்ட அமுலாக்க நிறுவனங்களாலும் சாதக பாதக நோக்கின் அடிப்படையில் தொடாச்சியாக ஆராயப்பட்டு வருகின்றது.

சுவாச நோய்களின் திட்டவட்டமான காரணி என்னவென்பதை மருத்துவ உலகம் தெளிவாகக் கூறாதமையால் உலகிலுள்ள அனைத்து இரசாயனப் பதார்த்தங்களும் உயிரழிவிற்கான ஆபத்தைக் கொண்டிருக்கின்றதாக அச்சப்படுவதேயாகும். எந்த இரசாயனப் பதார்த்தத்திற்கும் தாக்கு திறனும் பக்க விளைவுகளுமுண்டு. ஆயினும் மனிதர்களே இயற்கையை மாசுபடுத்தி ஊறு விளைவிக்கும் இராசாயனப் பதார்த்தங்களைப் பாவிக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் இதற்கான எதிர்ப்புகளும் அரசுகளின் சட்ட வரையறைகளும் உருவாகி வருகின்றன.

இரசாயனம் இல்லாது எமது அன்றாட வாழ்வே இருக்க முடியாது. குழாய் நீரில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் பக்டீரியங்களை அழித்து சுத்தமான நீரைத் தருவதற்காய் குளோரீன் கலக்கப்படுகிறது.

சவர்க்காராம், சிகை கழுவும் பதார்த்தங்கள், முக அலங்காரப் பசைகள் போன்ற எதை எடுத்துக் கொண்டாலும் இவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் இல்லாமலில்லை. உண்கின்ற உணவு, குடிக்கின்ற பானம் என அனைத்துமே இரசாயனப் பொருட்களைக் கொண்டவையே.

வீட்டைச் சுற்றியுள்ள புல் வெளிகள், தோட்டப் பயிர்ச் செய்கை, விவசாயம் யாவற்றிலுமே களை கொல்லிகளும் பூச்சி நாசினிகளும் பயன்படுத்தப்படவே செய்கின்றன. உணவைப் பதப்படுத்த, நீண்டகாலம் பேண, சுவையூட்ட என பல தரப்பட்ட வழிகளிலும் இரசாயனப் பதார்த்தங்கள் பாவிக்கப்படுகின்றன.

எனவே இவை குறித்து வீணே மனங் கலங்குவதைத் தவிர்ப்பது நன்று. உண்மையைச் சொன்னால் இவற்றின் பக்க விளைவுகள் குறித்த கவலையைவிட இவற்றின் உதவியில்லாத நிலையில் ஆபத்துக்கள் பாதிப்புக்கள் அதிகம் எதிர்நோக்குவோம்.

பூச்சி கொல்லிகள் மனிதர்க்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் படையெடுப்பைத் தடை செய்கின்றன. உதாரணமாக West Nile Virus எனப்படும் நோய்க் கிருமிகளைக் காவும் நுளம்புகளை அழித்தொழிக்க அவை பயன்படுகின்றன. இது செய்யப்பட வேண்டியதொன்று. எனவே தேவையுணர்ந்து அவ்வப்போது உகந்த பூச்சி கொல்லிகளை பிரயோகித்தேயாக வேண்டும். எம் வீடுகளில் சமையல் மணத்தினால் வந்து சேரும் கரப்பான் பூச்சிகள் பல நோயுண்டாக்கும் கிருமிகளைக் காவி வருவதனால் அவற்றை ஒழிக்க உடனடியாக மருந்து வகைகள் பாவித்தேயாக வேண்டும்.

சிலவகை இரசாயனப் பதார்த்தங்களின் மணம் பலரை ஒவ்வாமைக்குள்ளாக்குவதாக குறிப்பிடப் படுகிறது. ஆயினும் அத்தகைய மருந்துகளை அடித்த பின்னர் அவர்கள் அறிவுறுத்துவதற்கேற்ப சில மணி நேரங்களுக்கு அவ்விடத்தை விட்டு அகன்றிருப்பது நன்று. எப்பொழுதும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒழுகுவது நல்லது.

அடுத்து, களை கொல்லிகள் இங்கு சில பருவ காலங்களில் பாவிக்கப்படுகிறது. புற்கள் வளர்வதை விட இங்கு களைகள் இலகுவில் முளைத்து ஆக்கிரமித்து விடுவதைக் கட்டுப்படுத்தவே இம் முயற்சி நடைபெறுகிறது. இக்களைகள் சில ஒவ்வாமையையும், சுவாச நோய்களையும் உருவாக்குகின்றன. சிலருக்கு பெருமளவு பாதிப்பு ஏற்படுவதாக அறியப்படுகிறது. கனடாவில் 15 - 20 வீதத்தினர் இவ் ஒவ்வாமையினால் அவதியுறுகின்றனர். சில களைகளிலிருந்தும் உருவாகும் மகரந்தங்கள், விதைகள் காற்றில் பரம்பலடைந்து வந்து சுவாசத்தில் கலப்பதுவே இதற்குக் காரணம். இப்படியான களைகளை அழிப்பது அவசியம்.

பூமி வெப்பமடைகிறது. வளியும் மாறுகிறது. களைகொல்லிகள் இந்நிலையிலிருந்து பூமியையும், வளியையும் புல் வெளிகளையும் பாதுகாக்கிறது. நன்றாகப் பராமரிக்கப்பட்ட களைகளற்ற புல்வெளி வளியிலுள்ள மாசுக்களிலிருந்து காபனீரொட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு போன்றவற்றை உறிஞ்சி சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசனை மட்டுமே வெளிப்படுத்துகிறது.

50 சதுர அடி பரப்புள்ள புல் வெளியிலிருந்து பெறப்படும் சுத்தமான காற்றானது அந்த நிலத்திற்கருகில் வாழும் நான்கு பேருக்கு அன்றாடம் தேவையான ஒட்சிசனை வழங்கக்கூடியதாகவுள்ளது. எனவே வளமான புல் வெளிகள் வீட்டில் சூழலில் இருப்பது மிகவும் ஆரோக்கியமானது.

நன்கு பராமரிக்கப்பட்ட புல் வெளிகள் மண்ணரிப்பைத் தடுத்து மழை நீரைத் தேக்கி சூழலுக்கும் குளிர்மையைத் தருகின்றது. களைகள் நிரம்பிய புல் வெளிக்கும் களைகளற்ற புல் வெளிக்கும் இடையே தரை வெப்பநிலை 18 - 24பாகை செல்சியஸ் வேறுபடுகிறது என்கிறார்கள்.

இவை தவிர, பயிர்ச்செய்கை, தோட்டச் செய்கை போன்றனவும் வளி வெப்பநிலையைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. இப்படியாக வைத்திருப்பதற்கும் பராமரிப்பதற்கும் களை கொல்லிகள் அவசியம். அத்துடன், கறையான் போன்ற கட்டிடங்களை அழிக்கவல்ல பூச்சிகளை ஒழிக்கவும் பூச்சி கொல்லிகள் உதவுகின்றன.

இறுதியாக, ஏற்ற இரசாயனப் பதார்த்தங்களை சிபார்சு செய்யுமளவுக்குப் பாவிக்கும் போது சகலருமே பயன் பெறுகிறார்கள் என்பதே உண்மை. இவற்றை முற்றாகப் புறக்கணிப்பதைவிட இவற்றின் பக்க விளைவுகளிலிருந்து பாதுகாக்கும் திறனை விஞ்ஞான வளர்ச்சியால் உருவாக்குவோம் பலன் பெறுவோம் என்பதே நாம் கருத்துக்கு எடுக்கவேண்டியது.

■ ■ ■


KESAVAN LAW OFFICE



- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

THANGAVEL M. KESAVAN
Barrister & Solicitor

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
TEL: (416) 754-9843
Fax: (416) 754-2362



SP ELECTRONICS

SALES & SERVICES

- COMPUTER
  COMPUTER INSTALLATION HARDWARE
- APPLIANCES SERVICES
- PRINTING & COPY SERVICES
- ACCOUNTING & TAX SERVICES
- தமிழ்வானொலி திருத்தி பெற்றுக்கொள்ள

S PATHMANATHAR
416 264 6400
2641 Eglinton Ave. E
Brimley & Eglinton

கீபோட் வகுப்புகள்

குறைந்த காலத்தில் அதிக மாணவர்களுடன் இயங்கி வரும் "Manon" மியூசிக் அக்கடமியினர் உங்கள் வீடுகளுக்கும் வந்து கற்பிக்கின்றார்கள்.



V. அஜித் - 647.204.0251, 416.902.6829

UPGRADE YOUR HOUSE



COMPLETE BASEMENT
KITCHEN CABINET
PLUMBING
ELECTRICAL WORK
PAINTING
CARPET
GARAGE DOOR OPENER
WASHROOM
HARD WOOD FLOOR
TILING
OUTSIDE CONCRETE WORK

CALL: **NATHAN**

Best Way
HOME RENOVATION
416.709.5422
1-155 Nor Finch Road, North York, ON

உங்கள் கற்பனை இல்லங்களை எங்கள் ஒப்பனையில் உருவாக்கித் தருகிறோம்.

# மலிவான வாகன காப்புறுதி கம்பனிகளைக் கண்டுபிடிப்பது எப்படி

## அறியவில்லையானால் அறிந்து கொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -



**பொதுவாக வாகன காப்புறுதிகளைக் கனடாவில் பெறவிரும்பினால் பின்வரும் வழிமுறைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.**

1. குறிப்பிட்ட ஒரு கம்பனியின் விற்பனைப் பிரதிநிதிமூலம் (Particular company sales agent) இத்தகைய நபர் குறிப்பிட்ட ஒரு கம்பனிக்கு மட்டும் விற்பனைப் பிரதிநிதியாக செயல்படுவார். இக்குறிப்பிடப்பட்ட கம்பனியில் மட்டும் வாகனகாப்புறுதி கோருவோருக்கு, கோருவோரின் தகவல்களை அடிப்படையாக வைத்து என்ன விலை போகின்றது என்பதனைப் பிரதிநிதி பார்த்துக் குறிப்பிடுவார்.

இக்குறிப்பிடப்பட்ட ஒரு கம்பனியின் பிரதிநிதி ஏனைய கம்பனிகளுக்கு பிரதிநிதியாக பணிபுரிய மாட்டார். உதாரணம்: (1) State farm Insurance company

(2) Co-operaters Insurance Company

2. குறிப்பிட்ட ஒரு கம்பனிக்கு மேலாக பல கம்பனிகளுக்குப் பணிபுரியும் முகவர் மூலம். (Independent Insurance broker)

இம்முகவர் ஒரு கம்பனிக்கு மட்டும் கட்டுப்பட்டு பணிபுரியும் முகவர் அல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட கம்பனிகளுக்கு முகவராக சுயமாக இயங்கும் அதிகாரம் இருந்தபோதும் கனடாவின் எல்லா வாகனக் காப்புறுதிக் கம்பனிகளும் இத்தகைய முகவர் மூலம் ஒப்பந்தங்களை விநியோகிப்பது இல்லை. சில குறிப்பிடப்பட்ட கம்பனிகள் மட்டும் தங்கள் வாகனக் காப்புறுதி ஒப்பந்தங்களை இம்முகவர்மூலம் மக்களுக்கு விநியோகிக்கும். இத்தகைய ஒரு முகவரும் தமக்கு முகவர் ஒப்பந்தம் உள்ள கம்பனியில் இருந்து வாகன காப்புறுதி கோருவோரின் தகவல்களை அடிப்படையாக வைத்து என்ன விலைபோகின்றது எனப் பார்த்துக் குறிப்பிடுவார்.

3. நேரடியாகவே வாகன காப்புறுதி ஒப்பந்தங்களை விநியோகிக்கும் கம்பனிகளோடு தொலைபேசியில் அல்லது மின்கணணி தொடர்பு சாதனங்களின் மூலம் தொடர்பு கொண்டு வாகனக் காப்புறுதிகளைப் பெறுதல். (Direct selling auto insurance companies) நேரடியாக அதாவது முகவர்கள் எவரின் உதவியும் இல்லாது வாகனகாப்புறுதிகளை விநியோகம் செய்யும் கம்பனிகளுக்கு

உதாரணமாக பின்வரும் கம்பனிகளைக் குறிப்பிடலாம்.

(a) Bell air direct insurance
(b) TD Meloche Monnex insurance (TD bank division)
(c) Royal bank insurance

4. மாகாண அரசின் ஊடாக காப்புறுதி பெறுதல் (Government insurance corporation)

கனடாவிலுள்ள எல்லா மாகாண அரசுகளும் வாகன காப்புறுதியை விநியோகம் செய்வதில்லை. அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனங்கள் வாகன காப்புறுதிகளை விநியோகிப்பது கனடாவில் பின்வரும் மாகாணங்களின் அரசுகள் மட்டுமே ஆகும்.

1. பிரிட்டிஸ் கொலம்பியா
2. மனிற்றோபா
3. சாஸ்கெச்சுவான்

வாகன உரிமைப் பத்திரம் பெற்றுக்கொள்ளும்போதே இம்மாகாணங்களின் வாகனக் காப்புறுதிப் பத்திரமும் பெற்றுக்கொள்ளலாம். கியூபெக் மாகாணத்தில் மட்டும் மாகாண அரசின் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அடிப்படை வாகனக் காப்புறுதி ஒப்பந்தங்களை மட்டும் விநியோகிக்க, தனியார் கம்பனிகள் ஏனைய வாகன ஒப்பந்தங்களை விநியோகிக்கின்றன. ஒன்ராறியோ மாகாணத்திலும் கனடாவின் ஏனைய மாகாணங்களிலும் தனியார் கம்பனிகளே காப்புறுதியினை விநியோகிக்கின்றன.

வாகனகாப்புறுதியில்'விலை'என்பது வாகன காப்புறுதி கோருபவரின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு கம்பனியும் வெவ்வேறு விலைகளில் வழங்குகின்றன. இவ்விலைகளின் ஏற்ற இறக்கம் என்பது இரு காரணிகளை அடிப்படையாக வைத்து முடிவுசெய்யப்படுகின்றது. அவை யாவன:

### வாகன காப்புறுதிகளின் விலைகளை நிர்ணயிக்கும் காரணிகள்

பொதுவான காரணிகள் (General factors)

1. ஏற்கனவே ஒரு நகரில் ஒரு குறிப்பிடப்பட்ட வாகன காப்புறுதி கம்பனியில் இருந்து மொத்தமாக இந்நகரில் உள்ளவர்களால் நட்டஈடுகள் பெறப்பட்ட தொகைகள், வரலாறுகள்(General Claim history)
2. ஒவ்வொருவரும் மாதாமாதம் செலுத்தும் வாகன காப்புறுதிப்பணத்தினைக் கம்பனி முதலீடு செய்யும்போது கம்பனிக்கு ஏற்படும் வருமானம். (Investment, income)
3. கம்பனிக்கு ஏற்படும் பொதுவான செலவுகள் (company general expenses)

### காப்புறுதியின் விலையினைத் தீர்மானிக்கும் தனியாரின் காரணிகள்

1. வசிக்கும் நகரம் (விலை என்பது நகரத்துக்கு நகரம் வித்தியாசப்படும்.)
2. வாகனம் செலுத்தும் லைசென்ஸ் வைத்திருக்கும் காலம்.இக்காலத்தில் பெற்றுக்கொண்ட தண்டனை ரிக்கற்றுகள், பிரச்சினைகள், புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்
3. ஏற்கனவே எதிர்கொண்ட வாகன விபத்துகள், நட்டஈடு கோரிக்கைகள்
4. வாகனத்தின் உபயோகம்
5. வாகனத்தினை உபயோகிக்கப் போகும் ஏனைய சாரதிகள்
6. பெற்றுக்கொள்ள போடும் ஒப்பந்தங்களின் வகைகள்
7. ஆண்? பெண்? வயது?
8. நட்டஈடு கோரிக்கையின்போது காப்புறுதி உரிமையாளரின் பணப் பையில் இருந்து போகும் பணம் (Deductible)
9. கம்பனிகள் வழங்கும் ஏனைய பல்வேறு வகையான கழிவுகள்

சில நேரங்களில் வாகனம் செலுத்தும் ஒருவர் நல்ல வரலாற்றுப் பதிவுகளைத் தொடர்ந்து வைத்திருந்தபோதும் காப்புறுதியைப் புதுப்பிக்கும்போது மாத கட்டுப்பணம் அதிகரித்து இருப்பது ஆச்சரியமாக இருக்கும்.

இது பொதுவான காரணிகளின் அடிப்படையில் அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக போய்விடுகிறது.

பனி, மழை பொழிந்து மோசமான காலநிலையில் ஆயிரம் வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியது என்பதனைச் செய்தியாக அறியும்போது அது எல்லோரின் விலைகளையும் பாதிக்கப் போகின்றது என்பதனைப் பொதுவான காரணிகளின் அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார தாக்கத்தில் காப்புறுதிப் பணங்களின் முதலீடுகள் வீழ்ச்சியடைந்தால் அது மாதாமாதம் செலுத்தும் கட்டுப்பணத்தினை அதிகரிக்கச் செய்யும்.

கம்பனிக்கு ஏற்படும் செலவுகள் அதிகரிக்கும்போது அது மாத கட்டுப்பணத்தினையும் அதிகரிக்கப் பண்ணும்.

மோசடியாக நட்டஈடு ஒருவர் கோரும்போது அது ஏனையோரையும் பாதிக்கும். மோசமாக ஒரு வருடத்தில் நட்டஈடு கோருவோர், அதற்காக கம்பனி செலவழிக்கும் புலானாய்வுச் செலவுகள் என்பன மில்லியன் மில்லியன் டொலர்கள். சுருக்கமாக குறிப்பிடப்போனால் ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் ஒரு ஆபத்துக்கு நட்டஈடு வழங்கும் பண பெட்டகம். மாதாமாதம் இப்பெட்டகத்தில் பணத்தினைப் போடுகின்றோம். இப்பெட்டகத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நட்டஈடு வெளியேற்றத்திற்கு மேலாக பணம் வெளியே போகும்போது, அது எல்லோரையும் பாதிக்கும்.

> “சில நேரங்களில் வாகனம் செலுத்தும் ஒருவர் நல்ல வரலாற்றுப் பதிவுகளைத் தொடர்ந்து வைத்திருந்தபோதும் காப்புறுதியைப் புதுப்பிக்கும்போது மாத கட்டுப்பணம் அதிகரித்து இருப்பது ஆச்சரியமாக இருக்கும்.”

இங்கு வாகனக் காப்புறுதியின் விலை என்பது கம்பனிக்குக் கம்பனி, ஒவ்வொரு நபரின் நிலைப்பாட்டிற்கும் ஏற்ற மாதிரி ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும்.

ஒவ்வொரு நபரினதும் தகவல்களின் அடிப்படையில் விலைகள் எவ்வாறு நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பது ஒவ்வொரு கம்பனிகளினதும் மின்கணணி மையத்தில் தன்னிச்சையாக தகவல்களை வழங்கும்போது இதுவே விலை என்பது வரையறை செய்யப்பட்டுள்ளது. சரி. இந்த நிலையில் ஏராளமான கம்பனிகள் செயல்படும் ஒரு மாகாணத்தில் மலிவான கம்பனி எதுவென்பதனை எப்படிக் கண்டுபிடிப்பது?

(ஒரு நபருக்கு மலிவாகஉள்ள கம்பனியில் இன்னொரு நபருக்கும் மலிவாக இருக்கும் என்று அல்ல)

**தகவல் தொடர் - 8**

நேரடியாக வழங்கும் கம்பனிகள் என்றால் நேரடியாகவோ அல்லது முகவர் மூலம் வழங்கும் கம்பனிகள் என்றால் முகவர்கள் மூலமாகவோ தங்களைப் பற்றிய தகவல்களை நேரடியாகச் சமர்ப்பித்து விலைகளைப் பரிசீலனைசெய்துகொண்டு, மலிவான விலை உள்ள கம்பனி எது என்பதனைக் கண்டுகொள்ளலாம். ஆனால், இது ஒரு சிரமமான, நேரத்தினைத் தின்னும் வேலை.

இத்தகைய மலிவான கம்பனி ஒவ்வொருவருக்கும் எதுவாக இருக்கும் என்பதனை சிபார்சு செய்யும் ஒரு நிறுவனம் உண்டு. இந்நிறுவனம் தங்களைப் பற்றிய தகவல்களை மின்கணணி மையத்தின் மூலம் உள்வாங்கி, மூன்று கம்பனிகளைச் சிபார்சு செய்யும். இம்மையம், குறிப்பிட்ட ஒவ்வொருவரின் தகவல்களையும் பெற்றுக்கொண்டு, அதற்கேற்றவாறு பல்வேறு கம்பனிகளிலும் விலைகளை அறிந்து, மலிவான கம்பனி எது என்பதனைத் தெரிவிக்கும்.

(ஒவ்வொரு தனிநபரும் தத்தமது தகவல்களை நேர்மையான முறையில் வழங்குதல் வேண்டும். பொய்யான தகவல்களை வழங்கும்போது அது பின்னர் பிடிபடும் போது விலை நிர்ணயங்களைப் பாதிக்கும்.)

### இந்நிறுவனத்தினை எவ்வாறு அணுகுவது?

மின்கணணி தொடர் மையத்தில்

www.kantex.ca அல்லது 1-888-854-2503 அல்லது 416-598-5401 என்றும் மின் கணணி மையத்தினுள் செல்லுங்கள். கேட்கப்படும் தகவல்களைப் பதிவுசெய்துகொண்டு வரும்போது மலிவான கம்பனிகளின் விலைகள் தன்னிச்சையாக காட்டும்.

மலிவான கம்பனி எது என்பது தரப்படும் போதும் அக்கம்பனி பற்றிய விபரங்களை, எவ்வாறு தொடர்புகொண்டு வாகன காப்புறுதி ஒப்பந்தங்களை முடிப்பது? அதற்குரிய வழிமுறைகள் இத்தகவல் மையத்தின் மூலமே வழிகாட்டப்படும். தொலைபேசி இலக்கங்கள்யாவும் மின்கணணி தொடர் மையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இலகுவான முறையில் மலிவான கம்பனியினைத் தெரிவுசெய்து கொள்ள முடியும். இது ஒரு நல்ல வழிமுறை. இதுவரை காலமும் அறியவில்லையானால் இன்றில் இருந்து அறிந்துகொள்ளுங்கள்.

வாகனக் காப்புறுதிக்கு என இதுவரை காலமும் அதிக விலை கொடுத்த மன உழைச்சலிலிருந்து விடுபடுவீர்!

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான தேவைகளுக்கும் ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

# இந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் சில...

**August 03, 2007**
- றிச்மண்ட்ஹில் பெருமாள் தேர்த் திருவிழா
- தங்கத்தீபம் பத்திரிகையின் 100வது இதழ் வெளியீட்டு விழா

**August 04, 2007**
- அனலைதீவு கலாச்சார ஒன்றியத்தின் கோடைகால ஒன்றுகூடல்
- தமிழ் இளையோர் அமைப்பின் தமிழர்நாள் 2007
- Guru Purnima and Parama Puja Sri Ganapathysachidananda Swamiji Visit
- உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியின் வானவில்
- யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் கலைவிழா
- வர்த்தக வசந்தம் 2007-07-26
- கரவெட்டி ஒன்றியத்தின் ஒன்றுகூடல்
- புளியங்கூடல் மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடல்

**August 05, 2007**
- Guru Purnima and Parama Puja Sri Ganapathysachidananda Swamiji Visit
- புத்தூர் தமிழ்க் கனேடியன் விளையாட்டுக் கழகத்தின் ஒன்றுகூடல்
- உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி, மகளிர் கல்லூரியினரின் வானவில் 2007
- பண்கலை பண்பாட்டுக்கழகத்தின் ஒன்றுகூடல்
- வர்த்தக வசந்தம் 2007 - A Trade Show For every One
- நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடல்
- தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் விளையாட்டு விழா
- தும்பளை நலன்புரிச் சங்கத்தினரின் வருடாந்த ஒன்றுகூடல்
- கோண்டாவில் குமரன் விளையாட்டுக் கழகத்தினரின் ஒன்றுகூடல்
- கனடா மாதகல் நலன்புரிச் சங்கத்தின் விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும்

**August 06, 2007**
- Civic Day

**August 11, 2007**
- தமிழ் காணிவல் - தமிழ் மக்களுக்கான ஒரு குதூகலத் திருவிழா Toronto
- கனடா கந்தசாமி கோவில் தேர்த் திருவிழா
- Cultural show 2007
- சாயி ஸ்வராலயாவின் கலைவிழா 2007
- மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் விளையாட்டுப் போட்டியும்
- சிறிலங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகத்தின் வசந்த விழா

**August 12, 2007**
- தமிழ் காணிவல் - தமிழ் மக்களுக்கான ஒரு குதூகலத் திருவிழா Toronto

**August 13, 2007**
- ரொறன்ரோ துர்க்கை அம்மன் கோவில் தேர்த் திருவிழா

**August 14, 2007**
- வன்கூவர் துர்க்கை அம்மன் கோவில் தேர்த் திருவிழா

**August 18, 2007**
- கணபதி ரவீந்திரன், ரூபி யோகதாசன் ஆகியோரின் ஒளிவட்டு (DVD) வெளியீட்டு விழா
- ரொறன்ரோ வரசித்தி விநாயகர் கோவில் - அம்மன் தேர்
- மொன்றியல் திருமுருகன் தேர்
- Natchathra Iravu - பாரதி கலைக்கோயிலில் நட்சத்திர இரவு
- இராமநாதபுரம் மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடல்

**August 25, 2007**
- கட்டுவன், மயிலிட்டி தெற்கு, ஊரங்குணை மக்கள் ஒன்றியத்தின் ஒன்றுகூடல்

**August 26, 2007**
- மிசிசாக்கா சிறீ முத்துமாரி அம்மன் தேர்

**August 29, 2007**
- வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் பேச்சு, வாசிப்பு, ஓவியப் போட்டிகள்

**September 01, 2007**
- கே.எஸ்.பாலச்சந்திரனின் அண்ணை றைட் Mono Act C.D. வெளியீட்டு விழா
- விஜயகுமாரன் றொம்மியா அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

**September 02, 2007**
- உடுப்பிட்டி கலாச்சாரச் சங்கத்தினரின் நட்சத்திரக் கலைவிழா
- திருகோணமலை நலன்புரிச் சங்கத்தினரின் திருமலை இரவு

**September 03, 2007**
- Labour Day
- றிச்மண்ட் ஹில் பெருமாள் தேர்த் திருவிழா

**இதைவிடவும் அதிக நிகழ்வுகள் ரொறன்ரோவில் நடை பெறுகின்றன. மேலே உள்ளவை inayam.net இல் பதியப்பட்ட நிகழ்வுகளில் சில. உங்கள் நிகழ்வுகளையும் inayam.netஇல் பதிவு செய்வதன் மூலம் இன்னொரு நிகழ்வு அதே நாளில் இடம்பெறுவதை தவிருங்கள்.**


inayam

**www.inayam.net**

info@inayam.net

**416.400.6.406**

# வீடும் தளபாடங்களும்



பாலா
இராஜேந்திரன்

'வீட்டைக் கட்டிப்பார்' என்று தமிழில் சொல்வார்கள். ஏனெனில், வீடு கட்டுவது ஒரு சுலபமான காரியமல்ல.ஆனால் கனடாவில் அந்த வாக்கியம் முக்கியத்துவம் பெறவில்லை. ஏனெனில், இங்கே வீடுகள் எங்களுக்கும் கட்டிக்கொள்ளலாம்.

வீடு கட்டியபின் என்ன தளபாடங்கள் வாங்குவது என்ற பிரச்சினை வருகிறது. படுக்கை அறை, பெரிதாக இருக்குமானால், அதாவது(20'x15'க்குக் குறையாமல்) முழு படுக்கை அறைத் தளபாடமும் வாங்கிப் போடலாம். ஒரு முழு படுக்கையறைத் தளபாடம் என்பது ஒரு கட்டில், இரண்டு இரவு மேசைகள், (கட்டிலின் இரு பக்கமும் தலைமாட்டில் வைப்பது. ஒரு அலுமாரி அல்லது லாச்சியுள்ள ஒரு chest (Drawer chest), ஒரு Dresser, ஒரு கண்ணாடி, ஒரு அலுமாரி, (சிறியது அல்லது பெரியது). உங்கள் படுக்கை அறை சிறிதாயின் சிறிய அலுமாரியை வாங்கலாம்.

வீடு பெரிதென்பதற்காக நிறையத் தளபாடங்களை வாங்காதீர்கள். சகல அறைகளிலும் படுக்கை செற் வைக்க வேண்டியதில்லை. அறைகள் சிறிதாயிருந்தால் கண்ணாடி மேசை வாங்காமல், சுவரில் மாட்டக்கூடிய ஒரு நீண்ட கண்ணாடியையும் இரவு மேசையையும் உபயோகிக்கலாம். இப்படிச் செய்வதால் அறையில் நீங்கள் நடமாடவும் இடம் இருக்கும். இதேபோல் வரவேற்பறை(Living room)யில் அது பெரிதாக உள்ளது என்பதற்காக அல்லது உங்களது விருப்பத்தின் பேரில் இரண்டு சோபா செட்கள் போடுவது அவ்வளவு நல்லது அல்ல. வீடு பெரிதாயிருந்தால் ஒரு சோபா செட்டுடன் நான்கு அல்லது ஆறு பெரிய நாற்காலிகளை உபயோகிக்கலாம். அல்லது பிரம்பு சோபாக்களை வாங்கி உபயோகிக்கலாம். அல்லது இரண்டு Love seat களை உபயோகிக்கலாம்.



காப்பி மேசைகள் (Coffee table) வரவேற்பு அறையிலுள்ள தளபாடங்களும் இசைவானதாக இருக்கக்கூடியதாக அமையவேண்டும். பொதுவாக இந்தத் தளபாடங்களை வரவேற்பறையின் சுவர்களின் நிறத்திற்கோ அல்லது தரைக்குப் போடப்பட்ட பலகையின் நிறத்துக்கோ ஏற்பவும் இருக்கலாம்.

இவற்றை விடுத்து, பிறர் வீட்டில் உள்ளது போன்ற தளபாடங்கள், அல்லது அவற்றை விடச் சிறந்த தளபாடங்கள் வாங்க வேண்டுமென்று, தேவையற்ற அல்லது அந்த இடத்திற்குக் கொஞ்சமும் பொருத்தமில்லாத தளபாடங்களை வாங்கிக் குவிக்கிறார்கள். பெரிய வீடாயிருந்தாலும் இறுதியில் தளபாடங்களை வாங்கி வீட்டை நிரப்பிவிடுவதால், வீட்டிற்குள் சுதந்திரமாக நடமாட முடியாததாகிவிடுகிறது. மேலும் வீட்டைத் துப்பரவு செய்வதும் கடினமாகிவிடுகிறது. தேவையான தளபாடங்களை மட்டும் வாங்குங்கள். தேவையற்ற, அவசியமில்லாத தளபாடங்களை வாங்காமல் விடுவதால் பணமும், நேரமும் மிச்சப்படுவதுடன் வீட்டில் வசிப்பவர்களுக்கு நடமாட நிறைய இடமும் கிடைக்கும்.

தளபாடங்கள், உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும். படிப்பதற்கும்,சாப்பிடும் நேரம் உபயோகிக்கும் நாற்காலிகள் எம்மை நிமிர்ந்து உட்கார வைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதேபோன்று, நாம் நித்திரை செய்யும் மெத்தை ஓரளவு கடினமாகவும் அதே சமயம் உடம்பில் எந்த வலியும் ஏற்படாது நித்திரை செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எவ்வளவு நல்ல மெத்தையாயினும் சரி, சோபா செற் ஆனாலும் சரி எமது பிள்ளைகளை அவற்றின் மீது ஏறித் துள்ள அனுமதிக்கக் கூடாது. துள்ளினால் எந்த நல்ல மெத்தையானாலும் சரி, எந்த நல்ல சோபாவானாலும் சரி பழுதடையவே செய்யும்.


தளபாடங்களை அடிக்கடி துடைத்துத் துப்பரவாக வைத்திருக்க வேண்டும்.

நல்லதளபாடங்களை வாங்கவும், அவற்றை நல்லபடி உபயோகிக்கவும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நல்ல வீடும், தளபாடமும் அமைவது எமது திறமையாலே. நாம் மிகவும் விழிப்புடனும் அவதானத்துடனும் செயல்படவேண்டும்.

■ ■ ■


www.PowerofSaleHome.com

Kennedy/Ellesmere



3 Bed Room, 2 Wash Room
Low Maintenance Fee
No Down Payment
$119,500

Midland/Lawrence



2 Bed Room,
Steps To 24Hrs TTC
Shopping, T/R Subway Station.
Shows Very Well.
$139,500

Salem/Rossland




NEW HOUSE
4 Bed Room
3 Wash Room
$389,900

விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லத்திற்கு....

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
Bus. : 416.290.1200 (24Hr.)
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

Apex Creation - 647.439.3310

Suresh Sellathurai
*Sales Representative*
Dir. : 416.356.7330



*Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.*



# உங்கள் இல்லக்கனவுகளின் திறவுகோல்

- Residential 1st, 2nd, 3rd Mortgage
- Refinancing/Renewal/Transfer
- Switch the mortgage without loosing/paying any cents
- Mortgage for new immigrants
- Mortgage for non immigrants
- Mortgage for social insurance starting with 9
- 0 down payment mortgage
- Mortgage for previously bankrupt
- Mortgage for no credit established
- Mortgage for self-employed
- Mortgage for poor credit
- Commercial mortgages
- Secured, Unsecured line of credit
- Debt consultation

**NO CMHC or Genworth Premium**

**Guaranteed lowest rate**

Questions pls call

**Thevan Kankesu**

Certified Mortgage Consultant

**Future Financial Inc.**

**Direct: 416.939.8789**

Office: 416.446.0077 ext. 224

PENS
CLOCKS
CALENDERS
MEMOS
MEASURING TAPES
CELL PHONE STANDS
FRIDGE MAGNETS
B. CARD HOLDERS
CORPORATE GIFTS
SEASONAL GIFTS
LASER ENGRAVING
PAD PRINTING
AND MORE................

# One Stop for

## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள் (PROMOTIONAL PRODUCTS) கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும் சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்





**PRO MAR**
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

**The Big choice**
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்

**IN WHOLESALE PRICE FOR RETAIL**

**80 Nasdane Rd Unit C-59 416-898 4846**

# பாவம் கடவுள் தூண்டிலில் போடாதீர்கள்

**குமார் புனிதவேல் பக்கம்**

ஆவணி மாதம் தொடங்கிவிட்டது. எல்லா வியாபார அமைப்புகளும் உற்சாகமாக நாட்காட்டி தயாரிக்க ஆரம்பித்துவிடுவார்கள். 2008ம் ஆண்டுக் கலண்டர்களுக்கு காலம் கணிப்பவர் கணிக்கத் துவங்கிவிடுவார். அச்சடிப்பவர்கள் இயந்திரத்திற்கு எண்ணைஊற்றி தயார்ப்படுத்துவார்.ஆனால் அதுபற்றி எழுத அல்ல இந்தக் கட்டுரை. இந்த நாட்காட்டியில் தொங்கும் தூண்டில்ப் புளுக்களைப் பற்றியதே இந்தக் கட்டுரை.

நாட்காட்டிகள், தமது வாடிக்கையாளரை தூண்டில் புளுவைப்போல கவரத் தரப்படுவது. ஒவ்வொருவர் வீட்டு வரவேற்பறையிலும் தமது விளம்பரத்தைப் போடக்கேட்டால் மறுத்துவிடுவோம். ஆனால் நாட்காட்டியை மிகமிக மகிழ்ச்சியாக மாட்டிவைப்போம். எனவேதான் வியாபார அமைப்புகள் மனமுவந்து நாட்காட்டிகளைத் தருகின்றன. இவற்றிற்கு கோவில்கள் விலக்கல்ல. பருப்பும், பாரைமீனும் விற்பதுபோல் பாவம் சில ஆலயங்கள் ஆண்டவனை சந்தைப்படுத்துகிறார்கள். இந்த நாட்காட்டிகளில் தூண்டில் புளுவாக மாட்டிவிடுவது கடவுளின் படங்கள்தான்.

எனது சொந்த அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். வேறு ஒரு நாட்டிலிருக்கும் ஒரு உறவினர் வருடாவருடம் அவர் சென்று வணங்கும் கோவில் நாட்காட்டி ஒன்று தருவது வழக்கம். அவர் வரும்போது கொண்டுவந்து தருவார். அல்லது நான் அங்கு செல்லும்போது தருவார். சில சமயங்களில் வேறு யாரிடமாவது கொடுத்து அனுப்புவது வழக்கம்.

காலப்போக்கில் என்னிடம் பழையபடங்கள் சேரத்தொடங்கியது. எனவே உறவினரை அழைத்து இனி நாட்காட்டிகளை அனுப்ப வேண்டாம். கனடாவில் போதிய அளவு பெறலாம் என்று கூறினேன். ஆனால் பருவ மழைபோல் அடுத்த தை மாதத்தில் நாட்காட்டி வந்துவிட்டது. உடனே அவருக்கு தொலைபேசியில் அழைத்து நன்றி கூறியதுடன் அடுத்தமுறை அனுப்ப வேண்டாம் என்றேன். அத்துடன் நின்றால் இன்னுமொரு படம் வரும் என்று தெரிந்தால் அந்த வருடம் அவர்வீட்டிற்கு பரிசில்களுடன் ஒரு பார்சலும் எடுத்துச் சென்றேன். நீங்கள் சந்தேகித்தது சரியே. பதினொரு படங்கள். அவர் முன்பு அனுப்பிய படங்கள் எறியமுடியாது மடித்து வைத்தவை. இதைக்கண்டு வியப்படைந்த உறவினர் ஏன் கொண்டு வந்தீர்கள் எனக்கேட்டார். எனக்கு எறிய மனமில்லை இதைத் தந்தவரிடமே திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்றேன். இதன் விளைவு அதற்குப்பின் எனக்கு நாட்காட்டிகள் வருவது நின்றுவிட்டது.

> “ **கோவிலுக்கு தமது பெயரும் போட்டு ஆயிரக்கணக்கில் விளம்பரமாகப் பிளாஸ்டிக்பைகளைக் கொடுப்பவர்கள் கோபுரங்களைக் குப்பையில் போடுவதற்கு காரணமாயிருப்பதால் அவர்களுக்கு எவ்வளவு பாவம்? இவர்கள் கங்கையில்குளித்தால் கங்கைக்கும் பாவம் தொத்திவிடும்.** ”

நாட்காட்டி ஒரு மிகப் பயனுள்ள பொருள். ஒவ்வொரு வீட்டிலும் இருப்பதவசியம். ஆனால் அது ஆண்டவனுக்கு விளம்பரமாவதைத்தான் தவிர்ப்பதவசியம். வீடுகளில் பூசை அறை எனவைத்து போற்றி வணங்க வேண்டிய இறைவன் மீன்வெட்டும் இடத்தையும் இறைச்சி அறுக்கும் இடத்தையும் மேற்பார்வை செய்வதுதான் வேதனையானது. விளம்பரத்திற்கு தூண்டில்ப் புளுவாக கடவுள்மாறும் கலாச்சாரத்தை நாம் அனைவரும் முயன்றால் கட்டாயம் மாற்றலாம்.

விளம்பரத்தில் இன்னுமொரு பரிணாம மாற்றம் சுவாமிப்படம்போட்டு விளம்பரங்கள் வெளிவருவது. ஒருமுறை நல்ல பனிக் காலம். அன்று சற்று அதிகமாகப் பனி கொட்டியிருந்தது. கடையில் ஈரமான பூட்ஸ் காலுடன் நடந்து வருவதை துவட்டி எடுக்க நிலத்தில் விற்பனையாளர் நாளிதழை (இங்கு இலவசமாகக் கிடைப்பது - வீடு உட்பட) நடைபாதையில் பரவியிருந்தார். அங்கு என்னைப் பார்த்து புன்னகைத்த பிள்ளையார் ‘பார்த்தாயா இந்தக் கோயிலுக்குக் குடியிருக்கப் போய் என்னைக் காலில்போட்டு மிதிக்கிறார்கள்” என்றார். இது தேவைதானா? வியாபாரம் எம்மவரின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. அது வளர இறைவனை வேண்டுகிறேன். ஆனால் அதற்காகா கடவுளைத் தூண்டிலில் மாட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கட்டாயம் அவர் அருள் கிடைக்கும்.

மேலும் கோவிலில் பிரசாதம் கொண்டு செல்ல கோபுரம் போட்ட பிளாஸ்டிக் பைக-ளைக் கொடுக்கிறார்கள். இதில் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது கோபுர தரிசனம் கோடி புண்ணியமானால் அதைக் குப்பையில் போடுவது கோடி பாவம் அல்லவா? கொஞ்சம் பிரசாதம் கொண்டுவரப் போய் கோடி பாவத்தை ஏன் சுமக்கவேண்டும். வீட்டிலிருந்து ஒரு பையை எடுத்துச் செல்லுங்கள். அது கூடிய நன்மை தரும். இது விடயத்தில் ஒரு பின் குறிப்பு: கோவிலுக்கு தமது பெயரும் போட்டு ஆயிரக்கணக்கில் விளம்பரமாகப் பைகளைக் கொடுப்பவர்கள் கோபுரங்களைக் குப்பையில் போடுவதற்கு காரணமாயிருப்பதால் அவர்களுக்கு எவ்வளவு பாவம்? இவர்கள் கங்கையில் குளித்தால் கங்கைக்கும் பாவம் தொற்றிவிடும். இத்தகைய கோபுரப்படம் போட்ட பைகளை கோவிலில் வைக்க அனுசரணையாயுள்ள அறங்காவற் சபையினருடைய பாவங்களை நான் இங்கு ஆராயவில்லை. காரணம் நான் சாதாரண குடிமகன். அவர்கள் அறத்தின் காவலர்கள்.

ஒரு பிளாஸ்டிக் பை இயற்கையாய் அழிவதற்கு ஆயிரம் வருடங்கள் செல்லும் என்பது ஆய்வாளர்கள் கருத்து. அப்படியானால் இப்பூமாதேவியின் மடியில் ஆயிரம் வருடங்களுக்கு தங்குவதற்கான குப்பை போட்ட உங்களை அவர் மன்னிக்க மாட்டார். எனவே பாவம் கடவுள் அவரைத் தூண்டிலில் போடாதீர்கள்.


■ ■ ■





## For All Your Real Estate Needs..

**Lucky Draw for New Car Will be on September 8,2007**

**Buy or Sell through us before August 31, 2007 and win a New Car****




- 2 Bedroom Condominium
- Great Location
- Well Maintained Building
- Steps to TTC & 1 Bus To Subway
- Lots Of Facilities In The Building...





- Beautifully Maintained Home
- 3 Bedroom Freehold Townhouse
- Red Maple Kitchen
- Excellent Neighbourhood
- Quality Built...





- Beautifull & Well Maintained House
- Hardwood On Main Floor
- Tastefully Decorated
- Lots Of Upgrades
- Call **Sasi** For Details....




**Sasi Chelvaratnam**
**Sales Representative**
**416.858.4828**




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....




- Less Than Three Years Old
- Beautiful Detached House
- 4 Bedrooms & 3 washrooms
- Appox 2300 Sq.Dt
- Family Rm W/Cathedral Ceiling




- Just Over 4 Years Old
- Detached House W/4Bedrooms
- Approx 2200 Sq.Ft
- Super Layout Home
- Best Value In Area...




- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9'Ceiling On Main Floor
- Primium Lot...

**HomeLife GTA Realty Inc., Brokerage***

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# மாதாந்த காப்புறுதிக் கட்டணம் $11.97 மட்டுமே FOR $100,000

30 வயதுடைய ஆணுக்கு
Rate based on non smoker
10 year term insurance

30 வயதுடைய பெண்ணுக்கு
$9.90
Rate based on non smoker
10 year term insurance

சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி • வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி • கொடிய நோய்களுக்கான காப்புறுதி • குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்

# உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு...

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி**
(Universal Life Insurance)

*உங்கள் ஆயுட்காலம் வரை இந்தக் காப்புறுதி நீடிக்கும். இதற்கான கட்டுப்பணம் எந்தக்காலத்திலும் அதிகரிக்காது. நீங்கள் விரும்பியபடி 10,15 அல்லது 20 வருடங்களுக்கு மட்டுமே பணம் செலுத்தவேண்டும். அதன்பின்பு விரும்பினால் நீங்கள் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்; அல்லது 75 வீதத்தை கடனாகப் பெறமுடியும்.*

**வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி**
(Non Medical Life Insurance)

*இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.*

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
(Critical Illness Insurance)

Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson *போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.*

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
(RESP)

*கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர்* Canada Learning Bond *அரசினால் வழங்கப்படுகின்றது.*

**கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்**

Unity Life of Canada
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance



# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

digi Media Creations

**இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு**

# ஆயுட் காப்புறுதியும் நிதித் திட்டமிடலும்

# Life Insurance & Financial Planing



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆயுட் காப்புறுதி என்பது ஒருவரின் எதிர்பாராத உயிர்இழப்பால் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடு செய்வதற்கு மட்டும் பயன்படும் ஒரு திட்டம் என்று நினைக்கக்கூடும். மாறாக ஆயுட் காப்புறுதித் திட்டங்களை மிகவும் சிறந்த நிதித்திட்டமிடல் திட்டங்களாக உபயோகிக்க முடியும்.

கடந்தகால ஆய்வுகளின்படி மக்கள் தங்கள் வாழ்நாளில் 5 தொடக்கம் 7 தடவைகள் ஆயுட்காப்புறுதித் திட்டங்களை மாற்றம் செய்திருக்கின்றனர். அல்லது புதிதாக வாங்கியுள்ளனர். அதாவது வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றங்களின் போதும் ஆயுட் காப்புறுதித் திட்டங்களைப் பரிசீலனை செய்ய வேண்டும். பல காரணங்களுக்காக மக்கள் ஆயுட்காப்புறுதித் திட்டங்களை அடிக்கடி மாற்றம் செய்கிறார்கள். ஒவ்வொரு காப்புறுதி முகவர்களும் மாறுபட்ட விளக்கங்களையும் கருத்துக்களையும் தெரிவிப்பதால் மக்கள் அடிக்கடி காப்புறுதித் திட்டங்களை மாற்ற நேரிடுகின்றது.

சரியான நிதித்திட்டமிடலும் ஆயுட்காப்புறுதித் திட்டங்கள் பற்றிய சரியான தகவல்களும் தெரிந்திருந்தால் அடிக்கடி காப்புறுதித் திட்டங்களை மாற்றுவதால் ஏற்படும் பணவிரயத்தைத் தடுக்கலாம்.

## வாழ்வில் ஏற்படும் முக்கிய திருப்பங்கள்.

1. தனிநபர் ஒருவர் முதன் முதலாக ஒரு வேலை பெற்றுக்கொள்வது.
2. திருமணமாகித் தம்பதிகளாக வாழ்வை ஆரம்பித்தல்.
3. முதல்தடவையாக வீடு வாங்குதல் அல்லது வியாபாரம் ஆரம்பித்தல்.
4. முதல்க் குழந்தை பெற்றுக்கொள்வது.
5. எதிர்பாராதவிதமாக நோய்வாய்ப்படல் அல்லது வேலை செய்ய முடியாத நிலைக்கு உட்படுதல்.
6. ஓய்வூதியத் திட்டமிடல்
7. சொத்துக்களை அன்புக்குரியவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தல் அல்லது உயில் எழுதுவது.

எனவே ஒவ்வொருவரும் வாழ்வில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்தின்போதும் ஆயுட்காப்புறுதி நிதித்திட்டமிடல் போன்றவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டும். உதாரணமாக தனிநபர் ஒருவர் திருமணமாவதற்கு முன்பு அவரில் ஒருவரும் தங்கியராதபடியால் மிகக்குறைந்த தொகைக்கு மட்டுமே காப்புறுதி செய்வார்கள் பின்பு திருமணமானவுடன் அல்லது வீடு வாங்கியபின்பு அல்லது குழந்தை கிடைத்தபின்பு காப்புறுதித் தொகை அதிகரிக்கவேண்டும். காரணம் அவரின் இழப்பு இருவரைப் பாதிக்கும்.

ஒரு வியாபார நிறுவனத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர் அந்த வியாபார நிறுவனத்தின் பெறுமதிக்கு ஏற்றவாறு காப்புறுதித் தொகையை அதிகரித்துக் கொள்ளவேண்டும். காரணம் அவரின் இழப்பால் அந்த வியாபார நிறுவனம் பாதிக்கப்படும். ஒரு வெற்றிகரமான நிதித்திட்டமிடலின்போது ஒருவரின் குறுகியகால இலக்குகளும் நீண்டகால இலக்குகளும் கருத்தில்க் கொள்ள வேண்டும்.

எனவே ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒருவரின் தற்போதய தேவைகளுக்கும் அவரின் நீண்டகாலத் தேவைகளுக்கும் ஏற்ப திட்டமிடப்படவேண்டும். உதாரணமாக ஒருவர் மிகக்குறைந்த செலவில் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள விரும்புவார். அதனால் அவரின் குறுகியகாலத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்ய முடியும். அல்லது காலம் சென்றபின் காப்புறுதித் தொகைக்கான மாதாந்தக் கட்டுப் பணம் அதிகரிக்கும்.

எனவே ஒவ்வொருவருக்கும் ஆயுட்காப்புறுதியின் அளவு காலத்துக்கு ஏற்ப அவரின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும். சாதாரணமாக ஒருவருக்கு எவ்வளவு தொகைப் பணம் ஆயுட்காப்புறுதியாகத் தேவைப்படும் என்று கேட்டால் அவருடைய வருட வருமானத்தின் 5 மடங்கு அல்லது 7 மடங்கு இருக்கவேண்டும் என்று மிகவும் எளிதாகச் சொல்வார்கள். ஆனால் சரியாக ஒருவரின் ஆயுட் காப்புறுதித் தொகையைக் கணிப்பிடுவதற்குச் சரியான நிதித்திட்டமிடல் ஆய்வு செய்தபின்புதான் கணிக்க வேண்டும். எனவே ஒவ்வொருவரின் நிதிநிலமைகளும் காலத்துக்குக் காலம் மாறுபடுவதால் காலத்துக்குக் காலம் உங்கள் காப்புறுதித் திட்டத்தை மறுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.

## ஆயுட் காப்புறுதி மூலம் எப்படி ஒருவர் தனது சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும் அல்லது உங்கள் நிதிநிலையை வளமாக்க முடியும்.

ஒருவர் தனது வாழ்நாளில் ஒரு மில்லியன் டொலர்களைச் சேர்த்து தனது குடும்பத்திற்கு பணமாகக் கொடுப்பது இலகுவானதல்ல. ஆனால் ஒரு மில்லியன் டொலர் தொகையை ஆயுட்காப்புறுதியாக பெற்றுக் கொண்டால் அதற்கான மாதாந்தக் கட்டணம் செலுத்துவது இலகுவானது. அப்படி ஒருவர் ஒரு மில்லியன் டொலருக்கு ஆயுட் காப்புறுதி செய்தால் அவர் இறந்தவுடன் அவரது குடும்பத்தினர் மில்லியனராக மாறுகின்றனர்.

வாழ்க்கையில் ஒருதடவையாவது மில்லியனர் ஆகவேண்டும் என்று பலர் ஆசைப் படுவதுண்டு.எனவே ஒரு மில்லியன் டொலர் தொகையை ஆயுட்காப்புறுதி செய்வதன் மூலம் ஒருவர் தான் ஒரு மில்லியனராக வர முடியாவிட்டாலும் தனது குடும்பத்தை ஒரு மில்லியனர் குடும்பமாக மாற்றமுடியும். அதன்பின் அந்தக் குடும்பத்தினர் சரியான நிதித்திட்டமிடல் மூலம் அந்தப்பணத்தை சரியான வழிகளில் முதலிட்டால் அவர்கள் தொடர்ந்து “மில்லியனர்” குடும்பமாக வாழ முடியும். கனடாவில் வாழும் வேறு இனத்தவர்கள் பலர் இப்படிப் பெருந்தொகைப் பணத்தை ஆயுட்காப்புறுதி செய்வதன் மூலம் அவர்களது குடும்பத்தினரை செல்வந்தர்களாக மாற்றியுள்ளனர்.

எமது வாழ்வு எப்போதும் நாம் நினைப்பது போல் நிறைவேறுவதில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்க்கைக்கு ஒரு மாற்றுத் திட்டம் வைத்திருப்பது அவசியம். அதாவது நாங்கள் திட்டமிட்டபடி எமது வாழ்வை நிறைவேற்றமுடியாத கட்டத்தில் எப்போதும் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒரு மாற்றுத் திட்டமாகச் செயற்பட்டு எமது ஆசையை நிறைவேற்றும்.

■ ■ ■


# வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்...

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட் காப்புறுதி**

(Universal Life Insurance)

- இத்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்கும்
- மாதாந்தக் கட்டணம் எப்போதும் அதிகரிக்காது
- 10, 15 அல்லது 20 வருடங்கள் மட்டுமே பணம் செலுத்த வேண்டும்
- அதன் பின்பு கட்டிய பணத்தை மீளப் பெற முடியும்

**வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி**

உங்கள் வயதான பெற்றோருக்கு வைத்திய பரிசோதனை இன்றி காப்புறுதி செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிகப் பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம் (RESP)**

கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.

காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் தகுந்த விளக்கத்துடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.





சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர் (Licensed Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada

digi Media Creations

•கொடிய நோய்களுக்கான காப்புறுதி • ஈட்டுக்கடன் காப்புறுதி • வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி • RRSP • RESP

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RRSP SPECIAL!**
இம்மாதம் RRSP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

**Life Insurance**
**Critical Illness Insurance**



**Disability Insurance**
**Mortgage Insurance**

RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200





# A -Z SOLUTIONS

TO EVERY HUMAN PROBLEM, THERE IS ONLY ONE EASY SOLUTION

416-431-0707

416-431-0707

A-Z அனைத்துக்கும் தீர்வு

மனிதனின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இலகுவான ஒரு தீர்வே உண்டு
ஒரு குடையின் கீழ் உங்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டுகின்றது.

"எனது பெற்றோருக்கு வழங்கப்படாதிருந்த பென்சன் உதவித்தொகை 22,000ஐ இரண்டு வாரங்களில் பெற்றுத்தந்தனர்" . . பிரபல வைத்தியர்

REAL ESTATE
கட்டிடச் சொத்துக்கள்
- Buying or selling
- Mortgage arrangement
- Free consultation
- Free market evaluation

நீங்கள் 59 வயதைத் தாண்டிவிட்டீர்களா! பென்சனுக்குத் தகுதியாகலாம்.
வீட்டிலிருங்கள் பென்சன் தேடிவரும்

நீங்கள் 65வயதிற்குக் குறைந்தவரா? CPP Disability பென்சனுக்குத் தகுதியாகலாம்

15 வருட அனுபவம்
அழையுங்கள்
ஜெயா 416-431-0707

*INSURANCE
(காப்புறுதி)
- Life Insurance
- Wills and Estate
- RESP
- Mortgage protection

நீங்கள் கடனில் மூழ்கிவிட்டீர்களா?
மீளுவதற்கான வழிகள் எம்மிடம் உண்டு

பல நூற்றுக்கணக்கான வங்குரோத்து நிலைமைகள் (Bankruptcies) கையாண்ட அனுபவம் ~ அழையுங்கள்
பிரபு பொன்னம்பலம்



416-431-0707

# TRY OUR NEW PHILINOS PIZZA



**PHILLY STEAK & CHEDDAR CHEESE**

digi Media Creations - 416-467-4952

## REGINOS PIZZA

**Morningside & 401**, 790 Military Trail, Scarborough, 416.284.3003
**Finch & Pharmacy**, 2535 Pharmacy Ave. , Scarborough, 416.495.1222
**Brimley & Finch**, 135 Montezuma Trail, Scarborough, 416.321.5444
**Yonge & Clark**, 126 Clark Ave. E, Thornhill, 905.709.8004

**Danforth & Pharmacy**, 3331 Danforth Ave., Toronto, 416.694.0888
**Hwy 48 & 16th**, 10 Fincham Ave., Unit 104, Markham, 905.472.6002
**Hurontario & Dundas**, 2555 Hurontario St., Mississauga, 905.804.0666
**Brookland & Yonge**, 14810 Yonge St., Unit 7, Aurora, 905.841.7002

REGINOS PIZZA

**www.reginospizza.com**

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approval, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின்
ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி
சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborough, ON

BUY AND SELL HOMES AND BUSINESS
HIRING NEW / EXP REAL ESTATE
AGENT JOIN THE
WINNING TEAM AND BECOME
TOP PRODUCERS
50 ACRE INVESTMENT
4bm/3wm
RICHMOND HILL
CONVENIENCE
STORE
AVAILABLE
FOR SALE FRM
29000/-
Century 21
Brokerage
Professional Choice REALTY INC.
200 Consumers Rd TORONTO, ONT.
*EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY
PAT PUSHPAKANTHAN
Broker of Record/Owner
OFF: 416 493 2100
Dir: 416 894 1187
Or 416 490 SOLD
0 dwn mortgage avail.
TOP PRODUCER 5 YEARS
TOTAL COMMISSION SOLUTION 2.5%**
EXPERIENCE!
*Based on your yearly sales

# உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா?

**அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.



புகைப்படம்: கருணா



• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com